விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

தரம் - 5
புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 02 புதன்கிழமை (15.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 086

## 2019 வரை கால அவகாசம்

# இணை அனுசரணைக்கு இலங்கை இணக்கம்

### திருத்தங்களுடன் வாக்கெடுப்பு 23-ம் திகதி

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜெனிவா ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை முற்றாக நடைமுறைப்படுத்துவதற்கு, இரு வருடகால அவகாசம் கோரும் தற்போதைய பிரேரணைக்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கத் தீர்மானித்துள்ளது. (04-ம் பக்கம்...)

புருசோத்தமன் எழுதும் தமிழரின் தலைவிதி எப்படியாகும்? கட்டுரை உள்ளே...

### சட்டவிரோத மீன்பிடி
## 13 மீனவர்கள் நேற்றுக் கைது

(மல்லாவி)

மன்னார் கடல் பிராந்தியத்தில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 13 உள்ளூர் மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து மன்னார் மாவட்ட மீன்பிடித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது. 24ஆம் பக்கம் பார்க்க....

## அழகு நிலையத்துக்குள் புகுந்து மனைவியை வெட்டிய கணவன்
### யாழ்.திருநெல்வேலியில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலிப் பகுதியில் உள்ள அழகு நிலையத்துக்குள் புகுந்து மனைவி மீது கணவன் கோடாரியால் தாறுமாறாக வெட்டிய சம்பவம் அப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றைய தினம் காலை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் சுயநினைவிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சை 04ஆம் பக்கம் பார்க்க....

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு 3வாரத்தில் தீர்வு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள அரச வேலையற்ற பட்டதாரிகளுக்குரிய தீர்வினை எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் வழங்குவதாக வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே உறுதியளித்துள்ளதனை 23ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச பொறிமுறை பிரேரணையை கிழித்து எறிந்தார் தவநாதன்
### பின்பு ஆதரவும் தெரிவித்தார்



23ஆம் பக்கம் பார்க்க....

## காதல் ஜோடி விபத்தில் பலி

(கொழும்பு)

திருமணம் செய்வதற்கு சில நாட்களே இருந்த நிலையில், இளம் காதல் ஜோடி ஒன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

மீகாஹதென்ன - நெலுஹேன 6 தூண் பிரதேசத்தில், ஹோரவல 23ஆம் பக்கம் பார்க்க....

### சித்திரவதையில் இளைஞன் பலி!
## 7 பொலிஸார் கைதான வழக்கில் சாட்சியப் பதிவு நேற்றும் இன்றும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பின்பு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட சுமன் என்பவர் தேக ஆரோக்கியத்துடனேயே பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் வெளியில் அழைத்து செல்லப்பட்டார் என அன்றைய தினம் கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள் நேற்றைய தினம் மன்றில் சாட்சியமளித்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர் விசாரணையின் போது பொலிஸாரால் கொலை செய்யப்பட்ட வழக்குடன் தொடர்புடைய அரச சாட்சி 04ஆம் பக்கம் பார்க்க....

## கேப்பாப்பிலவு போராட்டம்; இராணுவம் வழக்கு தாக்கல்

(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு பூர்விக கிராமத்தில் கடந்த 14 நாளாக இடம்பெறும் போராட்டத்தை குழப்ப முயற்சித்து வரும் இராணுவத்தினர் தமது அமைதிக்கு இடையூறு என கூறி பொலிஸாரையும் இணைத்துக் கொண்டு வழக்கு பதிவு செய்துள்ளதாக பாரளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு இராணுவ படைத் தலைமையகம் முன்பாக கேப்பாப்பிலவு மக்கள் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்ககோரி கடந்த முதலாம் திகதி தொடக்கம் நேற்று வரை 14வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேற்று மாலை வன்னி 23ஆம் பக்கம் பார்க்க....

அசைவ உணவுப் பிரியர்களுக்கு ஒரு நற்செய்தி

அமுல் - சைவ உணவகத்தின் இன்னுமொரு கிளை நிறுவனமாக அமுல் - அசைவ உணவகம் உங்களுக்காக!

15.03.2017 இன்று புதன்கிழமை 279, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாண இலங்கை வங்கி மேற்தரக் கிளை பிரதம முகாமையாளர் திருமதி S.பிரபாகரன் அவர்களினால் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வுக்கு அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று நிற்கின்றோம்.

(831) ::நன்றி:: - அமுல் நிறுவனத்தினர்

### ஜெனிவா - 2015 தீர்மானம் அமுலாக்கப்படாத நிலையில்
## சர்வதேச பொறிமுறை அவசியம்
### வடக்கு சபையில் நேற்று பிரேரணை நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் கடந்த 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு அமுல்படுத்த விரும்பாத நிலையில் சர்வதேச விசாரணை பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த கோரும் பிரேரணை ஒன்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு இணைந்த பூரணமான சுயாட்சியும் புதிய அரசியலமைப்பில் வழங்கப்பட வேண்டும் எனவும் அந்த தீர்மானம் மேலும் கோரியுள்ளது.

உறுப்பினர் சிவாஜிலிங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை தொடர்பில் ஆராயும் சிறப்பு அமர்வொன்று நேற்றைய தினம் அவை 23ஆம் பக்கம் பார்க்க....

# 3 விபத்துக்களில் 6 பேர் படுகாயம்

(கரணவாய்)

நெல்லியடி நகர்ப் பகுதியில் மூன்று மணித்தியால இடைவெளிக்குள் நடந்த மூன்று விபத்து சம்பவத்தில் படுகாயமடைந்த ஆறு பேர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 9 மணிக்கும் 11.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம் பெற்ற இவ்விபத்துக்களில் நீர்வேலியைச் சேர்ந்த சோ. நடராசா (வயது-68) என்பவர் 9 மணிக்கு இடம்பெற்ற விபத்திலும் புலோலியைச் சேர்ந்த பு. சுமன்ராஜ் (வயது-21), கரவெட்டியைச் சேர்ந்த அ. செல்வ நாயகம் (வயது-44) ஆகிய இருவரும் 10 மணிக்கு இடம்பெற்ற விபத்திலும் பொலிகண்டியைச் சேர்ந்தவர்களான இ. சங்கீதா (வயது-35), அ. விசித்திரா (வயது-22) மற்றும் கொருடாவிலைச் சேர்ந்த பா. முத்துசாமி குணநாத குருக்கள் (வயது -44) ஆகிய மூவரும் 11.30 மணிக்கும் இடம்பெற்ற விபத்துக்களில் படுகாயமடைந்தனர்.

இவ்விபத்துக்கள் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (செ-60)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-7807)

(யாழ்ப்பாணம்)

இலங்கையை சர்வதேசத்திடம் காட்டிக்கொடுக்கும் வடக்கு மாகாண சபையின் ஆளுங் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஒரு இனவாதி என வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சி உறுப்பினர் தர்மபால செனவிரத்ன சாடியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித வுரிமை பேரவையில் கடந்த 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு அமுல் படுத்த விரும்பாத நிலையில் சர்வதேச பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த கோரும் உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் பிரேரணையை ஆராயும் விசேட அமர்வு ஒன்று நேற்றைய தினம் நடைபெற்றது. இதன் போதே

# சிவாஜி ஒரு இனவாதி

## உறுப்பினர் தர்மபால சாடல்

தர்மபால செனவிரத்ன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த பிரேரணை இலங்கை அரசாங்கத்தை சர்வதேசத்திடம் காட்டிக்கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இன நல்லிணக்கம், மக்களிடையே உள்ள புரிந்துணர்வை சீரழிக்கும் செயற்பாடாகும். இவ்வாறு ஒரு இனவாதியாக சிவாஜிலிங்கம் செயற்படுகின்றார் என எதிர்க்கட்சி உறுப்பினர் தர்மபால குற்றம் சாட்டினார்.

எனினும் இதற்கு பதிலளித்து பேசிய வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சிவாஜிலிங்கம், தான் இனவாதத்துடன் செயற்படவில்லை எனவும், தமிழ் மக்களுக்கு நடைபெற்ற அநீதிகளுக்கு நீதி வழங்குமாறே நாம் கோருகின்றோம் என அவர் பதிலளித்தார்.

இதேவேளை குறித்த பிரேரணைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் தர்மபால எதிர்ப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

முதலாம் ஆண்டு
நினைவஞ்சலி



புவியின் மடியில் 26 - 05 - 1991
ரயிலின் பிடியில் 26 - 03 - 2016

அமரர் துரைசிங்கம் ஐங்கரன்
(திதி:திருதியை 15.03.2017)

அகிலமே போற்றினும்
ஆண்டவன் ஆசிர்வதிப்பினும்
இமாலய சாதனை படைப்பினும்
விதியை வெல்ல யாரால் அப்பா முடியும்
நித்திய பெருவாழ்வில்
புகுந்து எமை வழிகாட்டி
ஒளியூட்ட இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

கொட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(8318)
அன்பான அப்பா, அம்மா, சகோதர சகோதரி, உறவினர், நண்பர்கள்

5 ஆம் நாளில்...
அஞ்சலி செய்கின்றாள் நல்லை மங்கையர்க்கரசி



(C-7814)

அமரர் திருவாட்டி
சத்தியலட்சுமி காங்கேயன்
(முன்னாள் அதிபர் - யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

எமது வித்தியாலயத்தில் 1991இலிருந்து 1994 வரை அதிபராகக் கடமையாற்றி, வித்தியாலயத்தின் கல்வியிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் அபிவிருத்திகளை மேற்கொண்டதுடன் ஆசிரியர்களையும் பாடசாலை மாணவர்களையும் ஒன்றிணைத்து மாபெரும் கலைவிழா ஒன்றை நிதி உதவிக் காட்சியாக நடாத்தி, அக் காலத்திலேயே மிகப் பெரிய தொகை ஒன்றைச் சேகரித்து, பழைய மாணவர் சங்க வைப்பிலிட்டு, இன்று வரை ஆசிரியர் தினம், விளையாட்டுப் போட்டி, புலமைப் பரிசில் சித்தியாளர்களுக்கான அனுசரணையை வழங்க வழிகோலிய எமது முன்னாள் அதிபரின் அமரத்துவத்தை அறிந்து துயருறுவதுடன் அவரது ஆத்மா நல்லைக் கந்தனின் அடிசேர அஞ்சலி செய்கின்றோம்.

2017.03.15 யாழ்.நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

Architectural CAD Centre[Jaffna-Vavuniya-Colombo]
[Personal-Group-Visiting Classes]
2D-Drawing 3D-Modeling
Auto CAD
Lecturer By:Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD(2D-Drawing&3D-Modeling)
University of Peratheniya.
Cert.in Auto CAD(Advance 3D-Modeling)
University of Moratuwa.
Cert.in Auto CAD(2D-Drawing&3D-Modeling)
Open University of Sri Lanka.
Cert.in Auto CAD(2D-&3D)(1stClass)
University of Colombo. (C-7815)
Link:
077-5116320
071-8617972
[Civil & Mechanical]

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
காங்கேசன்துறை வீதி. சுன்னாகம்.
பதிவு இலக்கம்:- J/1557 பதிவு திகதி:12.03.1971
T.P:0213212380

கீழ்க் குறிப்பிடப்படும் நிரந்தரப் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கணக்காளர்: குறி.இல 104/09
சம்பள அளவுத் திட்டம் - 15660 - 19560 (13/2015 சு.நி.இன்படி)
190X10-200X10

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 10வது சம்பளத்திட்ட கணக்காளர் அல்லது உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத் திட்ட உள்ளக கணக்காய்வாளர் அல்லது கணக்குப் பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திர சித்தி அல்லது கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டு கால அனுபவம் அல்லது க.பொ.த (உ/த) பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

வயது: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது.

சங்கப் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விபரங்களையும் சங்கத் தலைமை அலுவலகத்தில் வேலை நாட்களில் (காலை 09.00 - மாலை 04.30) ரூபா 10/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். T.P.No - 021 321 2380

விண்ணப்ப முடிவுத் திகதி :- 30.03.2017

14.03.2017

சி. குமரவேல்
தலைவர்
சுன்னாகம் ப.நோ. கூட்டுறவுச் சங்கம்

(C-7810)

31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 10 - 08 - 1948
உதிர்வு 13 - 02 - 2017

அமரர் திருமதி
குமாரசாமி புஸ்பமலர்

சிந்தையிலே இனித்திருக்கும்
சிரித்த முகமெங்கே
சொந்தமொரு பந்தமென்று
சேரும் உறவெங்கே
வாழ நிற்கிறோமே - நாம்
சடுதியாய் எம் சிகரம் சரிந்ததேனோ
மீண்டும் மறுபிறப்பெடுத்து வந்திடம்மா
எம்மிடத்தில் அன்புத் தாயே!

கடந்த 2017.02.13 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி குமாரசாமி புஸ்பமலர் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (2017.03.15) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாப்பாணவூரி வலந்தலை,
காரைநகர்.
(8310)
- குடும்பத்தினர்



# பிரபாகரன் கடவுள் நாங்கள் கள்வர்

## கோத்தபாய புலம்பல்



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கடவுளாக் கப்பட்டுள்ளார், நாங்கள் கள்வர்களாக் கப்பட்டுளோம் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

சமூக ஊடக வலையமைப்புக்கள் ஊடாக பிரபாகரன் தெய்வமாக்கப்பட்டுள்ளார். பிரபாகரனுக்கு எதிராக குரல் கொடுக்கும் எவரும் சமூக ஊடக வலையமைப்புக்களில் கிடையாது. ஆனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், படையினரையும் என்னையும் கள்வர்கள், கொலைகாரர்களாக சித்திரித்து சமூக ஊடகங்களில் பிரசாரம் செய்யப்படுகின்றது.

சிங்கள இனம் இரண்டாக பிளவடைந்து வாதம் செய்வது வருத்தமளிக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். போர்க்குற்றச் செயல்கள் தொடர்பிலான பொறுப்புக்களை அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், அந்த சந்தர்ப்பத்தை உரிய முறையில் அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அன்று யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் இன்று மனித உரிமைகளில் சம்பியன்களாக மாறியுள்ளனர். பாதுகாப்பு அமைச்சரது பொறுப்பு தனது நாடு தவறிழைக்கவில்லை என காட்டுவதே தவிர, தவறு என்று உலகத்திற்கு கூறுவது அல்ல எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## எட்காவின் 4ம் கட்ட பேச்சுவார்த்தைகள் இம்மாத இறுதியில்

இந்திய மற்றும் இலங்கைக்கு இடையிலான எட்கா உடன்படிக்கை குறித்த நான்காம் கட்ட பேச்சுவார்த்தை இம்மாத இறுதியில் டில்லியில் நடைபெறும் என்று அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தகத் துறை அமைச்சின் தகவல்கள் ஊடாக அறிய முடிகின்றது. எனினும் இதற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையான எட்கா குறித்து ஏற்கனவே மூன்று தடவைகள் இந்திய மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நான்காம் கட்ட பேச்சுவார்த்தைக்கான திகதியை ஒதுக்குமாறு இந்தியாவிடம் இலங்கை கோரியுள்ளதாகவும், எனினும் அதற்கு இந்தியத் தரப்பிலிருந்து இன்னும் பதில் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் பெரும்பாலும் இந்த மாத இறுதியில் குறித்த பேச்சுவார்த்தையை நடத்த உத்தேசித்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

## புதிய விடயங்கள் எதுவும் ஐ.நா. அறிக்கையிலில்லை

### ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராத் அல் ஹுசைனின் அறிக்கையில் மேலதிகமான அல்லது புதிய விடயங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் உள்ளடக்கங்களை நிறைவேற்றுவதற்கு மேலும் இரண்டு வருட அவகாசத்தை இலங்கை பெற்றுக் கொள்ளும் எனவும் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.



2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், பேரவையின் கோரிக்கைக்கு அமைய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பான விவகாரம் குறித்து நாட்டிற்கு வெளியே இவ்வாறான விசாரணை மேற்கொள்ளப்பட்டமை இதுவே முதல் தடவை எனவும் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் சட்டவாட்சி, நல்லிணக்கம் மற்றும் நல்லாட்சி தொடர்பான செயலற்றதன்மை காரணமாக இலங்கைக்கு எதிராக சர்வதேச நடவடிக்கை எடுக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருந்ததாக அவர் கூறியுள்ளார்.

எனினும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதிக்கு பின்னர் அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கம், நல்லிணக்கம், சட்டவாட்சி, பொறுப்புகூறல், மனித உரிமைகள் மற்றும் நிர்வாக விடயங்களில் நடவடிக்கைகளை மேற்கொண்டதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## தொழில் அதிகாரிக்கு 10 ஆண்டுகள் சிறை!

25 ஆயிரம் ரூபாயை இலஞ்சம் வாங்கினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்த அநுராதபுரம் தொழில் திணைக்களத்தின் மாவட்ட அதிகாரியைக் குற்றவாளியாக இனங்கண்ட, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க, அவருக்கு 10 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

பேக்கரி உரிமையாளரிடம் இலஞ்சம் வாங்கியமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுகள் இவருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்தன. அந்த நான்கு குற்றச்சாட்டுகளிலும் அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார். சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக, 35 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டது.

ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு நிதியை வைப்பிலிடாமை சம்பந்தமாக, சட்ட ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளாமல் இருப்பதாகவே, பேக்கரி உரிமையாளரிடம் அவர் 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21ஆம் திகதியன்று இலஞ்சம் வாங்கியதாக, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. (இ-3)

## வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் பதிவுகளை உறுதிப்படுத்த வேண்டும்

### யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

2012.03.30 ஆம் திகதிக்கு முன்பதாக பட்டங்கள் பெற்று வெளியேறிய பட்டதாரிகளுக்கான நியமனங்கள் அரசினால் வழங்கப்பட்ட நிலையில், அத்திகதியின் பின்பதாக அன்று முதல் பட்டங்கள் பெற்று வேலையற்று இருக்கும் பட்டதாரிகள் தமது விபரங்களை மாவட்டச் செயலகத்தில் ஏற்கனவே பதிவு செய்துள்ளனர். இப்பதிவுகளை மேற்கொண்டவர்களில் தற்போது வேலையற்றிருக்கும் பட்டதாரிகளின் விபரங்களை உறுதிப்படுத்த வேண்டிய தேவை இருப்பதனால் மாவட்டச் செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்ட வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் எதிர்வரும் 22.03.2017 இற்கு முன்பதாக செயலக தாபனக்கிளைக்கு வருகை தந்து தமது பதிவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.தேவநாயகன் அறிவித்துள்ளார். (இ

## ஐந்து அரச நிறுவனங்களை அழைக்க கோப் குழு முடிவு

பொது தொழில் முயற்சிகள் பற்றிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவானது (கோப்), அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட 5 அரச நிறுவனங்களை அழைப்பதற்கு தீர்மானித்துள்ளது. இதேவேளை, ஹெஜிங் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கோப் குழுவானது, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் அறிக்கையொன்றைக் கோரியுள்ளது.

அந்த அறிக்கையை இரண்டு மாத காலத்துக்குள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

ஹெஜிங் ஒப்பந்தத்தை செய்துகொள்வதற்கான காரணங்கள், அங்கு இணக்கம் காணப்பட்ட விடயங்கள் உள்ளிட்ட விபரங்கள் அவ்வறிக்கையின் ஊடாகக் கோரப்பட்டுள்ளதாக கோப் குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம், தொழிற்பயிற்சி நிறுவனம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகியவற்றின் தலைவர்களை கோப் குழுவானது கடந்தவாரம் அழைத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-3)

# அரசாங்கமே தன்னை கெட்டவன் என்றாலும் இல்லை நீங்கள் நல்லவர்கள் என எம்மவர்கள்

## வடக்கு சபையில் உறுப்பினர் சர்வேஸ்வரன் சாடல்



இலங்கை அரசு காணாமல் போனோர் விடயம் உள்ளிட்ட பல விடயங்களில் அணுவளவு கூட முன்னேற்றம் காணாத நிலையில் இலங்கை அரசை ஐ.நா வில் ஏன் காப்பாற்ற முயற்சிக்கின்றீர்கள் என வடக்கு மாகாண சபையில் கேள்வியெழுப்பியுள்ள உறுப்பினர் க. சர்வேஸ்வரன், இலங்கை அரசு தன்னை தானே (கெட்டவன்) என்று சொன்னாலும் எம்மவர்கள் இல்லை, நீங்கள் நல்லவர்கள் தான் என சொல்லும் நிலையே தற்போது காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையில் கடந்த 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு அமுல்ப்படுத்த விரும்பாத நிலையில் சர்வதேச பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த கோரும் உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் பிரேரணை தொடர்பில் ஆராயும் சிறப்பு அமர்வொன்று நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இந்த பிரேரணை தொடர்பில் திருத்தங்கள் மேற்கொள்ளும் விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த பிரேரணை இலங்கைக்கு கால அவகாசம் வழங்க வேண்டும் என்பதை அடிப்படையாக கொண்டே கொண்டுவரப்பட்டது. எனினும் இலங்கை அரசாங்கம் தான் கூறியவற்றில் எதனையும் செய்யவில்லை. கடந்த கால அரசாங்கம் போன்றே காணாமல் போனார் வெளிநாடு சென்று இருக்கலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

ஆனால் இன்று கொண்டுவரப்பட்ட பிரேரணையை வலுவிழக்கும் வகையில் அதில் உள்ள சொற்களில் மாற்றம் செய்ய பார்க்கின்றீர்கள். இவ்வாறு வார்த்தை ஞாலங்களால் அரசை காப்பாற்ற முயல்வது எதற்காக? சட்ட நுணுக்கங்களையும் தமது புலமைகளையும் மக்களுக்காக பயன்படுத்துங்கள் மாறாக மக்களுக்கு எதிரானவர்களை காப்பாற்ற முயற்சிக்காதீர்கள். ஐ.நா விற்கு வாக்களித்த எதனையும் இலங்கை அரசு இதுவரை செய்யவில்லை. இனியும் இந்த ஏமாற்றத்தை தான் நாங்கள் காண போகின்றோம்.

இலங்கை அரசு தன்னை கெட்டவன் என்று சொன்னாலும், இல்லை நீங்கள் நல்லவர்கள் என எம்மவர்களே சொல்லும் நிலை தான் இப்போது உள்ளது. இலங்கை அரசு உத்தியோக பூர்வமாக சர்வதேச நீதிபதிகளை நிராகரிக்கவில்லை என கூறுபவர்களுக்கு. யுத்த குற்ற விசாரணை ஒன்றை நடாத்த வேண்டுமாயின் இலங்கையின் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும். ஆனால் அந்த ஆரம்ப நடவடிக்கை கூட இன்னும் செய்யப்படவில்லை.

இது இவர்களுக்கு தெரியவில்லையா? ஐக்கிய நாடுகள் சபைக்கு ஏற்றவாறு எமது கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என விரும்பவர்கள். தங்களுடைய மக்களுடைய கோரிக்கைகளையும் விருப்பங்களையும் ஐ.நா வில் பிரதிபலிக்க முயல வேண்டும். இந்த பிரேரணையை வலுவிழக்க செய்யும் முயற்சிகளில் ஈடுபடுவதனை தவிர்க்குமாறும் சர்வேஸ்வரன் தெரிவித்தார். எனினும் இங்குள்ள உறுப்பினர்கள் எவரும் அவ்வாறு செய்யவில்லை எனவும், ஐ.நா சபை எமது கோரிக்கைகள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்ற வகையிலேயே பிரேரணை மாற்றம் செய்யப்பட்டது என அவைத்தலைவர் சிவஞானம் அறிவிப்புச்செய்திருந்தார். (செ-4)

### அழகு நிலையத்துக்குள் ...

க்காக அனுராதபுரம் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு 03 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த செந்தூரன் ஜெயவதனி (41 வயது) என்பவரே இக் கோடாரி வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தவராவார்

மேற்குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில்

குறித்த பெண் திருநெல்வேலி சந்தியில் அழகு நிலையம் ஒன்றை நடாத்தி வருகிறார். நேற்றைய தினம் குறித்த பெண் அழகு நிலையத்தை பூட்டிவிட்டு உள்ளே நின்ற போது திடிரென கதவை கோடரியால் கொத்தி உட்புகுந்த அவரது கணவன் குறித்த பெண்ணை தாறுமாறாக கோடரியால் கொத்தியுள்ளார்.

இதில் தலைப்பகுதியில் பாரிய காயம் அடைந்ததுடன் கை விரல்கள் துண்டாடப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் குறித்த பெண் விழ்ந்து கிடந்துள்ளார்.

அருகில் அவரது கணவரும் நின்றுள்ளார்.

அலறல் சத்தம் கேட்டு ஓடிச்சென்ற அயலவர்கள் குறித்த பெண்ணை மீட்டு யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் குறித்த கணவரை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட கணவர் தனது வாக்குமூலத்தில் தான் தான் குறித்த செயலை புரிந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை கணவன்மனைவி இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிற நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9,30)

### 7 பொலிஸார் கைதான ...

களின் வாக்குமூலங்கள் நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் யாழ் மேல் நீதிமன்றில் பதிவுசெய்யப்பட்டது.

கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் மாவீரர்தினத்தை அனுஷ்டித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர் பொலிஸாரினால் சித்திரவதை செய்யப்பட்ட நிலையில் உயிரிழந்திருந்தார். பின்னர் அவரது சடலம் கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து மீட்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தற்போது 7 பொலிஸார் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணை இடம்பெற்று வருகிறது. இந்த நிலையில் குறித்த வழக்கின் தொடர் விசாரணை நேற்றைய தினம் நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் யாழ் மேல் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொலைச்சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் 8 சந்தேக நபர்களில் கைது செய்யப்பட்ட 7 சந்தேகநபர்களும் மன்றில் ஆஜராகியிருந்தனர் அதில் 7 ஆவது எதிரியாகக் கருதப்படும் விஜயரட்ணம் கோபிகிருஷ்ணன் என்பவர் தற்போது வெளிநாட்டில் வசித்து வருவதால் இதனையடுத்து அவருக்கு மன்றினால் மீண்டும் சர்வதேச பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் முதலாம் நானகாம், ஐந்தாம், ஆறாம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம், 2 ஆம் எதிரி சார்பில் சர்மினி விக்னேஸ்வரன். 3 ஆம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜோன் துசிதாசன், 7 ஆம் எதிரி சார்பில் மு. றெமிடியஸ். 8 ஆம் எதிரி சார்பில் ஜே.பி.ஏ.ரஞ்சித்குமார் அகியோர் ஆஜராகியிருந்தார். சட்டமா அதிபர் சார்பில் பிரதி மன்றாதிபதி குமாரரட்ணம் ஆஜராகியிருந்தார். இவ் வழக்குக் விசாரணையின் போது முறையே 9 ஆம், 12 ஆம், 10 ஆம், 15 ஆம் இலக்க சாட்சிகளின் பதிவுகள் இடம்பெற்றன.

அதில் 9 ஆம் இலக்க சாட்சியான, சம்பவம் இடம்பெற்ற தினத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் குற்றவிசாரணைப்பிரிவின் பொறுப்பதிகாரி பிரதீப் நிஷாந்த குமார சாட்சியமளிக்கையில் சம்பவம் இடம்பெற்ற தினம் நான் விடுப்பில் இருந்தேன். ஆனால் பொலிஸ் அதியட்சகரின் கட்டளைக்கமைவாக, உடனடியாக வந்து, மேற்குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை தொடர்பான விசாரணை நடவடிக்கை தகவல் புத்தகங்களை குற்றப்புலனாய்வு பிரிவுக்கு பாரப்படுத்தி 2011.11.29 அன்று வாக்குமூலம் அளித்திருந்தேன்.

குறித்த விசாரணை நடவடிக்கை தகவல் புத்தகத்தின் பிரகாரம் கடந்த 2011.11.22 ஆம் திகதி புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவம் தொடர்பில் அறிக்கையிடப்பட்டுள்ளது. பின்னர் 2011.11.25 அன்று சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினரால் களவு தொடர்பான சந்தேகத்தில் சந்தேக நபராக முதலில் சுமன் என்பவர் கைதுசெய்யப்பட்டு மேலும் 4 பேர் கடும் குற்ற விசாரணை தொடர்பாக கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

2011.11.26 அன்று சந்தேக நபரான சுமனை மேலதிக விசாரணைக்காக பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியே கூட்டிச்சென்றுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் 2011.11.26 பொலிஸ் உப பரிசோதகரால் மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பி அறிக்கையின் படி, 33 லட்சத்து 90 ஆயிரம் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் 4 பேர் கைது செய்யப்பட்டதாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதில் சுமனை கைது செய்தமை மற்றும் மேலதிக விசாரணைக்கு கொண்டு சென்றமை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. என தெரிவித்து சம்பத்துடன் தொடர்புடையவர்கள் என எதிரிக் கூண்டில் நின்றவர்களை அடையாளம் காட்டியிருந்தார்.

விசாரணை நடவடிக்கை தகவல் புத்தகங்களில் உள்ள குறிப்புக்களை சான்றாக அடையாளமிடுவதற்கு பிரதி மன்றாதிபதி மன்றில் அனுமதி கோரியதனை அடுத்து மன்றினால் அனுமதியளிக்கப்பட்டு சான்றாக அடையாளப்படுத்தப்பட்டது.

12 ஆம் இலக்க சாட்சியான பெண் உப பொலிஸ் பரிசோதகர் டொன் தாரணி சாட்சியமளிக்கையில், மேற்குறித்த சம்பவம் இடம் பெற்ற காலத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் மகளிர் விவகார பிரிவிலும் ஏனைய பிரிவிலும் கடமையாற்றினேன். 2011.11.25 அன்று சுன்னாக பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியால் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். மறுநாள் நான் கடமையை பொறுப்பேற்ற போதும் குறித்த நபரை கண்டதாக தெரிவித்தார்.

10 ஆம் இலக்க சாட்சியான பொலிஸ் கொஸ்தாபிள் சாட்சியமளிக்கையில் 2011.11.25 அன்று காலை 11.30 மணியளவில் சந்தேகநபரான சுமன் என்னிடம் பாரப்படுத்தப்பட்டார். கடமை முடிந்த நேரம் குறித்த சந்தேக நபரை பொலிஸ் கான்ஸ்டபளிடம் பாரப்படுத்தினேன். 2011.11.26 மீண்டும் கடமையை பொறுப்பேற்றபோது சுமனுடன் சேர்த்து மேலும் 4 சந்தேக நபர்கள் என்னிடம் பாரப்படுத்தப்பட்டனர்.

அதில் காலை 6.30 மணியளவில் சந்தேகநபரான சுமனை நல்ல தேக ஆரோக்கியத்துடன் பொலிஸ் பரிசோதகர் விசாரணைக்காக தனது அலுவலகத்தினுள் அழைத்து சென்று பின்னர் வெளியில் அழைத்து சென்றதை கண்டேன் என தெரிவித்தார்.

அதே போல் 15 ஆம் இலக்க சாட்சியான பொலிஸ் சாஜன்ட் சாட்சியமளிக்கையில் 2011.11.25 இரவு நேர கடமையை பொறுப்பேற்ற போது ஒரு சந்தேக நபர் பாரப்படுத்தப்பட்டார் பின்னர் மேலும் 4 சந்தேக நபர்கள் பாரப்படுத்தப்பட்டனர். சுமன் என்பவரை 8 மணியளவில் விசாரணைக்கான பொலிஸ் பொறுப்பதிகாரி சுமனை அலுவலகத்துக்கு அழைத்து சென்றார் மீண்டும் நள்ளிரவு சந்தேகநபரை பாரப்படுத்தினர். காலை கடமை முடித்து சென்றுவிட்டேன் மீண்டும் மாலை நேரம் வந்த போது சுமன் என்பவரை மேலதிக விசாரணைக்காக கிளிநொச்சிக்கு கொண்டு சென்ற போது தடுப்புக்காவலில் இருந்த சுமன் தப்பியோடி குளத்தில் விழுந்து இறந்து விட்டதாக தகவல் அறிந்தேன் என தெரிவித்தார்.

எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகளால் சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர். அதனை தொடர்ந்து இவ் வழக்கை நெறிப்படுத்தும் பிரதி மன்றாதிபதி குமாரரட்ணம் இவ் வழக்கின் குற்றப் பத்திரிகையில் 11, 13, 16, 17, 18, 19, 20 ஆம் சாட்சிகளை விடுவிக்க கோரியிருந்தார். அதன்படி குறித்த சாட்சிகள் மன்றினால் விடுவிக்கப் பட்டனர்.

இவ் வழக்கின் மீதி சாட்சிப்பதிவுகளை பதிவு செய்வதற்காக இன்றைய தினம் வரை ஒத்திவைத்ததுடன் அதுவரை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களை விளக்கமறியலில் வைக்கவும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டிருந்தார். (செ-9)

### இணை அனுசரணைக்கு ...

ஐரோப்பா - இலங்கை ஒன்றிணைந்த ஆணைக்குழுவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நல்லாட்சி, சட்டவாச்சி மற்றும் மனித உரிமை தொடர்பான செயற்பாட்டுக் குழுவின் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட ஒன்றிணைந்த ஊடக அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டுக் குழுவின் இரண்டாவது கூட்டம் நேற்று முன்தினமும் நேற்றும் கொழும்பில் நடைபெற்றதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினர்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரையும் சந்தித்துள்ளனர்.

இந்த குழுவினால் முன்வைக்கப்படுகின்ற மறுசீரமைப்புத் திட்டங்களை முன்னோக்கிச் செல்வதற்கு அரசியல் ரீதியாக அர்ப்பணிப்பு செய்வதாக இதன்போது பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் உறுதியளித்துள்ளனர்.

அத்தோடு 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் இரண்டு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

இதையடுத்து இலங்கை அரசாங்கத்தின் மறுசீரமைப்பு பணிகளுக்கு நிதி அனுசரணையை வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியமும் உறுதியளித்துள்ளது.

மேற்படி சந்திப்பின் முடிவில் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை நடைமுறைப்படுத்துவதற்காக மேலும் இரண்டு வருடகால அவகாசத்தை கோரும் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் கோரும் புதிய பிரேரணையின் வரைபு மீதான வாக்கெடுப்பு திருத்தங்களுடன் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத் தொடர் கடந்த 27 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், இலங்கை தொடர்பில் கடந்த 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு 2019ஆம் ஆண்டு வரை கால அவகாசம் கோரும் பிரேரணையின் வரைபு அமெரிக்கா, பிரித்தானியா, மொன்டெனெக்ரோ மற்றும் மெசடோனியா ஆகிய நான்கு நாடுகளால் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# ஜனாதிபதி கலந்துகொள்ளவிருந்த நிகழ்வில் சந்தேகத்திற்கிடமாக நடமாடியவர் மறியலில்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்ள விருந்த நிகழ்வொன்றிற்கான ஏற்பாட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்த சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு, கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி லால் ரணசிங்க பண்டார முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் முன்னாள் போராளி' ஒருவரின் சகோதரர் ஆவார்.

சந்தேக நபரிடம் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்படும் போது, அவரது சகோதரர் னின் அடை யாள அட்டையை காணப்பட்ட தாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-3)


1991-2016

25 YEARS OF SERVICE EXCELLENCE

BIG SALE

செய்மதி தொலைக்காட்சி சேவை

(direct to home)

டிஷ் ஆன்டெனா மூலம் (digital sd/hd) தரத்தில் இடையூறு அற்ற முறையில் குறைந்த கட்டணத்தில் (ரூபாய் 400/- தொடக்கம்) உங்கள் விருப்பம் போல் டிவி சனல்களை கண்டுகளிக்கக்கூடிய FULL செட் 1 வருட உத்தரவாதத்துடன்

SATS - TECH ENGINEERS

298, K.K.S ROAD, JAFFNA.

PHONE:- 021 222 8812/071 098 6224

Rs. 3000/-*

(C-7798)


# சுவர் இடிந்து விழுந்ததில் 7வயதுச் சிறுமி உயிரிழப்பு



(கொழும்பு)

சுவர் இடிந்து விழுந்ததில் 7 வயது சிறுமி, ஸ்தலத்திலே பலியான சம்பவம், நேற்று முன்தினம் இரத்தினபுரியில் இடம்பெற்றுள்ளது. இரத்தினபுரி சீவலி மகா வித்தியாலயத்தில் தரம் 2 இல் கல்வி பயின்று வந்த, இரத்தினபுரி மூவகம பிரதேசத்தைச் சேர்ந்த மல்மி ஆன்சா (வயது7) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளாள். (இ-3)

# தாதியர் சங்கத்தின் போராட்டம் தோல்வி

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



அரச சேவைகள் ஐக்கிய தாதியர் சங்கம் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுத்து வரும் விடுமுறையை பதிவு செய்யும் போராட்டம், தோல்வி அடைந்துள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

வேதனப் பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட பல வேறு வியங்களை வலியுறுத்தி 13, 14 ஆம் திகதிகளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அரச சேவைகள் ஐக்கிய தாதியர் சங்கம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

காலி-கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை மற்றும் கொழும்பு கண் வைத்தியசாலை என்பவற்றில் மாத்திரம் இந்தப் போராட்டம் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. ஏனைய வைத்தியசாலைகள் அனைத்தும் சுமூகமாக இயங்கியதாக சுகாதார அமைச்சர் தெரிவித்தார். (இ-3)


மனதில் சுமையா?

வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா? உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

கை கொடுக்கும் நண்பர்கள்

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

'மதசார்பற்றது 'ரகசியமானது * இலவச சேவை

021 222 8117, 077 900 8776

(தினமும் காலை 9.00 - 1.00)

வவுனியாவில்: (024) 324 4444

(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

(இ-7772)



நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

077 784 1558

(8468)



சீ பேங்க் சேவிங்க்ஸ் ப்ளஸ் நிதியம்

உங்கள் சேமிப்புக்கு கவர்ச்சிகரமான வருவாய்

10.7% (P:A) சீ பேங்க் சேவிங்க்ஸ் ப்ளஸ்

வருடாந்த மொத்த விளைவு (28 பெப்பிரவரி 2017 இல்)

- பாரம்பரிய சேமிப்புக் கணக்கினை விட மேலதிக விளைவுகள்
- வரி இலவச விளைவுகள்
- பணத்தினை இலகுவாக மீளப்பெறும் வசதி

மேலதிக தகவலுக்கு

குமுது 071 066 2007 சுபாஷினி 071 066 2077

NSB BANK OF CEYLON uti

Ceybank ASSET MANAGEMENT LTD

54/C1, கொழும்பு 07.

www.ceybank.com

info@ceybank.com

*தற்போதய வருடாந்த வருவாய் விகிதம் சந்தை நிலைமைகளுக்கேற்ப எதிர்காலத்தில் மாற்றமடையலாம். கடந்த கால வருவாய் வீதங்கள், எதிர்கால வருமானங்களுக்கான குறிகாட்டி அல்ல.

(070)


# இராசி பலன்

15.03.2017

(பங்குனி 02, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு

திருதியை முன்னிரவு 11.23 மணிவரை

சித்திரை முன்னிரவு 10.13 மணிவரை

சுபநேரம் 4.51-6.21 மணிவரை

இராகுகாலம் 12.21-1.51 மணிவரை

உலக ஊனமுற்றோர் தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத, சுக் | செவ் | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரட்டாதி, உத்திரட்டாதி காலை 9.01 மணிக்கு துலா-சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு சந் |

**மீனம்:** எதையும் ஒருமுறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், களஸ்திர நம்மையுண்டு.

**மேடம்:** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**இடபம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுபசெலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தேற்றமும் பணியொன்று இன்றும் தொடரலாம், உடல்நலம் சீராகும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொல்லை தந்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மகரம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திகரமானதாக அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:** உற்சாகத்தோடு பணியாற்றுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம், கௌரவம், அந்தஸ்து உயரும், முயற்சிகள் கைகூடும்.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** பயணத்தால் பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**துலாம்:** உறவினர்கள் தொடர்பான சில காரியங்களுக்காக சற்று அலைய நேரிடலாம், தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மங்கையர் வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும், கற்பனை மிகுதியான நாள்.

# யாழ்.பல்கலையுடன் நோர்வே பல்கலை.புரிந்துணர்வு உடன்படிக்கை





(படங்கள்:-பொ.சோபிகா)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்கும் நோர்வேயின் பிரயோக விஞ்ஞான பல்கலைக்கழகத்துக்கும் (எச்.எல்.வி) இடையிலான இணை ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் கற்றல் செயற்பாடுகளுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான நோர்வே துணைத் தூதுவர் குநூட் நைவூல்ட் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், நோர்வே எச்.எல்.வி.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் கிறிஸ்டின் செல்விக் ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் உத்தேச மதிப்பீடு இலங்கை ரூபாவில் சுமார் எட்டு மில்லியன் ஆகும்.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடம், தொழில்நுட்ப பீடம், பொறியியல் பீடங்களின் ஆளணியினரும், மாணவர்களும் எச்.எல்.வி பல்கலைக்கழகத்துடன் கற்றல் நடவடிக்கைகளுக்காக பரஸ்பர பரிமாற்றங்களில் ஈடுபடுவதோடு, இணை ஆய்வு நடவடிக்கைகளும் இடம் பெறும் எனவும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சார்பில் பேராசிரியர் பு.ரவிராஜனும், எச்.எல்.வி. பல்கலைக் கழகத்தின் சார்பில் பேராசிரியர் வி.தயாளனும் செயற்றிட்ட இணைப்பாளர்களாகச் செயற்படவுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)





தீவகக் கல்வி வலய விசேட கல்விப்பிரிவினால் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களும் கோட்டக்கல்விப் பணிப்பாளர்களும் கலந்து கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதை படங்களில் காணலாம்.

# மரண அறிவித்தல்

## லயன் பூமாதேவி மகாதேவா



தோற்றம் :- 21.12.1950
மறைவு : - 12.03.2017

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி, கந்தரோடை, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட லயன் பூமாதேவி மகாதேவா கடந்த (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சீவநாயகம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் லயன் மகாதேவாவின் நேசமிகு மனைவியும் பிருந்தாபன் (சுதன் - லண்டன்), திருமதி வி.பிரியதர்சினி (லண்டன்), லயன் பிரிதிவிராஜா (ராஜன் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் திருமதி பி.சிவனேஸ்வரி (லண்டன்), விஸ்ணுகாந்தன் (லண்டன்), திருமதி பி.பவித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியும் சர்விகா, கோவரசன், ஜஸ்வீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2017) புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கந்தரோடை சங்கன்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லூரி வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.
021 224 0357

தகவல்:
லயன் செ. மகாதேவா (M.J.F.J.P)
077 704 1767

(8314)

03

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

யாராவது ஒருவருடைய நட்பைப் பெறவேண்டுமென்றால் கையுறை கொண்டு செல்ல வேண்டும் அல்லது கோள் கொண்டு செல்லவேண்டும் என்றொரு சம்பிரதாயம் நம்மிடம் இருக்கவே செய்கிறது.

பொதுவில் அலுவலகங்களில் அண்டல் போடுபவர்கள் அதிகாரிகளை வளைத்துப் பிடித்துவிடுவர். ஏனைய உத்தியோகத்தர்கள் பலரும் தாம் உண்டு தம் பணி உண்டு என்றிருப்பர்.

இத்தகையவர்கள் விழுந்து எழும்பவும் மாட்டார்கள். வஞ்சனை செய்யவும் மாட்டார்கள். ஆனால் சில உத்தியோகத்தர்கள் அண்டல் போடுவது, ஒருவரை ஒருவர் முடிச்சுப் போட்டுவிடுவது என்ற வேலையைத் தாராளமாகச் செய்வர். இத்தகையவர்களே பயங்கரமானவர்கள். தமது அதிகாரிகளுக்கு தவறான தகவல்களைக் கொடுத்து தங்களின் நாரதப் பணியைத் திறம்படச் செய்துவிடுவார்கள்.

கேட்பார் புத்தி கேட்கின்ற அதிகாரிகளாக இருப்பவர்கள் பாடு எப்போதும் கஷ்டம்தான். நல்ல பணியாளர்கள் மீது குறை குற்றம் காண்பர். இதனால் குறித்த அலுவலகம் தனது பணிகளைத் தவிர மற்றைய எல்லாவற்றிலும் தீவிரமாக இருக்கும்.

இந்த நடைமுறை தமிழ்ப்பகுதிகளில் இருக்கக்கூடிய அலுவலகங்களில் மட்டுமல்ல, தமிழரின் அரசியலிலும் உள்நுழைந்து ஆட்டிப் படைக்கவே செய்கிறது.

ஆம், தன்மீது விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அதீத நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதற்காக, தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுதலைப்புலிகளுக்கு எதிரான போக்குடையவர் என்றவாறான ஒரு தோற்றப்பாட்டை சம்பந்தர் தரப்பு ஏற்படுத்தியது.

எதையும் வெளிப்படையாக-நேரடியாகக் கதைக்கின்ற வீ.ஆனந்தசங்கரியின் இயல்பு சம்பந்தரின் நோக்கத்தைக் கனகச்சிதமாக நிறைவேற்ற உதவியது.

தமிழர் விடுதலைக்கூட்டணி மீது விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

அதேநேரம் தங்களைக் கண்டால் புலிகள் சுடுவர் என்று கூட்டணியினர் அஞ்சி வாழ்ந்த காலங்களை நாம் மறந்தாலும் அவர்கள் மறக்க மாட்டார்கள் என்பதும் நிஜம்.

இதேவேளை விடுதலைப்புலிகளும் தமது அமைப்புத் தவிர்ந்த, வேறு எந்தப் போராட்ட அமைப்புகளையோ அன்றி தமிழ் அரசியல் கட்சிகளையோ ஏற்றுக் கொள்ள



விரும்பவில்லை.

தமிழ்மக்களின் விடுதலைக்காக-மண் மீட்பிற்காக தமிழர் தரப்பில் ஆயுதப் போராட்ட அமைப்புகள் தோன்றினவாயினும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஐயமெல்லாம் ஏனைய அமைப்பினர் விலைபோய்விடக்கூடும் என்பதுதான்.

தமிழ்மக்களுக்கான விடிவை நோக்கிய பயணத்தில் ஒரு தலைமை இருப்பதே இலக்கை அடைவதற்குரிய வழியாகும் என்ற நினைப்பில் பிரபாகரன் இம்மியும் தளரவும் இல்லை.

ஆக, ஆயுத அமைப்புகளில் ஈரோஸ் என்ற அமைப்பைத் தவிர ஏனைய ஆயுத அமைப்புக்கள் விடுதலைப் புலிகளை ஏற்கவும் இல்லை.

இருந்தும் கால ஓட்டத்தில் பிரபாகரனின் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பே ஏகத்தலைமை என்பதாக நிலைத்தது.

இத்தகைய சூழமைவில் தனித்து ஆயுதப் போராட்டம்- இராணுவபலம் என்பதோடு மட்டும் நின்றுவிடாமல், அரசியல் பக்கத்தையும் பார்க்கவேண்டும் என்ற நிலைமை புலிகளுக்கு ஏற்பட்டபோதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகியது.

எந்நாளும் மரணபயம் என்ற அச்சத்தில் இருந்தவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அமைப்பினூடாக தலைவர் பிரபாகரன் பாவமன்னிப்புக் கொடுத்தார்.

இதுவே தக்க தருணம் என்றுணர்ந்த அரசியல் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டன. இங்குதான் ஆனந்தசங்கரியை புலிகளுக்கு விரோதமானவராகக் காட்டி அவருக்கும் புலிகளுக்குமான உறவை வேரறுத்து தங்களை நல்ல பிள்ளைகளாக சம்பந்தர் தரப்பினர் காட்டிக் கொண்டனர்.

இதை நாம் கூறும்போது புலிகளின் மரண தண்டனைப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்த இரா.சம்பந்தரை தலைவர் பிரபாகரன் ஏற்றுக்கொண்டது தவறல்லவா. அப்படி ஏற்றுக்கொள்வதற்கு என்ன காரணம் என்றெல்லாம் நீங்கள் கேட்கவே செய்வீர்கள்.

இங்குதான் ஓர் உண்மையைச் சொல்லியாகவேண்டும்.

அதாவது பிரபாகரன் இல்லாத புலிகளின் தலைமை பற்றி அப்போது எவரும் சிந்தித்திலர். நாங்கள் இருக்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அன்றி இரா.சம்பந்தரோ எல்லை தாண்ட முடியாது என்ற புலிகளின் நினைப்புத்தான் சம்பந்தருக்கு மரண தண்டனையிலிருந்து விலக்களித்து கூட்டமைப்பிற்குள் சேர்க்க வைத்தது.

அதிலும் மரண தண்டனையை விலக்கி கூட்டமைப்பிற்குள் சேர்ப்பதால் இரா.சம்பந்தர், மாவை. சேனாதிராஜா போன்றவர்கள் தமக்கு விசுவாசமாக இருப்பர் என விடுதலைப்புலிகள் நம்பியதும் உண்டு.

எது எவ்வாறாயினும்

.... உள்ளொன்று வைத் துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்....

என இராமலிங்க வள்ளலார் வேண்டுவது இங்கு நடக்காமல் போயிற்று. புலிகளை வெளிப்படையாக எதிர்த்த ஆனந்தசங்கரி பிரபாகரனுக்குப் பகையாகவும் புறத்தில் ஆதரவு போலவும் அகத்தில் எதிரியாகவும் செயற்பட்ட சம்பந்தர் தரப்பு புலிகளின் விசுவாசிகளாகவும் நம்பப்பட்டனர்.

இந்த நம்பிக்கை வன்னி யுத்தத்தின் முடிவில் புலிகளின் தோல்வியோடு புஷ்வானமாகியது.

வன்னிப் போர்க்காலத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதில் மகிந்த தரப்பைவிட இன்று நம் அரசியல் தலைமை என்றிருப்பவர்களே அதிகமாகப் பிரார்த்தித்தவர்கள்.

ஆயினும் அதைக்கூட நம் மக்கள் அறியாதிருந்தனர். தலைவன் பிரபாகரன் தன் சுட்டு விரலைக் காட்டியதால் எங்கள் வாக்கு அவர்களுக்கு என்பதாக மக்கள் தீர்மானித்தனர்.

இப்போது தமிழ் அரசியல் தலைமை என்ன செய்கிறது என்பது ஒரு புறம் இருக்க விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பை தங்களின் அதிகாரத்திற்கு உட்பட்ட அமைப்பாக மாற்றுவதில் சம்பந்தரும் அவரோடு சேர்ந்த சிலரும் செய்த திட்டங்கள் தான் மிகவும் அக்கிரமமானவை.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவி என்பது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கே கிடைக்க இருந்தது.

எனினும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதனை சம்பந்தருக்கு விட்டுக் கொடுத்தார். அந்த விட்டுக்கொடுப்பை நன்றியாக நோக்க வேண்டிய தலைமை நயவஞ்சகமாக ஆக்கிக் கொண்டது.

(வளரும்)

-புருசோத்தமன்-

# உருத்திரபுரம் பிரதான வீதியிலுள்ள உயர்பாலம் பயணத்திற்கு பாதுகாப்பற்றது

## திட்டமிடலின் குறைபாடு என பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(பரந்தன்)

கிளிநொச்சி கரடிபோக்குச் சந்தியிலிருந்து உருத்திரபுரம் நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் பற்றிமா றோ.க. பாடசாலைக்கு அருகில் அருமைக்கப்பட்டுள்ள உயர்ந்த பாலம் பொறியியல் திட்டமிடலின் குறைபாடு என பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாலம் அண்மையில் அமைக்கப்பட்ட பாலம் எனவும் அதனூடான போக்குவரத்து கடினமானதாகவும், ஆபத்தானதாகவும் உள்ளது என தெரிவிக்கும் பிரதேச மக்கள் வீதி, பாலங்கள் என்பன அமைக்கப்படுவது மக்களின் இலகுவான, பாதுகாப்பான போக்குவரத்திற்கேயாகும். ஆனால் குறித்த பாலத்தின் ஊடான பயணம் அவ்வாறு இல்லை எனவும், அதேவேளை ஒடுங்கிய பாலமாகவும் ஒரு வாகனம் மட்டுமே செல்ல முடியும் எனவும் அதாவது சிறிய வான் ஒன்று செல்கின்ற போது எதிர்ப்பக்கத்திலிருந்து வருகின்ற ஒரு ஆட்டோ கூட பாலத்தின் ஊடாக கடந்து செல்ல முடியாத அளவுக்கு அமைக்கப்பட்டுள்ளதோடு. பாலத்தின் உயரமும் வீதியி லிருந்து சடுதியாக உயர்ந்து செல்கிறது எனவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த இடத்தில் அந்தளவு உயரத்தில் பாலம் அமைக்க வேண்டிய தேவை இல்லை. இருப்பினும் அவ்வாறு உயரமான அளவில் பாலம் அமைக்கப்பட்டிருந்தால் அதற்கேற்ற வகையில் வீதிக்கும் பாலத்திற்குமான சரிவு ஒரு சீராக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்

ஆனால் குறித்த பாலத்தின் சரிவானது சடுதியாக காணப்படுகிறது. இது ஒட்டுமொத்த வாகனங்களின் பயணத்திற்கு ஆபத்தானதாக உள்ளது. குறிப்பாக துவிச்சக்கரவண்டி, இரு சக்கர உழவு இயந்திரம் என்பவற்றுக்கு மிகவும் ஆபத்தானதாக காணப்படுகிறது என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.



தங்களின் பிரதேசங்கள் தொடர்பில் பல வருட அனுபவங்களைக் கொண்ட பொதுமக்களின் அனுபவ அறிவை அதிகாரிகள் புறக்கணித்தமையினால் தோல்வியில் முடிந்த பல திட்டங்கள் உதாரணமாக மாவட்டத்தில் உள்ளன எனவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை உதாரணமாக நீர்ப்பாசன வாய்க்காலுடன் செல்கின்ற வீதியை புனரமைக்கின்ற போது நீர்ப்பாசனத் திணைக்களம், வீதி அபிவிருத்தி திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லது பிரதேச சபை என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு கலந்து பேசி பணிகளை முன்னெடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்வதில்லை. இதனாலும் பல திட்டங்கள் முழுமையடையாமல் உள்ளன என பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே அமைக்கப்பட்ட உருத்திரபுரம் வீதியில் உள்ள உயரமான பாலத்தில் பாதுகாப்பான போக்குவரத்தை மேற்கொள்ளும் வகையில் பாலத்தின் இரண்டு பக்கங்களிலும் உள்ள வீதிக்கும் பாலத்திற்குமான சரிவை சீராக அமைத்துத்தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-312)




# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வருகைக்காக காத்திருக்கும் காலமாக இக் காலம் மாறியுள்ளது

## சிறிதரன் எம்.பி.சுட்டிக்காட்டு



காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வருகைக்காக காத்திருக்கின்ற ஒரு காலமாக தற்போதைய காலம் உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பெண்கள் எழுச்சி நாளையொட்டி கிளிநொச்சி மாவட்டத்தில் நீள்விழி பெண்கள் அழைப்பின் ஏற்பாட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபை மண்டபத்தில் நீள்விழி பெண்கள் அமைப்பின் தலைவியும் பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தின் அதிபருமான எஸ்.சூரியகுமாரி தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வுக்கு விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் உரையாற்றுகையில்,

காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய சகோதரர்கள், சகோதரிகள், தாய்மார் தங்களுடைய பிள்ளைகளின் வருகைக்காக காத்திருக்கின்ற ஒரு மிக முக்கியமான காலம்.

பல்வேறுபட்ட நாடுகளில் இவ்வாறான போர்க்குற்றங்கள் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் நடந்திருக்கின்றன.

இவ்வாறு போர்நடைபெற்ற நாடுகளில் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் பெண்களாகவே இருக்கின்றனர். குறிப்பாக பெண்களை நோக்கியதாகவே அந்தப்போர்கள் எல்லாம் நடத்தப்பட்டிருக்கின்றன.

அவ்வாறு போர் வடிவங்களில் இருந்து மீண்ட பெண்கள் தான் உலகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

அதேபோல் தான் எமது மண்ணிலும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மார், மனைவி, பிள்ளைகள் தமது உறவுகளைக் காட்டுமாறு கோரி தற்போது வடக்குப் பகுதியில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கை நெறிகள் விரிவுரையாளர் தேவ கௌரி போருக்குப் பின்னர் பெண்ணின் நிலை பற்றிய கருத்துரையை வழங்கியிருந்தார்.

நிகழ்வில் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்டோர், பெண்கள் அமைப்பின் உறவுகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (2-312)

### படையினர் வசமிருந்த

# காணிகளில் குடியேறிய மக்களுக்கு போதியளவு வசதிகள் செய்யப்படவில்லை

## மீள்குடியேற்ற அமைச்சருக்கு செல்வம் எம்.பி, அவசர கடிதம்

படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட கேப்பாப்பிலவுபிலவுக்குடியிருப்பு, புதுக் குடியிருப்பு , பரவிப்பாஞ்சான் ஆகிய மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் அவசர வேண்டுகோள்ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மீள்குடியேற்ற அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தின் படி,

யுத்தத்தின் பாதிப்பிலிருந்து மீளாத எம் மக்கள் படையினர் வசமிருந்த தமது பூர்வீக நிலங்களை தங்களது போராட்டங்களின் ஊடாக மீளப்பெற்றிருக்கின்றனர்.

மீளளிக்கப்பட்ட காணிகளில் இருந்த மக்களின் வீடுகள், கிணறுகள், மலசல கூடங்கள் பாவனைக்குட்படுத்தப்பட முடியாதவாறு சேதமடைந்துள்ளன.

இங்கு வாழும் மக்கள் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்கள். இதன் காரணமாக மக்கள் மீள்குடியமர்வதற்கு போதிய வசதிகள் இன்றி அல்லலுறுகின்றனர்.

எனவே இது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் இம் மக்கள் மீளக்குடியமர்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். (2)

### 11 ஆவது நாள்

# பன்னங்கண்டி மக்களின் போராட்டத்திற்கு தென்னிலங்கை அமைப்பு ஆதரவு




(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டி மக்களின் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று பதினொராவது நாளாகவும் தொடர்ந்தது.

காணி அனுமதிப்பத்திரம், வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை கோரி பன்னங்கண்டி கிராம மக்கள் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற நிலையில் குறித்த இப் போராட்டத்திற்கு சம உரிமை இயக்கம், சுதந்திரத்திற்கான மகளிர் அமைப்பு, சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு என்பன ஆதரவை வழங்கி அவர்களுடன் இணைந்து கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். (2-312-15)

# மாணவர்களின் கல்விப் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்ட பேருந்தின் மீது கல்வீச்சு

(மல்லாவி )

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களின் கல்வி கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் லண்டன் வாழ் பழைய மாணவர்கள் இருவரின் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்ட 40 இலட்சம் ரூபா பெறுமதியான பேருந்தின் கண்ணாடிகளை இனந்தெரியாத விஷமிகள் கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டு சேதமாக்கியுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நேரத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பாடசாலையின் உட்பகுதியில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தின் முன்பக்கக் கண்ணாடிக்கு கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

இதன் போது கண்ணாடி உடைந்து சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை மேற்கொண்டுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2- 15)

# 14 கிலோ கஞ்சாப் பொதிகள் கைப்பற்று

பூநகரி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பூநகரி வில்லூன்றிப் பகுதியில் 14 கிலோ 400 கிராம் எடையுடைய கேரளக் கஞ்சாப் பொதிகளுடன் சந்தேக நபர் ஒருவரை பூநகரியில் உள்ள சிறப்பு அதிரடிப் படையினர் கைது செய்துள்ளதாக பூநகரி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

பூநகரி வில்லூன்றிப் பகுதியில் வாகனம் ஒன்றை வழிமறித்த சிறப்பு அதிரடிப் படையினர்அதனைச்சோதனையிட்ட போது மிக நுட்பமான முறையில் வாகனத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 கிலோவும் 400 கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சாப் பொதிகளை மீட்டுள்ளனர்.

இதன் போது கடத்தலுக்குப் பயன்படுத்திய வாகனத்துடன் அதன் சாரதியை சிறப்பு அதிரடிப் படையினர் கைது செய்து பூநகரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதன்போது. கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பூநகரி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# ஊடுபயிர்ச்செய்கையை மேற்கொண்ட 72 விவசாயிகளுக்கு மானிய உதவித் திட்டம்



வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட 72 விவசாயிகளுக்கு 72 ஆயிரம் ரூபா மானிய உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

தென்னை அபிவிருத்தி சபையினால் நெடுங்கேணி, ஒலுமடு, கற்குளம், பட்டிக்குடியிருப்பு,சன்னாதிபரந்தன், மதியாமடு,அனந்தர் புளியங்குளம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் தென்னைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு ஊடு பயிர்ச்செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை சன்னாதி பரந்தன் பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.மனோதர்சனின் ஏற்பாட்டில் 72 விசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்குதலா 10 ஆயிரம் ரூபா வீதம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு வவுனியா வடக்கு பழக்கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் டெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பகீரதி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (2-15)




# இத்தாவிலில் அமையப்பெறவுள்ள வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டல்





கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள இத்தாவில் கிராமத்தில் நேற்று முன்தினம் 25 குடும்பங்களிற்கு வீட்டுத் திட்டங்களிற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் குறித்த திட்டத்திற்கான அடிக்கல் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனால் நாட்டி வைக்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் காணி இல்லாது இருந்த மக்களிற்கு 4 பரப்பு காணி வழங்கப்பட்டு வீட்டுத்திட்டமும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனடிப்படையில் வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. (2-15-312)

# காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் போராட்டத்திற்கு தென் பகுதியிலிருந்து பல்வேறு அமைப்புக்கள் ஆதரவு

## கிளிநொச்சியில் 23 ஆவது நாளாகவும் முன்னெடுப்பு








(மல்லாவி)

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது போராட்டம் நேற்று 23 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் எவ்வித முடிவுகளுமின்றி தொடர்கின்றது. நேற்றையதினம் சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு, சுதந்திரத்திற்கான மகளிர் அமைப்பு, சம உரிமை இயக்கம் ஆகிய அமைப்புகள் மேற்படி இடத்திற்கு வருகைதந்து ஆதரவு வழங்கியிருந்தனர்.

இதன்போது சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு சார்பில் கருத்து தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் குறிப்பிடுகையில்,

இன்றைய தினம் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக நாம் ஈடுபட்டுள்ளோம். நல்லாட்சி என கூறிக் கொள்ளும் அரசு இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் நலன் தொடர்பில் திரும்பிப் பார்க்கவில்லை.

இன்றையதினம் மக்கள் ஆதங்கங்களை வெளியிடுகின்றனர். நுளம்புகளுக்குள்ளும், கடும் குளிர், வெப்பத்திற்குள்ளும் எமது பிள்ளைகளுக்காக காத்திருக்கின்றோம் என தெரிவிக்கின்றனர்.

தற்போது தமிழ் தலைமைகள் அரசுக்கு 2 வருடங்கள் கால அவகாசம் வழங்குவதாக ஊடகங்களிலும் அவர்களாலும் பரவலாக தெரிவிக்கப்பட்டு வருகின்றது. யாழிற்கு வருகை தந்த ஜனாதிபதி எந்தக் காரணம் கொண்டும் இராணுவத்தினரை விசாரணைக்கு அனுமதியோம் என திட்டவட்டமாக தெரிவித்த பின்பும், இருவருடகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமை கவலை அளிப்பதாக தெரிவித்தார்.

இந்நிலையில் கடந்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் இந்நிலையில் அது தொடர்பிலான தகவல்கள் ஏதாவது வெளியிட முடியுமா? என ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோது,

கடந்த காலங்களில் பல குழுக்கள் மீதும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட சிலர் மீது தற்போது வழக்கு தொடுக்கப்பட்டும் உள்ளது.

எனவே எந்த அமைப்பினர் மீதும் உண்மையான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு அது நிரூபிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை தானும் வலியுறுத்துவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த அரசின் காலத்தில் இவ்வாறு மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தனர்.

ஆனால் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வேளை பாதிக்கப்பட்ட மக்களுக்காக என்ன விடயத்தை கையாண்டீர்கள் என ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோது,

கடந்த அரசாங்கத்தின் காலத்திலும் இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாராளுமன்றில் என்னால் பேசப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (2-312-15)

# ஓமந்தை சோதனை சாவடி அமைந்த காணியை உரிமையாளர்கள் பார்வையிட்டு அடையாளப்படுத்துவதற்கு அனுமதியளிப்பு

## வீட்டுத்திட்டத்தையும் ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை

(மல்லாவி )

நாட்டில் இடம் பெற்ற யுத்த காலத்தில் வடக்கில் இருந்து தென்பகுதிக்கு பயணிக்கும் மக்களையும், தென் பகுதியில் இருந்து வடக்கு மக்களுக்கு கொண்டு வரும் பொருட்களையும், வாகனங்களையும் சோதனையிடும் சோதனைச்சாவடியாக காணப்பட்ட வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடி அமைந்திருந்த காணியை, அதன் உரிமையாளர்கள் பார்வையிட்டு, தமது காணிகளின் எல்லைகளை இனங்காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நடவடிக்கை நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை நடை பற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஓமந்தை சோதனைச் சாவடியானது, 18 குடும்பங்களுக்குரிய 41, ஏக்கர் காணியை இராணுவம் கடந்த 20, வருடங்களுக்கு முன்னர் அபகரித்து இந்த சோதனைச்சாவடியை அமைத்திருந்த நிலையில், கடந்த கால ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இக்காணிகளை இராணுவத்திற்கு சுவீகரிப்பதற்கான நோட்டீஸ் ஒட்டப்பட்டிருந்தது.

இதனை எதிர்த்து காணி உரிமையாளர்கள் வழக்குத் தாக்கல் செய்திருந்த நிலையில், அண்மையில் குறித்த காணியின் ஒரு பகுதியை விடுவிப்பதற்கு ராணுவம் உடன்பட்டது.

அதனைத் தொடர்ந்து சோதனைச்சாவடிக்காணியை இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை காணி உரிமையாளர்களான 18 குடும்பத்தினருக்கும் தமது காணிகளை பார்வையிடுவதற்கும் அடையாளப்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த இரு தசாப்த காலத்திற்கு பின்னர் தமது சொந்த நிலத்தில் கால்பதித்த மக்கள், தமக்கான அடிப்படை வசதிகள் மற்றும் வீட்டுத். திட்டத்தையும் ஏற்படுத்தித் தர வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணிகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கையின்போது, வவுனியா பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் மற்றும் நில அளவையாளர்களும் உடனிருந்தனர். (2-15)

# வாகன விபத்தில் இளைஞன் படுகாயம்



(மல்லாவி )

மன்னார் பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள எழுத்தூர் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயம் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னாரில் நகரப் பகுதியில் இருந்து எழுத்தூரை நோக்கி பயணித்த பார ஊர்தியும் தாழ்வுபாடு பிரதான வீதியூடாக மன்னார். நகரை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேரெதிராக மோதிக் கொண்ட விபத்துச் சம்பவத்தின் போது மோட் டார். சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயமடைந் துள்ளார்.

விபத்து தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு விரைந்த மன்னார் போக்குவரத்துப் பொலிஸார் விபத்துக்குள்ளான வாகனங்களை மீட்டெடுத்து பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# அரசியலமைப்பு மறுசீரமைப்பில் அவசரம் காட்டமாட்டோம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அரசியல் அமைப்பு மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதில் தாமும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவசரம் காட்டப்போவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அரசியல் மறுசீரமைப்புக்களை தற்போது முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தை ஊடாகவே ஏற்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



ரஷ்யப்புரட்சியை நினைவு கூரும் வகையில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே பிரதமர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

சுதந்திரத்தின் பின்னர் அரசியல் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொள்ள வேண்டும் என சோசலிசத் தலைவர்கள் கோரிய போது, அவற்றை மெதுவாக முன்னெடுக்கலாம் என மறைந்த பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க கூறியதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேபோன்று காலத்துடன் நாமும் மெதுவாக பயணிப்போம் எனக் குறிப்பிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தேவை ஏற்படின் துரிதகதியில் செல்ல முடியும் எனவும் கூறியுள்ளார்.

அனைத்து கட்சிகளும் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அல்லாவிடின் எதிர்காலத்தில் சர்வாதிகார ஆட்சியே அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய விஞ்ஞானியும் அரசியலமைப்பு நிபுணருமான பேராசிரியர் ஜயதேவ உயன்கொட, அரசியல் மறுசீரமைப்பு பணிகள் தடம் மாறியுள்ளதாகவும் மறுசீரமைப்பு அமுலாக்கத்திற்கான பொறுப்பை இரண்டு தலைவர்களும் ஏற்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தார்.

ஜயதேவ உயன்கொடவின் இந்த கருத்துக்கு பதில் அளிக்கும் வகையிலேயே பிரதமர் மேற்குறிப்பிட்ட விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)

## வடக்கு கடற்படைத் தளபதிக்கு கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சமூகத்துடன் ஒன்றிணைந்து அதிகளவான அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டமையை பாராட்டி வடமாகாண கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் பியல் டி சில்வா நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனால் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கடற்படைத்தளபதிக்கான பிரியாவிடை நிகழ்வில், கடந்த இரண்டு வருடங்களாக யாழ்.மாவட்டச் செயலகத்துடன் ஒத்துழைத்தும் சமூகத்துடன் ஒன்றிணைந்தும் அதிகளவான பல்வேறு அபிவிருத்தி பணிகளை யாழ்.மாவட்டத்தில் மேற்கொண்டமையை பாராட்டி அரச அதிபரால் கௌரவிக்கப்பட்டு நினைவுப்பரிசிலும் வழங்கி வைக்கப்பட்டது. (இ-9)



### நூதன மஹா கும்பாபிசேகம்

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிதம்பர நடராஜப் பெருமான் நூதன மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் இடம்பெறவுள்ளது. இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நூதன சிதம்பர நடராஜ மூர்த்தி வீதி உலா வருதல் இடம்பெறவுள்ளது.(இ-3)

### சாராயத்துடன் கைதானவருக்கு 15,000 ரூபா அபராதம் விதிப்பு

பௌர்ணமி தினத்தன்று சாராயம் வைத்திருந்த நபர் ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி கந்தசாமி தீர்ப்பளித்தார் .

180 மில்லி லீற்றர் அளவுடைய 26 சாராய போத்தல்களுடன் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த நபரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போதே 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (இ-3-60)

## மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிபப் பெண் படுகாயம்

சாவகச்சேரி பிரதான வீதியில் நுணாவில் பகுதியில் வீதியைக் கடக்க முயன்ற வயோதிபப் பெண் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த அவர் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த 60 வயதான சி.யோகராணி என்பவரே படு காயங்களுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பேருந்தில் ஏறுவதற்காக பிரதான வீதியினை திடீரென கடக்க முயன்ற போதே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

படுகாயங்களுக்குஉள்ளான பெண்ணை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல எவரும் முயற்சிக்கவில்லை.

இதனால் அவரது தலையில் இருந்து அதிகளவில் இரத்தம் வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ் விபத்து தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-89)

### மோதலில் ஈடுபட்டோர் ஆட்பிணையில் விடுவிப்பு

கரவெட்டி அரசடிப்பகுதியில் மோதலில் ஈடுபட்ட இருவருக்கு கடும் எச்சரிக்கை விடுத்து தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி கந்தசாமி விடுவித்தார். கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் பாதிக்கப்பட்ட இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நெல்லியடிப் பொலிஸார் இருவரையும் கைது செய்து நேற்று முன்தினம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்தினர். இருவருக்கும் கடும் எச்சரிக்கை விடுத்த நீதவான் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் விடுவித்தார் (இ-3, 60)

### கட்டுமான மூலப்பொருட்களுக்கு வடக்கில் பாரிய தட்டுப்பாடு

வட மாகாணத்தில் பல வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் கட்டுமானத்திற்கு தேவையான முக்கிய மூலப்பொருட்களான மணல்,கிரவல் என்பவற்றிற்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற, நடைபெறவிருக்கின்ற அபிவிருத்தி வேலைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மணல் விநியோகம் இரவு வேளையில் மட்டும் நடைபெறுவதால் அதன் தரம், அளவு என்பவற்றை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளதோடு வேலைகளைத் திட்டமிட்டு செயற்படுத்த முடியாமல் உள்ளது.

இதனால் ஒப்பந்தகாரர்கள் குறிப்பிட்ட காலத்தில் ஒப்பந்த வேலைகளை முடிக்க முடியாமல் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கான மாற்று வழிகளைச் சிந்திக்காமல் ஒப்பந்தத்தை எடுத்தவர்கள் வேலைகளை முடிக்க வேண்டும் என பாராமுகத்துடன் செயற்படுகிறார்கள்.

எனவே மணல் மற்றும்கிரவலுக்கான தீர்வை உரிய அதிகாரிகள் பெற்றுக்கொடுக்கா விட்டால் சகல ஒப்பந்தகாரர்களும் தமது வேலைகளை நிறுத்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என இலங்கை தேசிய கட்டமான சங்கம் (வடக்குக் கிளை) தெரிவித்துள்ளது. (இ-3)


கண்ணீர் அஞ்சலி

அமரர் செ.விக்கினராஜா



(8309)

எமது பாடசாலையின் பல்துறை அபிவிருத்திக்கு பங்களித்துவரும் லயன் திரு.செ.மகாதேவா அவர்களின் அன்புச் சகோதரரும் எமது பாடசாலை அபிவிருத்திக்கு பேருதவி புரிந்தவருமான **செ.விக்கினராஜா** அவர்கள் லண்டனில் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு பாடசாலைச் சமூகம் அவரது குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ஸ்கந்தவரோதயா
ஆரம்பப் பாடசாலைச் சமூகம்,
கந்தரோடை, சுன்னாகம்.

கண்ணீர் அஞ்சலி

லயன் திருமதி
பூமாதேவி மகாதேவா



எமது பாடசாலையின் பல்துறை அபிவிருத்திக்கு பங்களித்துவரும் லயன் திரு.செ.மகாதேவா அவர்களின் அன்பு மனைவி **லயன் திருமதி பூமாதேவி மகாதேவா** அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு பாடசாலைச்சமூகம் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ஸ்கந்தவரோதயா
ஆரம்பப் பாடசாலைச் சமூகம்,
கந்தரோடை, சுன்னாகம்.

(8309)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நெடுந்தீவு பிரதேசமும் மூலிகைகளும் சித்தமருத்துவமும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஆரம்பத்தில் நெடுந்தீவு பிரதேசத்தின் சிறப்பை எடுத்து நோக்கில் நெடுந்தீவின் பெரியதுறை எனும் புகழ் பெற்ற துறைமுகத்தினூடாக புராதன காலத்தில் இந்தியாவின் இராமேஸ்வரத்திற்கு பால் கொண்டு செல்லப்பட்டதாகவும் பூமுனையில் இருந்து பூக்கள் கொண்டு செல்லப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. புராதன காலத்தில் மிகச்சிறப்பான மிருக வளர்ப்பும் காணப்பட்டது. இதனால் நெடுந்தீவிற்கு பசுத்தீவு அல்லது பாற்தீவு என்ற பெயர்களும் காணப்பட்டுள்ளன. சித்த மருத்துவத்தில் நெய் பல மருந்துகளில் சேர்க்கப்படுகின்றது. உதாரணமாக வல்லாரை நெய், தூதுவளை நெய் போன்ற பல்வேறு மருந்து நெய்களும் இலேகியங்களிலும் நெய் பிரதானமானதாக சேர்க்கப்படுகின்றது. இந்த வகையில் நெடுந்தீவு நெய்யிற்கு பிரதான கிராக்கி இன்றுவரை இருப்பதைக் காணலாம். அந்தளவிற்கு மிருகவளர்ப்பு சிறப்பாக புராதன காலத்தில் இருந்துள்ளது.

அதேபோல் வெள்ளாட்டுப் பால் பல மருந்துகளில் பல மூலிகை தாதுச்சரக்குகளில் சுத்தி முறைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் நெடுந்தீவு பிரதேச ஆட்டு இனங்கள் அவிழ்த்துவிட்டு பலவித மூலிகைகளை உணவாக உட்கொள்கின்றன. அந்த வகையில் நெடுந்தீவு ஆட்டுப்பாலிற்கு கிராக்கி உண்டு. உதாரணமாக வளரும் குழந்தைகட்கு ஆட்டுப்பால் சளி, இருமலை கண்டிக்கவும் உயிர்ச்சத்து D ற்காகவும் அவர்களுக்கு அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. அதேபோல் பாரம்பரிய உணவு முறைகட்கு சிறப்பம்சம் பொருந்தியது. அதனால் தான் பட்டினப்பாலை எனும் நூலில் குறிப்பிடப்படும் ஈழத்து உணவும் வேளத்து ஆக்கமும் என்ற ஈழத்து உணவு ஆரோக்கியமான உணவு முறைகளாகும்.

இதைவிட பனை, தென்னை, சிறுதானிய வகைகளான வரகு, கொள்ளு, சாமை போன்றவிளைபொருட்களும் பால், நெய், ஆடு, மாடு போன்றன ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றன.

ஒல்லாந்தர்களின் வருகைக்கு பின்பு இவர்கள் ஒல்லாந்து தேசத்திலுள்ள Delft (டெல்வ்ட்) என்ற தீவை நெடுந்தீவு ஒத்திருந்ததால் நெடுந்தீவிற்கு Delft என்று பெயரிட்டனர். இவர்கள் தான் படகோட்டி விளையாட்டிற்காக கால்வாய்கள் அமைத்து கடல்நீரை தரைக்குள் கொண்டுவந்தனர். தரைக்குள் கடல்நீர் கொண்டு வரப்பட்டதால் தரைக்கீழ் நன்னீர் ஊற்றுக்கள் உப்பு நீரானது.

எனவே குடிநீர் பிரச்சினை இன்று வரை காணப்படுகின்றது. எனவே மழைநீர் சேகரிக்கும் திட்டங்கள் அங்கு அமுல்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக சித்தர்கள் நிலவியல்பில்லாத நீர்தான் ஆரோக்கியத்திற்கு உகந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார்கள். இன்றைய காலகட்டத்தில் இது மிகவும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒன்றாகும். ஏனெனில் அசேதன உரப்பாவனைகள் விவசாயத்தில் அதிகரித்தமையால் உணவுகளும் நீரும் நஞ்சாகின்றது. எனவே மழைநீர் சேகரிக்கும் தொழில் நுட்பங்களை கையாண்டால் வறட்சியான காலத்தில் ஏற்படும் குடிநீர் பிரச்சினைகளையும் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.



இன்றும் நெடுந்தீவில் புதர் செடிகள் பல வளர்ந்து புதர் காடுகளாக காணப்படுகின்றன. இப்புதர்காடுகளுள் பல அரிய மூலிகை இலைகள் காணப்படுகின்றன. எனவே இக்காடுகளும் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும்.

இன்று எம்மக்களிடையே உயிர்கொல்லி நோயாக விளங்கும் தொற்றா நோய்களை தடுக்கக்கூடிய பல அரிய உணவுக்கூறுகள் அங்கு பரம்பிக்காணப்பட்டதுடன் பாவனையிலும் இருந்துள்ளது. உதாரணமாக சாமையரிசி, வரகரிசிச்சோறு பரவலாக பாவனையில் இருந்துள்ளது. ஔவையார் சொல்வது போல் வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும் நெடுந்தீவு மக்களால் உண்ணப்பட்டது. வரகரிசியானது நார்த்தன்மையானது இரத்தத்தில் மேலதிக கொலஸ்ரோலை சேரவிடாது. அத்துடன் மலமிளக்கியாகவும் தொழிற்படக்கூடியது. அத்துடன் சாமையரிசிச் சோற்றை பூசணிக்காய் கறியுடன் சேர்த்து சமைத்து உண்பார்கள். பூசணிக்காயை தோலுடன் சமைப்பார்கள். தோலில் நுண்ணிய உயிர்ச்சத்துக்கள் கிடைப்பதுடன் உயிர்ச்சத்து Aயும் அதிகளவில் காணப்படும். இது ஓர் எதிர் ஒட்சியேற்ற காரணியாக இருப்பதால் புற்றுநோய்கள் வராமல் தடுக்கும் தன்மையும் உண்டு. மேலும் பனை வளங்களை ஆரோக்கியமான உணவுமுறைகளாக பயன்படுத்தி உள்ளார்கள். உதாரணமாக பச்சை ஒடியல் மா இடிக்கப்பட்டு அரித்து அந்த மாவில் பிட்டு, கூழ் போன்ற உணவுகளை தயாரித்து பயன்படுத்தி உள்ளார்கள். இந்தப் பிட்டோடு முசுட்டை இலை, பெருங்குறிஞ்சா இலை போன்றவற்றையும் சேர்த்து அவித்துச் சாப்பிடுவதால் நீரிழிவு நோய்களையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தக் கூடியதாக உள்ளது. அத்துடன் நார்த்தன்மையான ஒடியல் மாவில் தயாரிக்கப்படும் உணவுமுறைகள் குடலில் புற்றுநோய் வராமல் தடுக்கக்கூடியதுமாகும். ஆனால் ஒடியல்கள் நன்றாக ஈரலிப்பு இல்லாமலும் நீல நிறமாகாமலும் உலர்த்தப்பட வேண்டும்.

மேலும் ஒடியல் மாவிலிருந்து தயாரிக்கப்படும் கூழ் ஆனது சிறந்த ஆரோக்கிய உணவாகும். ஒடியல் கூழானது சமிபாட்டை துரிதப்படுத்தி, அகத்துறிஞ்சலை சீராக்கி, மலத்தை இளக்கி குடலைப் பலப்படுத்தக்கூடிய எமது பிரதேச தட்ப வெப்பத்திற்குரிய ஓர் போசாக்கு உணவுமாகும். இதில் மருத்துவக் குணங்கள் மிகுந்த உள்ளி, இஞ்சி, மிளகு, முசுட்டை இலை, பலாக்கொட்டை, மரவள்ளிக்கிழங்கு போன்ற அரிய மூலிகை வகைகளும் சேர்க்கப்படுவது குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

எமது மருத்துவத்தில் கள் பாவனையும் உள்ளது. உடன் கள்ளானது அளவாக பயன்படுத்தப்பட்டது. வைரஸ் தொற்றுக்களை தடுக்கக் கூடிய தற்காகவும் மற்றும் இதிலிருந்து தயாரிக்கப்படும் கருப்பணியில் கருப்பிட்டி செய்கிறார்கள். இதில் இரும்புச்சத்து, கல்சியச்சத்து அதிகமாகக் காணப்படுவதுடன் மலமிலக்கி யாகவும் தொழிற்படும். இதிலிருந்து தயாரிக்கப்படும் பனை வெல்லம் அல்லது கல்லாக்காரம் மிகவும் மருத்துவக் குணங்கள் மிகுந்தது. சாதாரண சீனியை விட இதிலிருக்கும் சீனிச்சத்து குறைவாகவே அகத்துறிஞ்சப்படுகின்றது.

எனவே அதிலிருக்கும் இரும்புச்சத்து, கல்சியம் சத்திற்காக நீரிழிவு நோயாளிகளும் கல்லாக்காரத்தை அளவாக பயன்படுத்தலாம்.

1 கிலோ பனைவெல்லம் 800 ரூபாவரை விற்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பனங்கிழங்கிலிருந்து அவித்து உலர்த்தி தயாரிக்கப்படும் புளுக்கொடியல் மா, தேங்காய்ப்பூ, சர்க்கரை சேர்த்து குழைத்து சாப்பிடுவது முதியோருக்குரிய போஷணை உணவாக அமைவதுடன் பல்லில்லாதவர்களும் சாப்பிடலாம். மலத்தையும் இளக்கி வெளியேற்றக்கூடியதாகும். புராதன காலத்தில் இளைஞர்கள், யுவதிகள் அப்பிரதேசத்தில் பரவலாக பயன்படுத்தியதால் பற்களும் உறுதியாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நெடுந்தீவில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேற்பட்ட நிலம் கட்டாந் தரையாகக் காணப்படுகின்றது. பற்றைக் காடுகளும் சிறு மரங்களும் காணப்படுகின்றன. இவை அனைத்துமே மூலிகைகளாகும். எமது வெளிக்கள செயற்பாட்டின்போது 148 இன மூலிகைகள் இனங் காணப்பட்டுள்ளன. கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் பரம்பிக்காணப்படும் சில மூலிகைகளில் அயடீன் சத்தும் அதிகமாக காணப்படுகின்றன.

இவற்றுள் அந்நிய செலாவணியை ஈட்டித்தரக்கூடிய மூலிகைகளாக கற்றாழை, நிலாவரை போன்றன காணப்படுகின்றன. இதில் கற்றாழை புற்றுநோயை எதிர்க்கக்கூடிய மூலிகையாக பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

இந்த கற்றாழைப்பூ, சோறு (Mucilage) போன்ற வற்றில் கறி சமைத்து உண்பதால் குடல்புண், மூலரோகம் போன்றன நீங்கும். நிலாவரையில் தோல் நோய்களை குணமாக்கும் தன்மையுண்டு. அத்துடன் தோலில் ஏற்படும் அரிப்பையும் நீக்கக்கூடியது.

அத்துடன் வீணாலைக்கிழங்கு/காட்டுக்கருணை இதன் குமிழ் (Bulb) பகுதியையும் தண்டையும் சேர்த்து கறி சமைத்து உண்பதால் மூலரோகம், குடற்புண் நீக்கி உடல் வேதனையும் தீரும். இதன் குமிழ்க்கிழக்கிலிருந்து மூலரோகத்திற்கு லேகியம் செய்வதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

நெடுந்தீவு பிரதேசத்தில் காணப்படும் அல்லற் கிழங்கானது அப்பிரதேச மக்களால் உடற்பலத்திற்காக பயன்படுத்தப்பட்டது. அல்லற் கிழங்கு சாப்பிட்டால் கல்லையும் புரட்டுவான் என்பது முதுமொழி. அவ்வளவிற்கு உடலிற்கு பலத்தைக் கொடுக்கக் கூடியது. ஆனால் $100^{\circ}C$ யில் நன்றாக 3,4 முறை அவித்தே இக்கிழங்கை பயன்படுத்த வேண்டும். தோலைச் சீவியே பயன்படுத்தல் வேண்டும்.

மேலும் இப்பிரதேசத்தில் பரம்பிக் காணப்படும் தும்பங்காய் ஆனது குடற்புழுக் களை நீக்கக்கூடியது. அத்துடன் நீரிழிவு நோயாளிகளில் இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்படுத்தக்கூடியது.

மழைக்காலங்களில் புதர் காடுகளில் இவ் ஏறுகொடிகள் செழித்து தானாக வளர்ந்து நிறைய காய்கள் தும்புகளோடு அழகாக காய்த்திருக்கும். தாராளமாக பயன்படுத்தலாம். சிறந்த மூலிகையாகும். மழைக்காலத்தில் அதிகளவு கிடைக்கும் போது வத்தலாக்கி சேகரித்து மத்திய பருவ காலங்களிலும் பயன்படுத்தலாம்.

இங்கு 400 வயதிற்கு மேற்பட்ட பெருக்குமரம் அல்லது ஆனைப்புளியமரமும் காணப்படுகின்றது. இதன் இலை பட்டை பழச்சாறு (புளி) ஆகியன மருத்துவகுணமிக்கவை. இதன் இலைகளை அவித்து கை, கால் , வலி, வீக்கம் என்பவற்றிற்கு ஒற்றடமிட்டு பின்பு அதையே கட்டலாம். இதன் இலைகளிலிருந்து சாறு எடுத்து சுக்கை அரைத்து ஒற்றடமிட கீழ்வாயு நீங்கும். இதன் புளியையும் அத்திப்பழமும் சேர்த்து மணப்பாகு செய்து பயன்படுத்த உடம்பிற்கு உற்சாகத்தைக் கொடுப்பதோடு உடல்வெப்பத்தை தணித்து காய்ச்சலின் போது ஏற்படும் நீர் வேட்கையையும் குறைக்கும். இவ் அரிய மரங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும்.

நெடுந்தீவு பிரதேசத்தில் வேம்பும் ஓர் சிறந்த மருத்துவ குணமிக்க மரங்களாக பரம்பிக்காணப்படும். வயதான வேம்பின் பட்டைகளை குடிநீராக காய்ச்சி பருக காய்ச்சலை தணிக்கும். உடம்பில் வேறு நோய்கள் அணுக விடாமல் தணிக்கும். வேப்ப மரத்திலிருந்து சுரக்கப்படும் கள்ளானது உடலிற்கு நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கக்கூடியது. இதன் கள்ளை அறை வெப்பநிலையில் 6 மாதகாலம் பழுதடையாமல் வைத்தும் பயன்படுத்தலாம். அத்துடன் வேப்ப மரப் பட்டையிலிருந்து மாற்று மருந்து முறைகளில் பல வேதியற் சத்துக்கள் பிரித்தெடுக்கப்படுவதால் மேலைத்தேய நாடுகளில் வேப்ப மரத்திற்கு கிராக்கியும் அதிகமாகும்.

இயற்கையாகவே இவ் வளங்களுடன் கூடிய நெடுந்தீவு பிரதேசமானது இன்றும் இயற்கை பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படலாம். ஏனெனில் மற்றைய பிரதேசங்களை போலல்லாமல் இப்பிரதேசத்திற்கு செயற்கையான உணவுகள், பொருட்கள் போன்றவற்றை அங்கு செல்வதைத் தடை செய்வதால் இயற்கையான வளங்களை உணவுமுறைகளை இன்றும் தக்கவைத்துக் கொள்ளலாம்.

மேலும் நெடுந்தீவு பிரதேசத்தில் விளையும் நெல்லரிசிச் சோற்றிற்கு கடலின் உப்புத்தன்மையும் சேர்வதால் சுவை அதிகம். அத்துடன் புராதன காலத்தில் வயலிற்கு உரமாக காவிளாய், அவுரி, பூவரசு போன்ற குழைகளையே பயன்படுத்தியுள்ளார்கள். இவையாவும் இயற்கை பசளையுமாகும்.

நெடுந்தீவு பிரதேசத்தில் அதாவது குதிரைகளின் பரம்பலும் அதிகம் காணப்படும். அதே நேரம் கொள் ளைத் தான் உணவாக கூடுதலாகப் பயன்படுத்துகின்றன. இந்தக் கொள்ளானது சிறு தானியங்களுள் நார்த் தன்மையானதும் இரத்தத்தில் உள்ள கொலஸ்ரோலின் அவையும் கட்டுப்படுத்தக் கூடிய தன்மையும் உடையது ஆகும். ஆகவே சோறு சமைக்கும் போது ஒரு சுண்டு அரிசிக்கு ஒரு சிறங்கை கொள்ளைச் சேர்த்து சோறு சமைத்து சாப்பிடலாம். அல்லது கொள்ளை அரவல் நொருவலாக இடித்து 8 g இற்கு 200ml சுடுநீர் விட்டு 20 நிமிடம் மூடி ஊற வைத்து அந்த நீரை அருந்தி ஊறிய கொள்ளையும் சாப்பிட்டுவர உடற் பருமன் குறையும். இரத்தத்தில் கொலஸ் ரோலின் அளவும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். ஆகவே குதிரைகள் சாப்பிடுவதனால் அந்தப் பிரதேசத்தில் கொள்ளின் விளைச்சல் அதிகமாகவே காணப்படும்.

கூடுதலாக கொள்ளுச் செடியின் விதைகள் நிறைய அளவில் மண்ணில் விழுந்து காணப்படுவதனால் சேகரிக்கும் போது நன்றாகக் கழுவி (4 அல்லது 5 முறை) பயன்படுத்த வேண்டும்.

எனவே இத்தீவானது இயற்கைத் தீவாக பிரகடனப்படுத்தப்படுவதுடன் இங்குள்ள வளங்கள் பயன்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டியவையுமாகும்.

# தொண்டு நிறுவனங்களுக்கு தனது சம்பளத்தை நன்கொடையாக வழங்க ஜனாதிபதி ட்ரம்ப் முடிவு




சம்பளப் பணத்தை தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடையாக அளிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவெடுத்துள்ளதாக அவரது செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் தன்னுடைய தேர்தல் பிரசாரத்தின் போது ஜனாதிபதியாக பொறுப்பேற்றால் ஜனாதிபதிக்கான சம்பளத்தை பெற மாட்டேன் என கூறியிருந்தார்.

ஆனால், ஜனாதிபதியாக இருப்பவர் கண்டிப்பாக சம்பளம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது அமெரிக்க அரசியல் சாசனத்தில் உள்ள விதி என அப்போது சிலரால் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்நிலையில், ட்ரம்புக்கு வழங்கப்படும் ஆண்டு சம்பளமான சுமார் 4 இலட்சம் அமெரிக்க டொலர்களை இந்த வருடத்தின் இறுதியில் தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடையாக அளிக்க அவர் முடிவெடுத்துள்ளதாக ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் சீன் ஸ்பைசர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு அளித்த உறுதிமொழியை ட்ரம்ப் நிறைவேற்றியுள்ளதாகவும் ஸ்பைசர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன்.எப்.கென்னடி தன்னுடைய பதவிக் காலத்தில் இதேபோன்று சம்பளத்தை தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடையாக அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# சிரியா போரில் 650 சிறார்கள் உயிரிழப்பு

சிரியா போரில் 650 இற்கும் மேற்பட்ட சிறார்கள் உயிரிழந்துள்ளதாகவும், அதில் மூன்று பங்கிற்கும் அதிகமான குழந்தைகள் பள்ளியிலும் அல்லது அதற்கு அருகாமையிலும் இருந்ததாகவும் ஐ.நாவின் குழந்தைகளுக்கான முகமை யுனிசெஃப் தெரிவிக்கிறது.

மேலும் பிற நூற்றுக் கணக்கான குழந்தைகள் நோயில் இறந்ததாகவும் ஆனால் போதிய மருத்துவ வசதிகள் இருந்திருந்தால் அவற்றைத் தடுத்திருக்க முடியும் எனவும் சமீப காலங்களில், அதிகமான உயிர்களை பலிவாங்கிய உள்நாட்டு போரான சிரியா போரின் பாதிப்பு குறித்து வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. (இ-12)




# அமெரிக்க - சீன ஜனாதிபதிகள் அடுத்த மாதம் சந்திப்பது உறுதி





(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோர் அடுத்த மாதம் முதன் முறையாக சந்தித்துப் பேச இருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்ற டொனால்ட் ட்ரம்ப், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் -ஐ முதன் முறையாக அடுத்த மாதம் 6 மற்றும் 7ஆம் திகதிகளில் சந்தித்துப் பேச இருப்பதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின.

இத்தகவலை உறுதி செய்துள்ள வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சீன் ஸ்பைசர், "இரு தலைவர்களும் அடுத்த மாதம் சந்தித்து பேசுவது உறுதி. ஆனால், திகதி இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

திகதிகள் முடிவு செய்யப்பட்ட பின்னர் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும்" எனத் தெரிவித்துள்ளார்.

இரு தலைவர்களின் சந்திப்பின் போது, சர்வதேச நாடுகளின் கண்டனத்தை பொருட்படுத்தாமல் ஏவுகணைகளைச் சோதித்து வரும் வட கொரியா மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-12)

# ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்த நகரை கைப்பற்றிய துருக்கி ஆதரவு கிளர்ச்சியாளர்கள்





(அங்காரா)

சிரியாவின் தெற்கு பகுதியில் உள்ள ஐ.எஸ்.தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த முக்கிய நகரை துருக்கி அரசின் ஆதரவு பெற்ற சிரிய கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாக துருக்கி ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சிரியாவில் ஆளும் பஷார் அல் ஆஸாத் அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கிளர்ச்சியாளர்களுக்கு துருக்கி உள்ளிட்ட சில நாடுகள் ஆதரவை அளித்து வருகின்றன.

மேலும், ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தினர் சிரியாவின் தெற்கே துருக்கி நாட்டு எல்லையோரம் உள்ள சில நகரங்களை ஆக்கிரமித்து தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இங்கிருந்தவாறு துருக்கி நாட்டினுள் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தினர் தீவிரவாத தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

தங்களது நாட்டின் எல்லைப்பகுதியில் முகாமிட்டுள்ள அவர்களை ஒடுக்குவதற்காக துருக்கி இராணுவம் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இந்நிலையில், துருக்கி இராணுவ உதவியுடன் சிரிய கிளர்ச்சியாளர்கள் தெற்கு சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினரின் வசமிருந்த மான்பிஜ் நகரை கைப்பற்றியுள்ளனர். இந்த தகவலை துருக்கி ஜனாதிபதி ஏர்துவான் அரசுத் தொலைக்காட்சியில் மக்களுக்கு தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். அமைப்பினருக்கு எதிரான புதிய முன்னேற்ற நடவடிக்கையாக இது இருக்கும் எனவும் ஏர்துவான் தெரிவித்துள்ளார்.

மேலும், சிரியாவின் தெற்கு பகுதியை முழுமையாக ஐ.எஸ். அமைப்பினரிடம் இருந்து மீட்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார். (இ-12)

# பிரெக்சிற் சட்டமூலத்தை நிறைவேற்ற பிரித்தானிய நாடாளுமன்றம் ஒப்புதல்



பலரின் கவனத்தை ஈர்த்த பிரெக்சிற் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு பிரித்தானிய நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு விலகுவது தொடர்பில் லிஸ்பன் விதியின் 50ஆவது சரத்து விரைவில் செயலாக் கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலத்திற்கு பிரித்தானிய மகாராணி எலிசபெத் ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் அது சட்டமாக்கப்படும் எனவும் அடுத்தகட்ட நடவடிக்கையாக பிரதமர் தெரேசா மே, பிரெக்சிற் பேச்சுவார்த்தைகளை முறைப்படி ஆரம்பிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)

# மலேசியாவில் ஐ.எஸ். அமைப்பினருடன் தொடர்பு வைத்திருந்ததாக 7 பேர் கைது

இஸ்லாமிய அரசு என்று தங்களை அழைத்துக் கொள்ளும் அமைப்புடன் தொடர்புடையதாக சந்தேகித்து, பிலிப்பைன்ஸ் நார்ட்டைச் சேர்ந்த ஐவர் உட்பட ஏழு பேரை கைது செய்துள்ளதாக மலேசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலான கைது, கிழக்கு மாநிலமான சபாவாவின் போனியோ தீவில் கடந்த வாரம் நடந்ததாக பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோலாலம்பூர் விமான நிலையத்தில் பணி புரியும் குடியேற்ற அதிகாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.



இஸ்லாமிய அரசு என்று தங்களை அழைத்துக் கொள்ளும் அமைப்புடன் தொடர்புடைய மலேசியா மற்றும் இந்தோர்னேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தனிநபர்கள், முறையான பயண ஆவணங்கள் இல்லாமல் சபாவாவின் வழியாக பிலிப்பைன்ஸிற்குள் நுழையவும், வெளியே செல்லவும் உதவி செய்ததாக அவர் மீது சந்தேகங்கள் எழுந்தன.

கடந்த வருடங்களில், பெரும்பான்மையாக முஸ்லிம் மக்கள் வாழும் நாடான மலேசியாவில் ஐ.எஸ். அமைப்பினருடன் தொடர்புடைய தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகித்து 250இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# மத்திய அமைச்சர் இராஜினாமா; கோவா முதல்வராகிறார் பாரிக்கர்



கோவாவில் புதிய திருப்பமாக சிறிய கட்சிகள் மற்றும் சுயேச்சைகளின் ஆதரவை பெற்று பா.ஜ.க ஆட்சியமைக்க உரிமை கோரியுள்ளது. மத்திய அமைச்சர் மனோகர் பாரிக்கர், அங்கு முதலமைச்சராகிறார். சிறிய கட்சிகள் நிபந்தனையை ஏற்று, மனோகர் பாரிக்கரை அம்மாநில முதல்வராக்க பா.ஜ.க தலைமை ஒப்புதல் அளித்துள்ளது. இதையடுத்து, அவர் தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார். இதே போல், மணிப்பூரிலும் சிறிய கட்சிகள் ஆதரவுடன் ஆட்சி அமைக்க பாஜக தீவிரம் காட்டி வருகிறது. கோவா மாநிலத்தில் 40 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் எந்தவொரு கடசிக்கும் பெரும் பான்மை கிடைக்கவில்லை. முந்தைய சட்டப்பேரவை தேர்தலில் 21 இடங்களை கைப்பற்றி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி கட்டிலில் அமர்ந்த பாஜகவால் இந்த முறை 13 இடங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. அதேசமயம், முக்கிய எதிர்க்கட்சியான காங்கிரசும் தனிப்பெரும் பான்மைக்கான இடங்களை கைப்பற்றவில்லை. அந்த கட்சி 17 தொகுதிகளை மட்டுமே தன்வசப்படுத்தியுள்ளது.

சுயேச்சை எம்.எல்.ஏ ரோகனின் ஆதரவு காங்கிரசுக்கு உள்ளது. எனவே காங்கிரசுக்கு ஆட்சி அமைக்க இன்னும் 3 இடங்கள் மட்டுமே தேவை. என்.சி.பி எம்.எல்.ஏ சர்ச்சில் அலிமாவோ காங்கிரஸ் பக்கம் செல்ல வாய்ப்புள்ளது. இதனால் மேலும், 3 எம்.எல்.ஏக்களின் ஆதரவை பெறும் முயற்சியில் காங்கிரஸ் தீவிரமாக இறங்கி உள்ளது. அதேவேளையில் பாஜவும் ஆட்சியை பிடிக்க கடும் முயற்சி செய்து வருகிறது. சுயேட்சை எம்.எல்.ஏ. கோவிந்த் கவாடி பாஜவுக்கு ஆதரவு அளித்துள்ளார். இதனால் பாஜவின் பலம் 14 ஆக உயர்ந்துள்ளது.

எம்.ஜி.பி. நிபந்தனை: சட்டப்பேரவை தேர்தலுக்கு முன் பாஜவுடனான கூட்டணியை முறித்து கொண்ட மகாராஷ்டிரவாதி கேமந்தக் கட்சி (எம்.ஜி.பி.) தற்போது பாஜவுக்கு ஆதரவு அளிக்க தயார் என்று தெரிவித்துள்ளது. அதேசமயம் ஒரு நிபந்தனையும் விதித்தது. எம்.ஜி.பி. தலைவர் சுதின் தவாலிகர் கூறுகையில், முதல்வர் வேட்பாளராக மனோகர் பாரிக்கர் அறிவிக்கப்பட்டால் பாஜவுக்கு ஆதரவு அளிக்கதயார். எங்களது ஆதரவு பாஜவுக்கு கிடையாது. ஆனால், பாரிக்கருக்கு ஆதரவு உண்டு" என்று தெரிவித்தார். (இ-12)

# அ.தி.மு.க.வின் ஆட்சியை விரைவில் அகற்றுவோம்

## ஸ்டாலின் நம்பிக்கை



அதி.மு.கவினது ஆட்சி யை தமிழகத்திலிருந்து அகற்றுவதற்கு தி.மு.க தொடரந்தும் போராடும் என தி.மு.க செயல் தலைவர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள், தட்டுப்பாடு இன்றி வழங்க வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் தி.மு.க.வினர் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தியிருந்த போது கைது செய்யப்பட்ட தொண்டர்களைச் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மதுரவாயல், மண்ணடி உள்ளிட்ட பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கைது செய்து, சமுதாய நலக்கூடங்களில் அடைத்து வைத்திருக்கின்றனர்.

அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்தது கண்டனத்திற்குரியது எனவும், தமிழகத்தில் செயற்பட முடியாத அரசு நடைபெற்று வருவதாகக் குற்றம்சாட்டியதுடன், இந்த அரசை அகற்ற தி.மு.க தொடர்ந்தும் போராட்டங்களை நடத்தும் எனவும் ஸ்டாலின் தெரிவித்தார். (இ-12)

# கடலில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழக மீனவரின் உடல் அடக்கம்



இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறப்படும் தங்கச்சிமடம் மீனவர் பிரிட்ஜோவின் உடல் நேற்று முன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கடந்த வாரம் கடலில் சுட்டுக்கொல்லப்பட்ட பிரிட்ஜோவின் உடல் இராமேஸ்வரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இறந்த மீனவரின் உடலைப் பெற்றுக்கொள்ள மறுத்த உறவினர்களும் மீனவர்களும் கடந்த ஏழு நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

போராட்டத்தை கைவிடுமாறும், மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீத்தாராமன் மற்றும் பொன் இராதாகிருஸ்ணன் ஆகியோர் மேற்கொண்ட சமரச பேச்சுவார்த்தைகளை அடுத்து போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

இதனையடுத்து உடலை வைத்திய சாலையில் இருந்து ஊர்வலமாக அவரின் சொந்த ஊரான தங்கச்சி மடத்திற்கு மீனவர்களும் உறவினர்களும் எடுத்து வந்து அங்கு அஞ்சலிக்கு வைத்தனர். பெருந்திரளான மக்களும் மீனவர்களும் கொல்லப்பட்ட பிரிட்ஜோவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலியை அடுத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட பூதவுடல் தங்கச்சிமடம் அந்தோனியார் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (இ-12)





யாழ்.நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான மாணவ முதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் யாழ். இந்து மகளிர் கல்லூரி உதவி அதிபர் கௌசி பாலினி கோடீஸ்வரன் மாணவர்களுக்கு சின்னம் சூட்டுவதை படங்களில் காணலாம்.

# எமது கலாசார சீரழிவுக்கு நாம்தான் பொறுப்பாளிகள்

## சாந்தி எம்.பி. தெரிவிப்பு



(சாவகச்சேரி)

யுத்தத்திற்கு முன்னரான எமது சமூகம் பாதுகாப்பாக இருந்தது. இன்று எல்லாம் திசைமாறி கலாசார பிறழ்வுகள் இடம் பெறுகின்றன. இவற்றுக் கெல்லாம் நாம் யார் மீதும் குற்றம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

நாங்கள் தான் பொறுப்புக் கூறவேண் டிய வர்கள் எனப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற வட மாகாண முதலமைச்சர் அமைச்சின் சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

எமது பெண் கள் தாம் நினைத்ததைப் போல் உடை உடுத்துவதோ அல்லது தாம் எங்கு செல்கிறோம் என்பதை கண வன் கேட்கக் கூடாது என் பதோ பெண் விடுதலை அல்ல.

அது ஆணாதிக்கத்திற்கு எதிராக சமத்துவமானதாக இருக்க வேண்டும்.

இன்று 90 நிமிடத்திற்கு ஒரு பெண் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றாள்.

எனவே சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி கடுமையான சட்டங்களை இயற்றவேண்டும்.

பாடசாலைகளில் துஷ்பிரயோகம் இடம் பெறும் போது சம்பந்தப்பட்டவர்களை கஷ்டப் பிரதேசத்திற்கோ அல்லது பின் தங்கிய கிராமப் பாடசாலைகளுக்கோ மாற்றுகின்றனர்.

இது அவர்களுக்கான தண்டனையா அல்லது பின் தங்கிய பிரதேசங்களில் துஷ்பிரயோகம் இடம் பெற்றால் வெளியே தெரிய வராது என்பதான ஊக்குவிப்பா எனவும் 'கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு துஷ் பிரயோகங்களில் ஈடுபடுபவர்களை உடனடியாகவே அரச வேலைகளில் இருந்து நிறுத்துவதற்கான கடுமையான சட்டங்கள் ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவிகள் திருப்தியானதாக இல்லை. அவை அவர்களின் தேவை முயற்சி தொடர்பாக வழங்கப்படுவதில்லை.

வடக்கிலே பல மாதர் அமைப்புக்கள் திறம்பட இயங்குகின்றன.

வெறுமனே கோழிக் குஞ்சுகள், கூடுகளை வழங்காமல் இவ் வாறான அமைப்புக்களோடு இணைந்த விதத் தில் நிலைத்து பெரும் வருமானத்தை ஈட்டக்கூடிய வாழ்வாதார செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-89)

# ஜப்பானின் இராட்சத நாசகாரி போர்க்கப்பல் இலங்கை வருகிறது



(கொழும்பு)

ஜப்பானியக் கடற்படையின் மிகப்பெரிய உலங்கு வானூர்தி தாங்கி, நாசகாரிப் போர்கப்பலான இசுமோ, இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இசுமோ என்ற இந்தப் பாரிய போர்க்கப்பல் எதிர்வரும் மே மாதம் தென் சீனக் கடல் வழியாக மூன்று மாதப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தியப் பெருங்கடலில் எதிர்வரும் ஜூலை மாதம் நடக்கவுள்ள அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கும் மலபார் கூட்டுப் பயிற்சியில் இந்த ஜப்பானிய போர்க் கப்பல் இணைந்து கொள்ளவுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இசுமோ தரித்து நிற்கவுள்ளது.

248 மீற்றர் நீளம் கொண்ட உலங்குவானூர்தி தாங்கி நாசகாரி கப்பலான இசுமோ இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே வெள்ளோட்டம் விடப்பட்டது.

இதில் 7 நீர்மூழ்கி எதிர்ப்பு உலங்கு வானூர்திகளும், இரண்டு தேடுதல் மீட்பு உலங்கு வானூர்திகளும் தரித்திருக்கும்.

எனினும் 28 விமானங்களை நிறுத்துகின்ற வசதிகள் இந்தக் கப்பலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது உலகப் போர் முடிவுக்கு வந்த பின்னர் ஜப்பானின் கடற்படை பலத்தை வெளிப்படுத்தும் முதல் பயணமாக, இசுமோவின் இந்தப் பயணம் கருதப்படுகிறது. (இ-3)

## துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்க மாட்டார்கள்

# இலங்கைக் கடற்படையை நியாயப்படுத்தினார் பிரதமர்



(கொழும்பு)

பாக்கு நீரிணையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்தொடர்பாக, இலங்கை கடற்படையை நியாயப்படுத்தும் வகையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங்கிடம் கருத்து வெளியிட்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதி இரவு கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழ் நாட்டு மீனவர் ஒருவர் இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, உடனடியாக இந்தச் சம்பவம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போதே, இலங்கை எல்லைக்குள் மீனவர்கள் அத்துமீறும் போது, அவர்களை கடற்படையினர் கைது செய்வரே தவிர, துப்பாக்கிச் சூடு நடத்தமாட்டார்கள் என்று பிரதமர் நியாயப் படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கைக் கடற்படை நடத்தும் விசாரணைகளுக்குச் சமாந்தரமாக, ஜனாதிபதி மைத்திரியின் உத்தரவின் பேரில் பாதுகாப்பு அமைச்சும் தனியான விசாரணையை நடத்தும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

பிரதமரின் இந்தப் பதிலை அடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பாக இந்தியா உன்னிப்பாக அவதானிக்கும் என்று இந்தியத் தூதுவர் தெரிவித்துள்ளார். (இ-3)

# அத்துகலவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஆரியரத்ன அத்துகல உள்ளிட்ட ஐவருக்கு எதிரான வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணியாளர்கள் நால்வர் மீது, கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, தாக்குதல் நடத்தியமை மற்றும் அவர்களை அச்சுறுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளே இந்த ஐவர் மீதும் சுமத்தப் பட்டுள்ளது.

இந்த வழக்கை, சமரசப் படுத்த முடியுமா என்பது தொடர்பில், கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில், நேற்று முன்தினம் பரிசீலிக்கப்பட்டது.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஆரியரத்ன அத்துகலவுக்கு மேலதிகமாக, முன்னாள் பணிப்பாளர் நாயகம் தேவப்பிரிய அபேசிங்ஹ மற்றும் ஜி.டி. சுகதபால ஆகியோருக்கு எதிராக நான்கு வழக்குகள் தற்போது, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த வழக்குகளின் பிரதிவாதிகள், திறந்த நீதிமன்றத்தில் பகிரங்கமாக மன்னிப்பு கோருவதற்கு தயாராயின், இந்த வழக்குகளை வாபஸ் பெற்றுக்கொள்வதற்கும், சமரசம் செய்துகொள்வதற்கும் தாம் தயாரென்று முறைப்பாட்டாளர் தரப்பினால் அறிவிக்கப்பட்டது.

எனினும், பிரதிவாதிகள் அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. ஆகையால், வழக்கு விசாரணை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (இ-3)

# தாதியர் பணிப்பகிஷ்கரிப்பு 80 வீதம் தோல்வி

## சமன் ரத்னப்பிரிய மகிழ்ச்சி

(கொழும்பு)

அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் முன்னெடுத்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் 80 வீதம் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக அரச தாதியர் அதிகாரிகளின் சங்கத் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தில் பெரதெனிய வைத்தியசாலையில் இரண்டு தாதியர் மாத்திரமே இணைந்து கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏனைய வைத்தியசாலைகளிலும் இதே நிலையில் தான் காணப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளாத சகல தாதியர்களுக்கும் தமது சங்கம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும், அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் உண்மையான சுயரூபம் இந்தப் போராட்டத்தில் வெளிப்பட்டதாகவும் ரத்னப்பிரிய மேலும் தெரிவித்தார். (இ-3)



# இன்று ஒரு தகவல்

## ஓரே பிள்ளையா?

இந்த விடயத்தில் குடும்ப நலத்துறையின் கருத்துக்கு நேர் எதிரான கருத்தைக் கொண்டவன் நான். என் பார்வையே வேறு.

என் கோணங்கள் என்ன என்பதைச் சொல்கிறேன்.

என் உறவினர் ஒருவர் பேச்சுவாக்கில், தன் மகனுக்கு தம்பி, தங்கை எல்லாம் வேண்டாம் ஒரே பிள்ளை போதும் என்றார்.

இலேசாகப் புன்னகை செய்து விட்டுப் பேச ஆரம்பித்தேன்.

நீங்கள் தயவு செய்து உங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். அந்தக் கால ஆசாமி போல் ஏழெட்டு பெற்றுக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லவே மாட்டேன். ஆனால் இன்னும் ஒரு குழந்தை அவசியம்.

இதற்குக் காரணம் இருக்கிறது.

நீங்கள் பலரோடு பிறந்திருப்பதால் உங்களுக்கு அந்த மனக்குறை தெரியவில்லை.

உங்கள் மகன் தனியொருவனாக விடப்படுவது அவ்வளவாக விரும்பத்தக்கதல்ல.

ஆத்மார்த்தமாக எதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றாலும் கூடப் பிறந்தவர்கள் போல் எவரும் இல்லை.

நண்பர்கள்? மனைவி? எல்லோரையும் சேர்த்தே சொல்கிறேன். இவர்கள் கூட அடுத்த கட்டத்தில்தான் இருப்பார்கள். இவர்கள் நாமாக உருவாக்கிக் கொண்டவர்கள். கூடப் பிறந்தவர்கள் என்பது அப்படி அல்ல. அது இயற்கையே அமைத்துக் கொடுத்துள்ள பிணைப்பு.

ஒருசில கருத்து வேறுபாடுகளால் சில நேரங்களில் கூடப்பிறந்தவர்கள் ஜென்ம விரோதிகளாகக் காட்சி அளிக்கலாம். எல்லா விடயத்திலும் உண்மை அதுவல்ல. தனிப் பிள்ளையாகப் பிறந்த பலரிடம் நான் பேசிப் பார்த்திருக்கிறேன்.

எல்லாச் சொத்தும் உங்களுக்கு. பங்கு கேட்க யாரு இருக்கிறார்கள்? என்று கூடச் சிலரைச் சீண்டிப் பார்த்திருக்கிறேன். என்ன இருந்து என்ன பயன்? நான் தனி மரம். இது என் வாழ்வின் நிரந்தர ஏக்கம் என்று தான் அவர்கள் புலம்பித் தள்ளியிருக்கிறார்கள்.

அப்படியா? என்றார்.

பொய்யா சொல்றேன்? அத்தனையும் சத்தியமான வார்த்தைகள். தனியே பிறந்தவர்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இந்தத் தேவையை உணரும்படி தான் வரும். திருமணம் அல்லது மரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கூடப்பிறந்தவர்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துச் சடங்குகளை அமைத்திருக்கிறார்கள் பாருங்கள்! ஆயிரம் பேர் வந்தாலும் இதையெல்லாம் உரியவர்கள் செய்வதில் தானே அர்த்தம் இருக்க முடியும்? உங்களுக்கு பிறகு உங்கள் செல்வன் தனித்து விடப்படக் கூடாது. அவனுக்கு நல்லதொரு துணையை நீங்கள் ஏற்படுத்தித்தர வேண்டும். நீங்கள் அவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளுள் இதுவும் ஒன்று.

என் வாதம் அவரைக் கவர்ந்திருக்க வேண்டும்.

நம்பினால் நம்புங்கள்!

பத்தாவது மாதம் அவருக்கு ஒரு மகள்.

நான் என் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. என்னைப் போல் அதிர்ஷ்டம் செய்தவர்கள் கிடையாது. நான் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

இதற்கு என்று சந்தோசப்படுபவர்கள் எவரேனும் இருந்தால் தயவு செய்து சொல்லுங்களேன்.

லேனா தமிழ்வாணன்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் -பகுதி 2

01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு உரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

அது அடர்த்தியான பெருங்காடு. எம்மைப் பிரிந்து சென்ற நண்பன் அக்காட்டுக்குள் இருக்கக் கூடும் எனக் கருதி அதற்குள் சென்றோம். பல்வகை விலங்குகளின் சத்தங்கள் கேட்டன. கரடிகள் உறுமின. கழுதைகள் கத்தின. நரி ஊளையிட்டது. குளத்துக்குள் இருந்த எருமைகள் எக்காளமிட்டன. மிகத் தொலைவில் காட்டுநாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

1. தன்மைப் பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக ..............................
2. பகைவன் என்பதன் எதிர்ச்சொல் யாது? ..............................
3. பந்தியில் குறிப்பிடப்படும் பிராணிகள் 3 எழுதுக..............................
4. பெருமை + காடு எனும் சொல்லைச் சேர்த்தெழுதுக..............................
5. எருமைகள் எங்கிருந்து எக்காளமிட்டன?..............................
6. விசிறியும், மடக்கேறும் இடம்பெறும் சொல் எது?..............................
7. அஃறிணை ஒருமை வினைச்சொல் ஒன்று எழுதுக..............................

02. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தினை எழுதுக.
1. நாக்குப் புரளுதல் : ..............................
2. வாட்ட சாட்டம் : ..............................
3. கண் மூடுதல் : ..............................

03. பின்வரும் விடுகதைகளுக்குரிய விடைகளை எழுதுக.
1. அள்ள அள்ளப் பெரிதாகும். அது என்ன? ..............................
2. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான். அவன் யார்? ..............................
3. சுண்டி விட்டால் இரத்தம் வராது. வெற்றி, தோல்வி வரும். அது என்ன? ...........

04. சரியான சொல்லைத் தெரிவுசெய்து கீறிட்ட இடத்தை நிரப்புக.
1. அம்மா திருமணத்திற்கு ...................... சேலை வாங்கினார். (கூரைச், கூறைச்)
2. தம்பி மாடிப்படியில் இருந்து ......................வந்தான். (இறங்கி, இரங்கி)

05. பின்வரும் பாடலில் விடுபட்ட பகுதியைப் பூர்த்தி செய்க.

நூலகம் என்பது தேன்கூடு!
நூல் ஒவ்வொன்றும் தேன்துளிகள்!
..............................
நூறாயிரமாம் நன்மலர்கள்!

06. வேறுபட்ட சொல்லைத் தெரிவுசெய்து கோடிடுக.
1. இன்னல், இன்பம், உவகை
2. வனம், ஆகாயம், காடு

07. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
1. பாபுவும் / ஒரே / கிராமத்தில் / பிரபுவும் / வாழ்ந்தவர்கள்
..............................
2. ஆண்டு / தசரத மன்னன் / நாட்டை / வந்தான் / கோசல
..............................

08. "எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.........."

இப்பாடலைப் பாடியவர் யார்? ..............................

09. பின்வரும் வாக்கியங்களைத் திருத்தி எழுத்து வடிவில் எழுதுக.
1. இண்டைக்குத் திருவிழா ..............................
2. கனக்க ஆக்கள் வருவினம். ..............................

10. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ் கருத்தை எழுதுக.
1. றோஹல : ..............................
2. பரி (G)கண(க்) க காமரய : ..............................

11. பின்வரும் சிங்கள வசனத்தின் தமிழ் கருத்தை தமிழில் எழுதுக.
1. அ (ம்) (B) ப ரஸய் : ..............................

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.
1. Toilet : ..............................
2. Chalk : ..............................

13. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.
1. God bless you : ..............................

14. இன்று நவீன உலகில் நாம் தகவல்களை அறிந்து கொள்வதில் முக்கிய இடம் வகிப்பது தொலைக்காட்சி ஆகும். "தொலைக்காட்சியின் பயன்கள்" என்னும் தலைப்பில் எழுவாய், பயனிலை திருத்தமாக அமையக்கூடியவாறு ஐந்து சொற்களுக்குக் குறையாத 3 வாக்கியம் எழுதுக.

1..............................
2..............................
3..............................

15. பின்வரும் எண்குறியின் பெயரை எழுத்தில் எழுதுக.
1. 30 049 ..............................



2. i. உருவில் உள்ள பூக்களின் எண்ணிக்கையை உரோமன் எண்குறியில் எழுதுக ..............................
ii. பன்னிரண்டினை உரோமன் எண்குறியில் அமைக்கத் தேவையான தீக்குச்சிகளின் எண்ணிக்கை? ..................



3. i. தரப்பட்டுள்ள உருவில் $\frac{1}{4}$ ஐ நிழற்றிக் காட்டுக.
ii. நிழற்றாமல் எஞ்சியுள்ள பகுதியை தசம எண்ணில் தருக. ................

4) 2, 4, 6, 8 என்னும் எண்களைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக. (ஒரே எண்ணைப் பல தடவை பயன்படுத்தலாம்)

1. 4 + ............... + ............... = 18

5) பின்வரும் எண்ணிற்கு முன்னால், பின்னால் வரும் எண்களை வெற்றிடத்தில் எழுதுக.

.........................., 40 000, ..........................

6) தருண் 5 m 45 cm நீளமுள்ள நாடாவும், விஸ்ணு 8 m 97cm நீளமுள்ள நாடாவும் வைத்திருந்தனர். இருவரிடமும் உள்ள நாடாக்களின் மொத்த நீளம் யாது?

..............................

7.



I. உருவிலுள்ள திண்ம உருவின் பெயர் யாது?
..............................
II. இத்திண்ம உருவிலுள்ள ஓரங்களின் எண்ணிக்கை யாது?
..............................

8. மு.ப 7.10 இற்குப் பாடசாலைக்கு வந்த சாளினி பிற்பகல் 2.05 வரைக்கும் பாடசாலையில் தங்கியிருந்து வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றாள். சாளினி பாடசாலையில் எவ்வளவு நேரம் தங்கியிருந்தாள்?
..............................

9) இரண்டு பூசணிக்காய்களின் மொத்தநிறை 14kg 700g ஆகும். ஒன்றின் நிறை 6kg 900gஆகும் எனின் மற்றைய பூசணிக்காயின் நிறையைக் காண்க.

10)




இரண்டு பென்சில்களினதும் மொத்த நீளம் யாது?
..............................

11.




கடிகார முகம் காட்டும் நேரம் பிற்பகல் நேரமாகும். இதனை நியம நேரத்தில் தருக. ......................

12. பழங்கள் 8 வீதம் உள்ள 3 பெட்டிகளும் பழங்கள் 6 வீதம் உள்ள 5 பெட்டிகளும் உள்ளன. 8 பெட்டிகளிலும் உள்ள மொத்தப் பழங்கள் எத்தனை?
..............................

13.




பாத்திரம் A யை நிரப்புவதற்கு பாத்திரம் B இனால் எத்தனைதடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?
..............................

14.




இவ்வுருவின் சுற்றளவைக் காண்க .............

**2017-03-10 வெள்ளியன்று வெளியான பகுதி-1 இன் விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 1 | 21) 3 | 31) 2 |
| 2) 1 | 12) 3 | 22) 2 | 32) 3 |
| 3) 1 | 13) 3 | 23) 1 | 33) 2 |
| 4) 2 | 14) 2 | 24) 1 | 34) 2 |
| 5) 1 | 15) 2 | 25) 3 | 35) 3 |
| 6) 3 | 16) 1 | 26) 1 | 36) 2 |
| 7) 2 | 17) 3 | 27) 2 | 37) 2 |
| 8) 3 | 18) 3 | 28) 2 | 38) 3 |
| 9) 1 | 19) 2 | 29) 3 | 39) 2 |
| 10) 3 | 20) 3 | 30) 1 | 40) 3 |

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 2

15. உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையிலுள்ள வெற்றிடத்தை நிரப்புக.




| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | மஹாவெவ | 60km |
| நீர்கொழும்பு | மஹாவெவ | 25km |
| நீர்கொழும்பு | சிலாபம் | 41km |
| கொழும்பு | சிலாபம் | ..................... |

16. 1. விதையொன்று முளைத்து வளரும் முறை தொடர்பான சரியான ஒழுங்கைக் கொண்ட விடை எது?




1. BDCA 2. BCAD 3. BCDA 4. ACAD

2) காயாக இருக்கும்போதும் காய்ந்த பின்னரும் பச்சை நிறமாக இருக்கும் வித்து
1. கௌபி 2. கடலை 3. கச்சான் 4. பயறு

3) பின்வருவனவற்றுள் மூன்று இதழ்களைக் கொண்ட பூக்களின் தொகுதி
1. தென்னை, போகன்விலா 2. நித்தியகல்யாணி, செவ்வரத்தை
3. எக்சோறா, மல்லிகை 4. சூரியகாந்தி, போகன்விலா

4) பயிர்களைச் சேதப்படுத்தும் நத்தைகளைப் பிடித்து உண்ணும் பிராணி
1. காட்டுக்கோழி 2. குந்துகாலி 3. மரநாய் 4. செண்பகம்

5) தையல் வேலையின் போது ஊசி குத்தாதிருக்கப் பயன்படுத்தப்படும் உபகரணம்.
1. கையுறை 2. தீதாள் 3. சுவடு வரை சில்லு 4. பெரிய ஊசி

6) நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கும் உணவுகளாக இருப்பவை.
1. வல்லாரை, பொன்னாங்கண்ணி 2. அவரை, கடலை
3. உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு 4. இறைச்சி, முட்டை

7) "மணியாசு" எனும் கருவியைப் பயன்படுத்தும் தொழிலாளர்
1. பொற்கொல்லர் 2. கொத்தன் 3. தச்சன் 4. உழவன்

8) பின்வரும் மின் இணைப்புத் தொகுதிகளில் மின்குமிழ் ஒளிரக்கூடிய இணைப்பு எது?




9) தரப்பட்டுள்ள படம் குறித்து நிற்பது



1. புகையிரதக் கடவை
2. பாதுகாப்புடைய புகையிரதக் கடவை
3. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை
4. புகையிரத நிலையம்

10) சரியான கொண்ணிலை கொண்ட பாதச் சுவடுகள்




11) கடதாசி ஒன்றை மடித்துச் செய்யும் ஆக்கம்
1. கொலாஜ் 2. அல்பானா 3. ஒரிகாமி 4. கிறுக்கல் சித்திரம்

12) வேலை ஒன்றைக் கூட்டாகச் செய்வதால் கிடைக்கும் நன்மை அல்லாதது.
1. வேலையை இலகுவாகச் செய்யலாம் 2. நீண்ட நேரம் எடுக்கும்
3. மகிழ்ச்சியாக வேலை செய்ய முடியும். 4. ஒற்றுமை உணர்வு அதிகரிக்கும்.

13) காந்தம் ஒன்றினால் கவரக்கூடிய பொருட்களின் தொகுதியாக இருப்பது.
1. குண்டூசி, இரும்பாணி 2. இரும்பாணி, றபர்பான்ட்
3. சில்வர் கோப்பை, அலுமினியக் கோப்பை 4. பிளாஸ்ரிக் கரண்டி, தக்கை

14) இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களுள் ஆங்கிலேயர்களால் "தேசத்துரோகி" என பிரகடனப்படுத்தப்பட்டவர் யார்?
1. சேர்.பொன்.இராமநாதன் 2. கொங்காலேகொட பண்டா
3. கெப்பட்டிப்பொல திசாவை 4. சித்திலெப்பை

15.



இவ்வுரு எதனைக் காட்டுகின்றது?
1. கவனமாகக் கையாளவும் 2. உடையக் கூடியது
3. பாரமானது 4. இப்பக்கம் மேலே

16. இலங்கையின் தேசிய மலர்
1. தாமரை 2. அலரி 3. செவ்வந்தி 4. அல்லி

17. தேசப்படத்தில் புகையிரதப் பாதையைக் குறித்துக்காட்டப் பயன்படும் நிறம்.
1. சிவப்பு 2. கறுப்பு 3. நீலம் 4. மஞ்சள்

18. அரச இலச்சினையில் மலர் இதழ் குறித்து நிற்கும் பொருள்
1. தர்மம் 2. தூய்மை 3. உலக நிலைப்பாடு 4. சௌபாக்கியம்

19. தென்மாகாணக் கடலில் கலக்கும் நதி.
1. வழுக்கியாறு 2. தெதுறுஓயா 3. ஜின் கங்கை 4. மகாவலி கங்கை

20. குருநாகல் மாவட்டம் அமைந்துள்ள மாகாணம்
1. வடமாகாணம் 2. வடமேல் மாகாணம்
3. தென்மாகாணம் 4. வடமத்திய மாகாணம்

21. அவுஸ்திரேலியாவின் தேசிய சின்னம்
1. காட்டுக்கோழி 2. பண்டா 3. கழுகு 4. கங்காரு

22. இந்தியாவிற்கு தெற்கில் அமைந்துள்ள நாடு?
1. தாய்லாந்து 2. இலங்கை 3. சீனா 4. ஜப்பான்

23. உணவாகப் பயன்படும் வித்து அல்லாதது.
1. பப்பாசி 2. சோளம் 3. நெல் 4. பாசிப்பயறு

24. உலகிலுள்ள மொத்த நீர்ப்பரப்பில் நன்னீராகக் காணப்படும் நீரின் சதவீதம் யாது?
1) 97 % 2) 2 % 3) 1 % 4) 3 %

25.




இப்படம் குறித்து நிற்பது
1. நீர்வடிகட்டி 2. மழைமானி
3. மண்ணின் பகுதிகள் 4. புனலும் நீரும்

26. புதுவருடத்தில் கிணற்றுடன் கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ளும் சம்பிரதாய நடைமுறையைக் கொண்டவர்கள்.
1. தமிழர் 2. சிங்களவர் 3. முஸ்லிம்கள் 4. வேடுவர்

27. சூழலில் உள்ள அழுக்குகளை சுத்தப்படுத்தும் பிராணி
1. கிளி 2. மைனா 3. காகம் 4. செண்பகம்

28.



இவ்வுருவில் உள்ள உபகரணத்தைப் பயன்படுத்துவதன் மூலம்
1. காற்று வீசும் திசையை அறியலாம்
2. காற்றின் கதியை அறியலாம்
3. வானிலை பற்றி முன்கூட்டியே அறியலாம்
4. விமானத்தின் தரை இறக்கத்தை அறியலாம்.

29.



உருவில் உள்ளவர்
1. கலாயோகி ஆனந்தகுமாரசாமி
2. சேர் டீ.பி.ஜயதிலக்க
3. கலாநிதி ரீ.பீ. ஜாயா
4. அநகாரிக தர்மபாலா

30. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மிக உகந்த உணவு
1. பாண் 2. மரவள்ளி 3. நூடில்ஸ் 4. குரக்கன்

### (2017-03-15) இன்றைய தினத்தின் பகுதி-2 வினாக்களுக்கான விடைகள்

01. 1. சென்றோம். 2. நண்பன் 3. கரடிகள், -கழுதைகள், நரி, எருமைகள், காட்டு நாய்கள் 4. பெருங்காடு 5. குளத்துக்குள் 6. பிரிந்து 7. ஊளையிட்டது / கேட்டுக் கொண்டிருந்தது.
02. 1. சொன்ன சொல் தவறுதல் 2. தோற்றப்பொலிவு 3. இறத்தல் / சாதல்
03. 1. பள்ளம் 2. இளநீர் 3. நாணயம்
04. 1. கூறை 2. இறங்கி
05. நூலகம் என்பது பூங்காடு
06. 1. இன்னல் 2. ஆகாயம்
07. 1. பிரபுவும் பாபுவும் ஒரே கிராமத்தில் வாழ்ந்தவர்கள் 2. தசரத மன்னன் கோசல நாட்டை ஆண்டு வந்தான்.
08. சுப்பிரமணிய பாரதியார்
09. 1. இன்று திருவிழா / இன்றைக்கு திருவிழா 2. அதிக ஆட்கள் வருவார்கள்
10. 1. வைத்தியசாலை 2. கணனி அறை
11. மாம்பழம் ருசியானது
12. 1. மலசலகூடம் 2. வெண்கட்டி
13. இறைவன் உங்களை ஆசிர்வதிப்பார்.
14. பொருத்தமான வாக்கியங்கள்
15. 1) முப்பதாயிரத்து நாற்பத்தொன்பது
2) I) VI II) நான்கு
3) I)  (ஏதாவது இரு கட்டங்கள்)
II) 0.75

4) 6/8
5) 39999, 40001
6) 14m 42 cm
7) 1. நான்முகி 2. ஆறு
8) 6 மணித்தியாலயம் 55நிமிடம்
9) 7kg 800g
10) 9 cm
11) 14 : 30 மணித்தியாலம்/ 14:30h
12) 54 பழங்கள்
13) 10 தடவை
14) 24 cm 8mm
15) 76km
16.

| | | |
|---|---|---|
| 1)-2 | 11)-3 | 21)-4 |
| 2)-4 | 12)-2 | 22)-2 |
| 3)-1 | 13)-1 | 23)-1 |
| 4)-4 | 14)-2 | 24)-3 |
| 5)-2 | 15)-1 | 25)-2 |
| 6)-1 | 16)-4 | 26)-2 |
| 7)-2 | 17)-2 | 27)-3 |
| 8)-2 | 18)-2 | 28)-2 |
| 9)-2 | 19)-3 | 29)-2 |
| 10)-2 | 20)-2 | 30)-4 |

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2017-13.04.2017

## நல்ல சந்தர்ப்பங்கள் நாடி வரும் நேரம்!



சவால்களை எதிர்கொள்ளத் தயங்காத மேட இராசி அன்பர்களே!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் செவ்வாய், உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். இல்லத்தில் உள்ளம் மகிழும் சம்பவம் நடைபெறும். இதுவரை சோதனையின் பிடியில் சிக்கித் தவித்த நீங்கள், இனி சாதனை படைக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கும்.

என்ன இருந்தாலும் இராசிநாதனை மட்டும் வைத்து எடைபோட்டுச் சொல்லிவிட முடியாது. மற்ற கிரகங்கள் உலா வரும் நிலையைப் பொறுத்தும்தான் மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரும். அந்த அடிப்படையில், தனாதிபதியாக விளங்கும் சுக்ரன் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். எனவே வருமானத்திற்கு குறைவிருக்காது. அதேநேரம் சுக்ரனோடு பஞ்சமாதிபதி சூரியனும், சகாய ஸ்தானாதிபதி புதனும் இணைந்திருக்கின்றனர். இவை மூன்றும் இருப்பது விரய ஸ்தானத்தில் என்றாலும், வருகிற வருமானம் அனைத்தும் நல்ல விரயமாக மாறும்.

பிள்ளைகளின் எதிர்காலம் கருதியும், திருமண வாய்ப்புகள், வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்பிற்காகவும் செலவிட நேரிடலாம். பெண் பிள்ளைகளுக்கு திருமணப் பேச்சுக்கள் நடைபெறுகின்ற குடும்பமாக இருந்தால், அதற்கு வைக்கும் கல்யாணச் சீர்வரிசைச் சாமான்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நகை செய்யும் முயற்சி, விலையுயர்ந்த பொருட்கள் போன்றவை வாங்கி விரயங்களை சுப விரயமாக மாற்றிக் கொள்வீர்கள்.

குரு ஆறாமிடத்தில் வக்ரம் பெற்றுள்ளார். இவர் உங்கள் இராசிக்கு 9, 12-க்கு அதிபதியாவார். கடன், நோய், எதிர்ப்பு ஆகியவற்றை எடுத்துரைக்கும் இடமாக 6 ஆம் இடம் விளங்குவதால், அங்கு வலிமையிழந்து சஞ்சரிக்கும் குருவால் கடன் சுமைபாதிக்கு மேல் குறையக்கூடிய வாய்ப்பு உண்டு. ஏதேனும் ஒரு தொகை வந்து மகிழ்ச்சியூட்டும். பகை விலகும் நேரமிது. உறவினர், நண்பர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் மாறும். ஆரோக்கியத் தொல்லை அகலும். வழக்குகள் சாதகமாகி அனுகூலத்தை வழங்கும்.

புதிய திருப்பம் தரும் புதனின் மாற்றம்

மார்ச் 30ஆம் திகதி மேட இராசிக்குப் புதன் செல்கிறார். அங்கு சில நாட்கள் இருந்துவிட்டு ஏப்ரல் 7 ஆம் திகதி மீண்டும் மீனத்திற்கே வக்ரமாகச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மாதத் தொடக்கத்தில் நீசம் பெற்றிருப்பதால் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு ஓரளவுக்குத்தான் உங்களுக்கு கிடைத்திருக்கும். மேடத்திற்கு புதன் வந்த பிறகு கூடப் பிறந்தவர்களால் கூடுதல் நன்மை கிடைக்கும். பெரிய பதவிகளுக்கு கூட உங்கள் பெயர் பரிசீலிக்கப்படும். மீண்டும் மீனத்திற்கு வக்ரமாகிச் செல்லும் புதனால், மேலதிகாரிகளின் ஆதரவோடு உத்தியோகத்தில் நல்ல வாய்ப்புகள் வந்து சேரலாம்.

சனியின் வக்ர காலம்

இதுவரை அஷ்டமத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் ஏப்ரல் 9 ஆம் திகதி வக்ரம் பெறுகிறார். விலகுவதற்கு சுமார் 8 மாதம் முன்பாகவே வக்ர இயக்கத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு அதிகாரப் பதவிகள் கிடைக்கலாம். கருத்து வேறுபாட்டால் பிரிந்தவர்கள் கனிவோடு வந்திணைவர். மொத்தத்தில் முன்னேற்றப் பாதையில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும்.




ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

ஏப்ரல் 11 ஆம் திகதி செவ்வாய் ரிஷபத்திற்குச் செல்கிறார். இராசிநாதன் செவ்வாய் 2இல் சஞ்சரிக்கும் பொழுது வருமானம் திருப்திகரமாக இருக்கும். வீட்டிற்குத் தேவை யான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். மனக்குழப்பம் அகன்று மகிழ்ச்சி கூடும்.

இம்மாதம் குரு வக்ர இயக்கத்தில் இருப்பதால், வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சனியால் அவதிகள் ஏற்படாமல் இருக்க சனியின் சந்நிதியில் எள்தீபம் ஏற்றுங்கள். நல்லது நடக்கும்.

பெண்களுக்கு...

உங்களுடைய இராசிநாதன் செவ்வாய், உங்கள் இராசியிலேயே பலம் பெறுவதால் நல்ல சந்தர்ப்பங்கள் நாடி வரப் போகிறது. எதிர்பார்த்த தொகைகள் வந்துசேரும். ஆரோக்கியத் தொல்லை அகலும். அடிக்கடி சண்டை, சச்சரவோடு இருந்த குடும்ப உறுப்பினர்கள், இனி அமைதிக்கு வழிகாட்டுவர். வக்ரச் சனியின் ஆதிக்கத்தால் வாய்ப்புகள் சாதகமாகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப்படும் விதத்தில் அமையும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத்தகவல்வந்துசேரும். சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயரை வழிபட்டால் பிணிகளில் இருந்தும், பிரச்சினைகளில் இருந்தும் விடுபடலாம்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்



உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ரிஷப இராசி அன்பர்களே!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் கிரக நிலைகள் சாதகமாகவே உள்ளன. பொதுவாக இராசிநாதன், தனாதிபதி, இலாப ஸ்தானாதிபதி ஆகியவை சிறப்பாக இருந்தால் மாதம் முழுவதும் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ள இயலும். கோசார அடிப்படையில் சுழலும் கிரகங்கள் தான் வாழ்வில் திடீர் திருப்பு முனைகளை வழங்கும்.

அந்த அடிப்படையில் பங்குனி மாதத்தில் உங்கள் இராசி நாதன் சுக்ரன், இலாப ஸ்தானத்தில் உச்சம் பெறுகிறார். அவரோடு தனாதிபதி புதன், சுக ஸ்தானாதிபதி சூரியன் ஆகியோரும் இணைந்து சஞ்சரிக்கின்றனர். எனவே கூட்டுக்கிரக யோக அமைப்பு உருவாகி, தீட்டிய திட்டங்களை எல்லாம் வெற்றி பெற வைக்கப் போகிறது.

"புதன் நீசமாக இருக்கிறாரே!" என்று நினைக்க வேண்டாம்.

நீசம் பெற்ற புதன், உச்சம் பெற்ற சுக்ரனுடன் இணைந்திருப்பதால் நீச பங்க இர்ராஜயோகம் உருவாகிறது. மேலும் குருவின் பார்வையும் புதன் மீது பதிகிறது. எனவே தடைகள் அகலும். தனவரவு திருப்தி தரும். மடமடவென காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். சூரியபலம் நன்றாக இருப்பதால் பெற்றோர்களின், ஆதரவு கிடைக்கும்.

புத-ஆதித்ய யோகமும், புத-சுக்ர யோகமும் ஏற்படும் அமைப்பில் மாதத் தொடக்கம் அமைவதால், பணமழையிலும், பாராட்டு மழையிலும் நனையப் போகிறீர்கள். திட்டமிடாத காரியங்கள் கூட வெற்றியாகும். சொந்தத் தொழிலில் எதிர்பார்த்த வளர்ச்சி உண்டாகும்.

குருவின் பரிபூரணப் பார்வையும் உங்கள் இராசியில் பதிகின்றது. 9,11 ஆகிய இடங்களிலும் குருவின் பார்வை பதிவதால் குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். கொடுக்கல்- வாங்கல் ஒழுங்காகும். நினைத்த காரியங்களை, உடனே செய்து முடிப்பீர்கள். துணிந்து சில முடிவுகளை எடுத்து, துயரங்களை வெல்வதற்கு வழிவகுத்துக் கொள்வீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அரசியலில் உள்ளவர்களுக்கு பொறுப்பு சேரும். சனியின் பார்வை இருப்பதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பங்குனி உத்தர நாளில் முருகப் பெருமானை வழிபட்டால் தடைகள் அகலும்.

விரய ஸ்தானத்திற்கு வரும் புதன்

மார்ச் 30 ஆம் திகதி விரய ஸ்தானத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 12ஆம் இடத்திற்கு வந்த புதன் மீண்டும் வக்ர இயக்கத்தில் ஏப்ரல் 7 ஆம் திகதி இலாப ஸ்தானத்திற்கு செல்கிறார். இடைப்பட்ட 8 நாட்களும் விரயங்கள் அதிகரிக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் இருக்காது. உத்தியோகத்தில் மாற்றம் வரலாம். இருப்பினும் அந்த மாற்றம் நிலையானதாக இருக்காது. மீன ராசி, புதனுக்கு நீச வீடு என்பதால் பிள்ளைகளின் கல்வி நலன் கருதி செலவிடுவீர்கள்.




வக்ரச் சனியின் இயக்கம்

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி ஏப்ரல் 9 ஆம் திகதி விருச்சிகத்தில் வக்ரம் பெறுகிறார். 9,10 இற்கு அதிபதி வக்ரம்பெறும் பொழுது, உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. என்றாலும் கூட கண்டகச் சனியாக இருந்து வக்ரம் பெறுவதால் ஒரு சில காரியங்களில் நன்மையையே வழங்கும். மருத்துவச் செலவுகள் குறையும். உடல் நலப் பாதிப்பு அகலும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர்.

செவ்வாய் பெயர்ச்சிக் காலம்

ஏப்ரல் 11 ஆம் திகதி ரிஷப இராசியான உங்கள் இராசிக்கே செவ்வாய் வரப்போகிறார். செவ்வாய் 7,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். பூமிகாரகன் செவ்வாய் விரயாதிபதியாக விளங்கி உங்கள் இராசிக்குள் அடியெடுத்து வைப்பதால், பூமி விற்பனையில் இதுவரை இருந்த தடை அகலும். புகழ்மிக்கவர்களின் ஒத்துழைப்போடு வழக்குகள் நல்ல முடிவிற்கு வரும்.

இம்மாதம் செவ்வாய் தோறும் முருகப்பெருமானை வழிபடுங்கள். பிரதோஷ நாளில் நந்தியை வணங்குங்கள்.

பெண்களுக்கு...

உங்கள் இராசிநாதன் உச்சம் பெற்றிருக்கிறார். அவருடன் தனாதிபதி, சுகாதிபதி இருவரும் இணைந்திருப்பதால் வரவு திருப்தி தரும். வளர்ச்சி கூடும். உறவினர் பகை மாறும். ஊர் மாற்றங்கள் நல்ல விதத்தில் அமையும். கணவன்-மனைவி இருவரும் மனம் விட்டுப் பேசி மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்வீர்கள். தாய்வழி ஆதரவு கிடைக்கும். பிள்ளைகளின் வேலை சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உதிரி வருமானங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அலுவலகப் பிரச்சினைகள் அகலும். சனிக்கிழமை தோறும் விரதமிருந்து அனுமனுக்கு வெற்றிலை மாலை சூட்டி வழிபடுவது நல்லது. குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். (தொடரும்)

# புதிய அரசியல் அமைப்பு மிகவும் அபாயகரமானது

## மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை

புதிய அரசியல் அமைப்பு, அரச கட்டமைப்பு, சட்டத் தொகுதி ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துவரும் முயற்சியானது மிகவும் அபாயகரமானது. அதன்ஊடாக யுத்தத்தினால்பெற்றுக்கொள்ள முடியாததை பயங்கர வாதிகளுக்குக் கையளிப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மேற்குறிப்பிட்ட விவகாரங்கள் தொடர்பில், கடந்தாண்டு நவம்பர் மாதம் முதல், ஒவ்வொரு விடயங்களும் ஊடகங்களின் ஊடாக வெளியாகியுள்ளன அல்லது உத்தியோகபூர்வமாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. இதிலிருந்து அரசாங்கத்தின் உள்நோக்கம் வெளிப்பட்டுள்ளது. அரசியலமைப்பில், உப-குழுக்களின் அறிக்கைகள் கடந்த நவம்பர் மாதம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன. நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாடு தொடர்பிலான செயலணியின் அறிக்கையானது ஜனவரி மாதம் வெளியானது. அதில், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை பெற்றுக் கொள்வதற்காக இலங்கைக்கு விதிக்கப்பட்ட 58 நிபந்தனைகள், பயங்கரவாதச் தடைச்சட்டத்துக்கு பதிலாக, பிரதமரினால் முன்மொழியப்பட்ட புதிய சட்ட மூலம் ஆகியனவும் ஊடகங்கங்களினால் பகிரங்கப்படுத்தப்பட்டன.

இவையாவும், 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், இலங்கையில் நல்லாட்சிக்கு உதவி மற்றும் இணை அனுசரணையுடன் ஒபாமா நிர்வாகம், ஐரோப்பிய சக்திகளினால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்குள், இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்ட யோசனையை அடிப்படையாகக் கொண்டதாகும். தற்போதைய சூழ்நிலையில், ஒபாமாவின் ஆட்சி நிர்வாகம் துடைத்தெறியப்பட்டுள்ளது. அமெரிக்காவின் புதிய அரசாங்கத்துடன் கலந்துரையாடி, அதில் உள்ள பிரிவுகளை மாற்றிக் கொள்வதற்கு இந்த அரசாங்கம் எவ்விதமான முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்பதனை மக்களுக்கு தெளிவுபடுத்திக் கொள்கின்றேன்.

தேசத்துரோகமான நிகழ்ச்சி நிரலினால்தான் இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. அதனால்தான், 2015ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமை பேரவையில் கொண்டுவரப்பட்ட யோசனைக்கு அமெரிக்கா அல்ல இலங்கை அரசாங்கமே தோள்கொடுக்க வேண்டியுள்ளது. பிரதமரின் நல்லிணக்கம் தொடர்பிலான செயலணியின் பரிந்துரைகளின் பிரகாரம், இந்த நாட்டில் ஏற்பட்ட ஆயுதப் போராட்டத்துக்கு, பிரதிவாதிகளிடம் மன்னிப்புக் கோரவேண்டும். எனினும், பயங்கரவாதிகள் அமைப்பு அல்லது அவர்களுக்கு உதவி ஒத்தாசை நல்கிய வேறு அரசியல் அமைப்புகளிடம் மன்னிப்பு கோர வேண்டியதில்லை. அதனடிப்படையில், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இலங்கை அரசாங்கம் செய்தமை தவறானது என்ற கருத்து உலகத்துக்கு எடுத்தியம்பப்பட்டுள்ளது.

புலிகளின் மயானங்கள் முன்பிருந்ததை போலவே மீண்டும் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்றும், மாவீரர் தினத்தைக் கொண்டாடுவதற்கு தேவையான ஏற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டும். புலி உறுப்பினர்களின் உறவினர்கள், உயிரிழந்த புலி உறுப்பினர்களின் படங்கள், புலிச் சீருடை ஆகியவற்றை தங்களுடைய வீடுகளில் காட்சிக்கு வைத்திருப்பதற்கு இடமளிக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனினும், பயங்கரவாதத்துக்கு எதிராக போராடி, வெற்றிகொண்ட வெற்றியை கொண்டாடுவது தொடர்பில் அந்த செயலணியில் எங்குமே பரிந்துரைக்கப்படவில்லை.

குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படாத சகல புலிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். எனினும், குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக கூறப்படும் இராணுவத்தினர் சிறைவைக்கப்பட வேண்டும் என்றும் அந்த செயலணி பரிந்துரைத்துள்ளது. நல்லிணக்கத்துக்கு இது அத்தியாவசியமானதாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ஒபாமா அரசாங்கம், மனித உரிமைகள் பேரவை, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ்'க்கான நிபந்தனைகளின் பிரகாரம் எங்களுடைய படையினருக்கு எதிராக வெளிநாட்டு, நீதிபதிகள் அடங்கிய யுத்தக்குற்ற நீதிமன்றத்தை நிறுவுவதற்கும் பிரதமரின் 'இந்த நல்லிணக்க செயலணி பரிந்துரைத்துள்ளது. புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு உள்ளமையால், நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால், இந்த யுத்தக் குற்ற நீதிமன்றத்தின் ஊடாக புலி உறுப்பினர்களுக்கு எதிராக செயற்படக் கூடாதுஎன்றும்யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில்,



புலி அமைப்பிலிருந்து விலகி. அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்ட புலித் தலைவர்களுக்கு எதிராக யுத்தக் குற்ற விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் அந்த செயலணி பரிந்துரைத்துள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் யோசனையின் பிரகாரம், யுத்தக் குற்றத்தை இழைத்ததாகச் சந்தேகிக்கப்படும். எனினும், யுத்த நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு போதியள வான சாட்சிகள் இல்லையாயின், இராணுவத்தினரை நிர்வாக செயற்பாட்டின் ஊடாக, சேவையிலிருந்து நீக்கப்பட வேண்டும். எனினும், பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலாக பிரதமரினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய சட்டத்தின் பிரகாரம் பயங்கரவாத சந்தேகநபர்களுக்கு எதிராக போதியளவான சாட்சிகள் இல்லாவிடின், மன்னிப்பு கோருவதற்கு, மனம் திரும்புதல் அறிக்கையை கொடுத்தல், புனர்வாழ்வை பெற்றுக் கொள்ளல், எதிர்காலங்களில் குற்றச் செயல்களை செய்யாமல் இருப்பதற்கு உறுதிபூணுதல், சமூக சேவையில் ஈடுபடல் ஆகிய நிபந்தனைகளின் அடிப்படையில் சட்டமா அதிபர் அல்லது மேல் நீதிமன்றமானது அந்த பயங்கரவாதிக்கு எதிராக கொண்டுவந்த சட்ட முறையை கைவிடமுடியும்.

யுத்தக்குற்றங்களுடன் தொடர்புடைய இராணுவ உறுப்பினர்களுக்கு எவ்விதமான பொது மன்னிப்பும் வழங்கப்படகூடாது என்றும் அந்த செயலணியினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனினும், பிரதமரின் புதிய சட்டத்தினால், நீதிமன்றத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட பயங்கரவாதி, பயங்கரவாதத்தை பகிரங்கமாக கண்டித்தல், மனம்திரும்பு அறிக்கையை கொடுத்தல், மேலிருந்து வழங்கப்பட்ட அழுத்தம் உத்தரவு காரணமாகவே அக்குற்றத்தை புரிய வேண்டிய நிலைமை ஏற்பட்டது ஆகியவற்றின் ஊடாக சிறைத் தண்டனையை குறைப்பதற்கான உறுப்புரையும் புதிய சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அனுபவமிக்க இராணுவத்தினரையும் இராணுவ அதிகாரிகளையும் வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு, நாட்டின் தேசிய பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்று அந்த செயலணியின் பரிந்துரையில் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. பிரதமரின் புதிய சட்டத்தின் பிரகாரம், கைது செய்யப்படுகின்ற பயங்கரவாத சந்தேகநபர்களின் பாதுகாப்பை, அப்பிரதேசத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரி, மனித உரிமை ஆணைக்குழு, மாகாணத்தில் உள்ள நீதவான் ஆகியோர் உறுதிப்படுத்த வேண்டும். தடுத்துவைத்தல் மூன்று மாதங்களிலிருந்து 30 நாட்களாக குறைந்துள்ளது. தடுத்து வைக்கக்கூடிய ஆகக்கூடிய காலமான 18 மாதங்கள் 6 மாதங்களாக குறைக்கப் பட்டுள்ளது. சந்தேகநபருக்கு எதிராக ஒருவருடத்துக்குள் வழக்கு தாக்கல் செய்யப்படாது. எனினும், வழக்குக் காலம் 2 வருடங்களுக்கு மேல் நீடிக்கப்படுமாயின் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்படவேண்டும்.

பயங்கரவாதிகளுக்கு ஆகக்கூடிய இடம் வழங்கப்பட்டுள்ளதுடன், இராணுவத்தினருக்கு ஆகக்கூடிய இடையூறுகளும் இந்த புதிய சட்டத்தில் உள்ளக்கப்படும் வகையிலேயே பிரதமரின்செயலணியினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்கள் குறைக்கப்படும் வகையில், செயலணியினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இவை, சமாதானம் சீர்குலையும் போது, பொலிஸ், முப்படைகளின் கைகளை கட்டிவிடுவதாகும். அவ்வாறான நிலைமை ஏற்படுமாயின், நாட்டின் சமாதானத்தை எவ்வாறு பாதுகாப்பது.

இலங்கைச் சட்டத்துக்குள் சர்வதேசம் நுழையும் வகையில், சட்டமுறைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி, ஜெனிவா மனித உரிமைகள் பேரவை, இலங்கைக்கு மேன்முறையீட்டை முன்வைப்பதற்கு இடமளிக்க வேண்டும் என்று சட்டம் தொடர்பிலான குழு, யோசனையை முன்வைத்துள்ளது. இது இலங்கையின் உயர்நீதிமன்றமே என்ற மிக உயர்ந்த நீதிமன்றம் என்ற நிலைமையிலிருந்து இல்லாமற் செய்யப்பட்டுள்ளது. இலங்கை மதம் அல்லாத நாடாகவும் பிரகடனப்படுத்துவதற்கான யோசனை, பிரதமரின் செயலணியின் ஊடாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மாகாண ஆளுநர்களின் சகல அதிகாரங்களையும் இல்லாமற் செய்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அந்த மாகாணத்தின் முதலமைச்சர்களால், தங்களுடைய விருப்பத்தின் பிரகாரம், ஆளுநர்களை நியமித்துக் கொள்ளமுடியும். அதேபோல, அந்த அமைச்சரவையின் ஆலோசனையின் பிரகாரம் ஆளுநர் செயற்பட முடியும். இதன் ஊடாக ஒற்றையாட்சி இல்லாமற் செய்யப்பட்டு, பெடரல் ஆட்சி முறைமையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசாங்கம், நாட்டின் சமாதானத்துக்கும் ஒற்றுமைக்கும் பங்கம் ஏற்படுத்தும் வகையில், தேசத்துரோகமான வேலைத் திட்டத்தை முன்னெடுக்கின்றது என்பதனை சகலருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சிறுமியின் உயிரைக்குடித்தது ஊஞ்சல் தூண்

ஊஞ்சல் கட்டப்பட்டிருந்த கொங்கிறீட் தூண்களில் ஒன்று சரிந்து விழுந்ததில், 8 வயதுச் சிறுமி, பரிதாப கரமாகப் பலியான சம்பவமொன்று, சிலாபம், வனாத்தவில்லு எரிக்குளன்வில்லுவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வனாத்தவில்லுவ பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் தரம் 3 இல் பயின்ற சுதிபா தர்ஷனி என்ற சிறுமியே இவ்வாறு பலியாகியுள்ளார். பக்கத்து வீட்டுக்குச் சென்ற குறித்த சிறுமி, அங்கு, இரண்டு கொங்கிறீட் தூண்களுக்கு இடையில் ஊஞ்சலாகக் கட்டப்பட்டிருக்கும் சாரியில், அந்த வீட்டுச் சிறுமியுடன் விளையாடிக் கொண்டிருந்துள்ளார். அதிலொரு கொங்கிறீட் தூணே, சிறுமியின் மீது சரிந்து விழுந்துள்ளது என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் பலியான சிறுமியின் தாயார், வேலைக்குச் செல்பவர் என்றும் தன்னுடைய மகளை, பக்கத்து வீட்டிலேயே விட்டுச்செல்வார் என்றும் அறிய முடிகிறது.

ஊஞ்சல் உள்ள வீட்டில் தன்னுடைய வயதையொத்த சிறுமி இருப்பதனால், அச்சிறுமியும் அவ்வீட்டுக்கு செல்வதை மிகவும் விரும்புவார் என்றும் சிறுமியின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இந்த அசாதாரண சம்பவம், கடந்த 12ஆம் திகதியன்று மாலை இடம்பெற்றுள்ளது. இதன்போது, அவ் வீட்டிலிருந்தவர்கள், சிறுமியை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றபோதும், அவருடைய உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவத்தில் உயிரிழந்த சிறுமி, அக்குடும்பத்துக்கு ஒரேயொரு பெண் பிள்ளை என்றும், அச்சிறுமிக்கு ஐந்து சகோதரர்களும் உள்ளனர்.

புத்தளம் ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட மரண பரிசோதனைக்கு பின்னர், சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த சம்பவத்தினால், அக்கிராமமே பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளது. (இ-3)

## சீனிக்கு விதித்த கட்டுப்பாட்டு விலையை நீக்க இந்தியாவில் ஏற்பட்ட மாற்றமே காரணமாம்

(கொழும்பு)

சீனிக்காக விதிக்கப்பட்டிருந்த ஆகக்கூடிய சில்லறை விலையை நீக்குவதற்கு, இந்தியாவில் ஏற்பட்ட மாற்றமே காரணம் என, இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் ஏற்றுமதிக்காக 25 சதவீதம் வரி விதிக்கப்பட்டமை காரணமாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டதாக, இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார். வெள்ளை சீனி மற்றும் கோழி இறைச்சி ஆகியவற்றுக்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விலக்கிக்கொள்ள தீர்மானித்துள்ளதாக அரசாங்கம், நேற்று முன்தினம் அறிவித்தது. அதற்கமைய, சீனி ஒரு கிலோகிராம் 93 ரூபாய் மற்றும் கோழியிறைச்சி ஒரு கிலோகிராம் 410 ரூபாய், தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சி ஒரு கிலோகிராம் 490 ரூபாய் என்றிருந்த கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டுள்ளது. (இ-3)

# லீனா ஹென்றியை மலேசிய அரசு விடுவிக்க வேண்டுமென கோரிக்கை




(கோலாலம்பூர்)

சனல் 4 தொலைக் காட்சியின் 'நோ பயர் சூன்' ஆவணப்படத்தை, மலேசியாவில் திரையிட்டமைக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள மனித உரிமை செயற்பாட்டாளர் லீனா ஹென்றியை அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் மலேசிய அரசு விடுவிக்க வேண்டுமென ஆசிய மனித உரிமை ஆணைக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மலேசிய அரசின் பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம் போன்றவற்றின் மீதான அடக்குமுறைகளுக்கெதிராக பல்வேறு மனித வுரிமை அமைப்புக்கள் கடுமையான கண்டனத்தை வெளியிட்டு வருகின்றன.

பிரித்தானியாவின் சனல் 4 நிறுவனத்தின் 'நோ பயர் சூன் ஆவணப்படத்தை 2013 ஆம் ஆண்டு ஜூலை 3 ஆம் திகதி புஸ்ட் கோமஸ் என்ற மனித உரிமை அமைப்பின் பிரதி நிதியான லீனா ஹென்றி கோலாலம்பூரில் திரையிட்டிருந்தார்.

அனுமதியின்றி இந்த ஆவணப்படத்தை திரையிட்டமை, மலேசியாவின் திரைப்படத் தணிக்கைச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றச் செயலெனக்கூறி மலேசிய அதிகாரிகள் அவர் மீது குற்றஞ்சாட்டியிருந்தனர்.

'நோ பயர் சூன்' ஆவணப் படம் உலகளாவிய ரீதியில் இலங்கை அரச படைகளினால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தக்குற்றங்களை, அம்பலப்படுத்தியிருந்த நிலையில். மலேசியாவில் இதனைத் திரையிட்டமைக்காக லீனா ஹென்றி மீது சட்டநடவடிக்கை எடுக்கும்படி மகிந்த அரசின் உந்துதலின் பேரிலேயே. அதன் நட்பு நாடுகளில் ஒன்றான மலேசியா அவரைப் பழிவாங்கியதாக இந்த மனித உரிமை அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

இவரைக் குற்றவாளியாக இனங்கண்டுள்ள மலேசிய நீதிமன்றம் ஒன்று, இதற்காக உயர்ந்த பட்சம் மூன்று வருடங்கள்சிறைத்தண்டனை அல்லது 30 ஆயிரம் மலேசிய ரிக்கிட் தண்டப் பணம் அல்லது இரண்டும் வழங்கப்படலாம் என்றும் கடந்த மாதம் தெரிவித்திருந்தது.

குறித்த மலேசிய நீதிமன்றம் மார்ச் மாதம் 22 ஆம் திகதி இந்தத் தீர்ப்பை வழங்கவுள்ள நிலையில். இவரை இந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்குமாறு சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும். செயற்பாட்டாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மலேசிய அரசின் அடக்கு முறையைக் கண்டித்தும். லீனாவை விடுதலை செய்யக் கோரியும் கடந்த வாரம் லண்டனிலுள்ள மலேசிய தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# சகல பயணிகளுக்கும் பயணச்சீட்டு கட்டாயம்

இன்று முதல், மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள், பயணச்சீட்டை தம்வசம் வைத்திருத்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நடத்துநர் தமது பேருந்தில் பயணிக்கும் பயணிகளுக்கு பயணச்சீட்டை விநியோகிப்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதனை மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் துஷித குலரத்ன அறிவித்துள்ளார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 | 120 | 120 | 120 |
| தக்காளி | 40 | 40 | 30 | 50 | 80 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 60 | 80 | 80 | 70 |
| கோவா | 30 | 20 | 30 | 40 | 40 | 40 |
| கரட் | 60 | 40 | 60 | 60 | 100 | 40 |
| பூசணி | 50 | 35 | 50 | 50 | 60 | 30 |
| புபோல் | 100 | 40 | 80 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 100 | 90 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 80 | 60 | 160 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 100 | 80 | 160 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 50 | 60 | 120 | 60 |
| பயற்றங்காய் | 120 | 60 | 100 | 70 | 120 | 100 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 70 | 80 | 60 |
| பீற்றூட் | 60 | 40 | 40 | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 140 | 90 | 80 | 100 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 300 | 400 | 600 | 250 |
| போஞ்சி | 120 | 60 | 120 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 30 | 30 | 30 | 25 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 60 | 50 | 100 | 70 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 20-50 | 60 | 60 | 40-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 160 | 200 | 180 | 240 | 120 |
| வெங்காயப்பூ | 80 | 40 | 50 | 60 | 120 | 60 |
| முள்ளங்கி | 50 | 30 | 50 | 60 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 15 | 30 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 10 | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | 60 | 50 | 80 | 70 |

கிருஷ்ணா அடகு சேவை
பதிவு இல. J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2016 ம் ஆண்டு 15.09.2016ற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (15.04.2017) ற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டிப்புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்க தவறின் 15.04.2017 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இல. 09,
கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
021 222 5046

இல.370,
கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்
021 490 0311



(C-7808)
உரிமையாளர் :- A.S.Surendran





புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்டோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக கடந்த 12 ஆம் திகதி யாழில் நடத்தப்பட்ட ஆய்வரங்கில் தோழர் சி. சிவசேகரம் ஆய்வுரையினை வழங்குவதையும், பார்வையாளரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# சைற்றத்திற்கு எதிர்ப்பு 3 மாணவர்கள் கைது

மாலபே சைற்றம் தனியார் கல்லூரிக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மூன்று மாணவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அனைத்து பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்ட பேரணியை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் நீதிமன்ற தடையுத்தரவுடன், லோட்டஸ் வீதிக்கு அருகில் தடை ஏற்படுத்தியுள்ளனர்.

அதுமாத்திரமின்றி நீதிமன்ற தடையுத்தரவையும் மாணவர்களிடம் காண்பித்துள்ளனர். எனினும் நீதிமன்ற தடையுத்தரவை கிழித்தெறிந்த மாண வர்கள் பொலிஸாரின் தடையை மீறினர்.

இதனால் மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகை மேற்கொண்டதுடன், நீர்த்தாரைப் பிரயோகத்தையும் பொலிஸார் மேற்கொண்டனர்.

இதில் மூன்று மாணவர்கள் காயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா:12செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BSc, MSc/ விரிவுரையாளர்
தொ.இ: B/7076

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 51செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:ஆசிரியர்
தொ.இ: B/7078

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 54சூரிசெவ் 7 இல்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7079

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம் உத்தரம் சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/7080

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 45செவ் .12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/4608

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 38செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:MBCS/சித்த வைத்தியர்
தொ.இ: G/4625

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 55
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: G/4631

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 44செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/4648

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என அறியத் தருகின்றோம்

# பன்றிக்காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு அவசியம்

(தீதுகள் சுரம்) இன்புளுவென்சா என்று பொதுவாக அழைக்கப்படும் சுவாசத் தொற்று RNA வைரசினால் ஏற்படுகின்றது. RNA வைரசில் உள்ள புரதத்தினை அடிப்படையாகக் கொண்டு இன்புளுவென்சா A- இன்புளுவென்சா B, இன்புளுவென்சா C என வேறுபட்ட நோய்த் தாக்கம் ஏற்படலாம். இதில் இன்புளுவென்சா A உலகம் முழுவதும் பரவும் வீரியம் மிக்க நோயாகும். இன்புளுவென்சா B குறித்த பிரதேசத்தில் பரவும் நோயாகும். இன்புளுவென்சா C அரிதாகப் பரவும் நோயாகும்.

இன்புளுவென்சா வைரசி லுள்ள கிளைக்கோபுரம் [Hae magglutin (H)] விருந்து வழாங்கியின் உட்கலத்துடன் இணைந்து பாதிப்பை ஏற்படுத்தும். இன்புளுவென்சா வைரசைச் சூழவுள்ள நியூராமி டேஸ் நொதியம் (N) பெருகிய வைரசினை விருந்து வழாங்கியினுள் விடுவிக்க உதவும்.

கிளைக்கோபுரதத்தில் H இல் 16 வகைகள் உண்டு.

$H_1, H_2, H_3, N_1, N_2$ என்பவையே மனிதனில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன.

$H_1, N_1$ வகை 1918 - 1919இல் உலகில் 40 மில்லியன் மக்களின் இறப்பிற்குக் காரணமாக அமைந்தது. முதலாம் உலகப்போர் சிறைக் கூடங்களில் உருவானது.

$H_2, N_2$ வகை 1957 இல் ஆசியாவில் பாதிப்பினை ஏற்படுத்தி உள்ளது.

$H_2, N_2$ வகை 1968இல் பாதிப்பை ஏற்படுத்தியது. இவை வியட்நாம் யுத்தம், கொரிய யுத்தத்தினால் ஏற்பட்டவை.

$H_1, N_1$ வகை 1978 இல் ரஷ்யாவில்நோயினை ஏற்படுத்தியது. உலகத் தண் போர் நிலையில் ஏ்பட்டது.

$H_1, N_1$ pdm 2009 இல் பன்றித் தொற்றாக விகாரமடைந்தது. இதனையே பன்றிக் காய்ச்சல் என அழைத்தனர். இது சீனாவில் கம்யூனிஸ சர்வாதிகாரத்தில் ஏற்பட்டது.



Antigenic Shift உலகம் முழுவதும் விரகக் காரணமாக அமையும்.

Antigenic drift – இன்புளுவென்சாவிற்கு நிரந்தர நிர்ப்பீடணத்தைப் பெற முடியாமைக்குக் காரணமாக அமையும். ஒரு பிரதேசத்தில் பரவல் காரணம்.

1997இல் $H_1, N_1$ - Avion இன்புளு வென்சா உருவானது. இதுவே பறவைக் காய்ச் சல் எனப்பட்டது. இது 2016இல் 15 நாடுகளில் காணப்பட்டது.

தற்போதைய பன்றிக் காய்ச்சல் 2009இல் மெக்சிக்கோவில் பரவியது. போதை வஸ்து கைதிகளின் சிறைக் கூடத்தில் உருவானது.

தற்போது வடபகுதியில் இன்புளுவென்சா பரவுவதற்கு Antigenic drift காரணம்.

Antigenic drift – ஏற்படுவதால் இது பரவும் தன்மையைப் பெறுகின்றது. பரம்பரை அலகு விகாரத்தினால் இலங்கையின் வடபகுதியில் குறிப்பாக வன்னியில் மக்களின் சுவாசப்பை கள் யுத்த வடுக்களைக் கொண்டவை. பாதிக்கப்பட்ட சுவாசப் பைகளில் தொற்றும் இன்புளு வென்சா வைரஸ் Antigenic drift அடைவதற்கான சாத்தியம் அதிகம். யுத்த எச்சங்களின் பாதிப்பு மனிதரை மாத்திரமல்ல, வைரசுகளையும் தாக்கக் கூடியன. குறிப்பாக மீள்குடியமர்ந்த பிரதேசங்களின் சூழலில் குண்டுவீச்சுக்களின் இரசாயன நச்சு எச்சங்கள் சூழலில் இருக்கலாம். இவையும் வைரசின் புரதத் தொகுப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும். Antigenic drift இனை ஏற்படுத்தி இருக்கலாம்.

அதாவது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் எமது மக்களுக்கு இக் கிருமி தாக்கும் போது விகாரமடைந்த கிருமியாக மாறும் சாத்தியம் அதிகம். இதுவே தற்போது வடபகுதியில் இந்நோயின் தாக்கம் அதிகரிக்க முக்கிய காரணமாக அமையலாம். மாறாக மழை பெய்த பின் ஏற்பட்ட மாற்றம் அல்ல. மீள் குடியேறிய பகுதிகளில் யுத்த நச்சுக்கள் பற்றிய சூழலியல் ஆய்வு மேற்கொள்ளாமை பெரிய தவறாகும்.

நோய் அறிகுறிகள்

பன்றிக்காய்ச்சல் மூன்று நிலைகளில் பரவுகின்றது. முதல் நிலையில் நோயாளிக்கு குறைந்த நிலையில் சளி, இருமல், தொண்டைவலி இருக்கும். சிலருக்கு வாந்தி அல்லது வயிற்றோட்டம் இருக்கும். இவர்கள் 1-2 நாட்கள் மருத்துவரின் கண்காணிப்பில் இருக்க வேண்டும். குடும்ப அங்கத்தவர்களுக்கு தொற்று ஏற்படாது பாதுகாக்க வேண்டும். இரண்டாம் நிலையில் அதிக காய்ச்சல், தொண் டை வலி என்பன இருக்கும். மூன்றாம் நிலையில் மூச்சுவிடக் கடினமாகும், நெஞ்சு வலி ஏற்படும், குருதி அமுக்கம் குறைவடையும். இவர்ளுக்கு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டே சிகிச்சை வழங்கப்படல்வேண்டும்.

பன்றிக்காய்ச்சல் நோய் குழந்தைகளை வெகுவாகப் பாதிக்கின்றது. பாதிக்கப்பட்ட குழந்தைகள் சோர்வாக காணப்படுவர். தொடர்ச்சியான கடுமையான காய்ச்சல் காணப்படும். வேகமாக மூச்சு எடுப்பர். சுவாசிக்கக் கஷ்டப்படுவர். வாந்தி எடுப்பர், தோல் நீல நிறமாக மாறலாம். நீராகாரங்களை எடுப்பதைத் தவிர்ப்பர். காய்ச்சலுடன் சளி, இருமல் காணப்படும். தோலில் சிவப்புப் புள்ளிகள் ஏற்படலாம்.

பன்றிக்காய்ச்சல் கிருமி குளிரான இடத்தில் 2 நாட்கள் உயிருடன் இருக்கும். ஏனைய இடங்களில் பல மணி நேரம் உயிருடன் இருக்கும். நோய்க் கிருமி நோயாளி இருமும் போதும், தும்மும் போதும் காற்றில் பரவும். சளித்திவலைகள் மூலம் பரவும். இத் திவலைகள் கதிரை, மேசை, கைபிடி போன்ற இடங்களில் உள்ள போது தொடும்போது கையில் ஒட்டிக்கொள்ளும். பின் அதனை கண், மூக்கு, வாய் போன்ற பகுதிகளில் தொடும்போது தொற்றிக் கொள்ளும்.

நோயரும்பு காலம் அதாவது கிருமி தொற்றி நோய் அறிகுறி ஏற்படும் வரையான காலம் 1 - 3 நாட்கள் ஆகும்.

பொதுவாக நோய் அறிகுறிகள் காய்ச்சல், சளி, இருமல், தும்மல், தலைவலி, தொண்டைவலி, வாந்தி, வயிற்றுப்போக்கு, மூச்சுவிடுதல் சிரமம், நெஞ்சுவலி, மயக்கம், சளியுடன் இரத்தம் வெளிவரல் என்பனவாகும். நீரிழிவு நோயாளிகளில் குருதியில் வெல்லத்தின் அளவு கட்டுப்பாட்டில் அமையாது. மனச் சோர்வு ஏற்படும். இருமல் சில கிழமைகளுக்குத் தொடரும்.

பன்றிக்காய்ச்சல் நோய் பரவாது இருப்பதற்கு உரிய அறிவுரைகள்

(1) உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் பன்றிக்காய்ச்சலில் இருந்து காப்பாற்ற விழிப்படையுங்கள்.

(2) கைகளைச் சவர்க்காரத்தினாலும், தண்ணீராலும் நன்கு கழுவவும்.

(3) இருமும்போதும், தும்மும்போதும் கைக் குட்டையை உபயோகிக்கவும்,

(4) முகத்தைமூடி முகக்கசவம் (mask) உபயோகிக்கலாம்.

(5) கண், மூக்கு, வாயினை கைகளால் தொடுவதைத்தவிர்க்கவும்

(6) தினமும் நன்றாகக்குளிக்க வேண்டும்.

(7) வெளியில் சென்றுவிட்டு வீட்டில் குழந்தைகளை கைகழுவாது தூக்காதீர்கள்.

(8)போசணையான உணவுகளை உண்ண வேண்டும்.

(9) நோய்க்கிருமி பெருகுவதைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு வழங்கப்படும்.

நோயினை உறுதிப்படுத்தல்

பொதுவாக ஆய்வுகூடப் பரிசோதனைகள் தேவைப்படுவதில்லை. நோயாளியின் சரிதத்தில் இருந்து நோய் நிலையினை உய்த்தறியலாம். நோயாளியின் சளித்திவலையில் அல்லது தொண்டையில் இருந்து பெற்ற சளி மாதிரி நோய்க்கிருமி யினை உறுதிப்படுத்தலாம். மேலும் தொடர் குருதிப் பரிசோதனை மூலம் பிறபொருள் எதிரியினளவை அளவிட்டும் நோயினை உறுதிப்படுத்தலாம்.

நோய்க்கான சிகிச்சை

(1) நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம் வேதனையை அனுபவிப்பவர்களாகக் காணப்படுவர்.

(2) அவர்களுக்கு உடல் நோவினை நீக்கவும், காய்ச்சலை நீக்கவும், பரசிற்றமோல் மாத்திரைகளை வயதிற்கும், நிறைக்கும் ஏற்ப அளிக்கலாம்.

(3) போதிய நீராகாரம் வழங்கப்படல் வேண்டும். ஜீவனியினைப் பரிந்துரைக்கலாம்.

(4) படுக்கையில் ஓய்வு தேவை.

(5)இந்நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்புச்சக்தி குறைவதால் பற்றீரியாத் தாக்கம் ஏற்படலாம்.

எனவே பற்றீரியாவை எதிர்கொள்ளும் நுண்ணுயிர் கொல்லியும் வழங்கப்படல் வேண்டும்.

(6) Tamiflu டாயிபுறா மருந்து வைரசின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும்.

இதனை 5 நாட்களுக்கு கடுமையான நோயாளிக்கு அளிக்கலாம்.

(7) போதிய போசணை உள்ள ஆதாரங்களை எடுத்தல் வேண்டும்.

(8) சிறுவர்கள், முதியவர்கள், நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்தவர்கள், கர்ப்பிணிகள் ஆகியோர் போதிய கவனம் எடுத்தல் வேண்டும்.

பன்றிக் காய்ச்சல்
விழிப்பு வென்றிடுவோம்
பன்றிக்காய்ச்சலினை
இன்று சென்றிடுவோம்
வைத்தியத்திற்கு நன்று
நின்றிடுவோம் எவர்
எதிரில் இருமாது என்றும்
கழுவிடுவோம் கைகளை
மீண்டும் மீண்டும்

கண், வாய்,
மூக்கினைக் கைகளால்
தீண்டாது காத்திடுவோம்
கிருமி பரவலை என்றும்.

இருமல், காய்ச்சல், சளி இவற்றுடன் உடல்வலி, தொண்டை நோ இவையே பிரதான அறிகுறிகள்

உடற்களைப்பு, சோர்வு, வாந்தி உடன் சேர்ந்து காணப்படலாம். இத் தீத்துக்கள் சுரத்தில் மூச்செடுத்தலில் சிரமம், வயிற்றோட்டம் உடன் மனச்சோர்வும் காணப்படலாம்.

போதிய நீராகாரம் அவசியம் நோயுறின்உடற் சுத்தம் அவசியம் சுவாசக்காப்பு அவசியம் போசணை மிக்க உணவு அவசியம். காய்ச்சல் தணிப்பு மருந்தாக பரசிற்றமோல் அவசியம். விழிப்படைவோம் விழித்திடுவோம்

மருத்துவர்
சி. யமுனாநந்தா

மனச்சாட்சியை கொல்லக்கூடாது.
அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்.
- சாமுவேல் கால்ரிட்ஜ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இந்த வருடம் இப்படி என்றால் இரண்டு வருடத்தின் பின் எப்படி?

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை அமுலாக்குவதற்காக இலங்கை அரசுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்படவுள்ளமை தெரிந்த விடயமே.

இலங்கை அரசுக்கு இரண்டு வருட கால அவகாசத்தை வழங்குவதற்கு கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை தனது சம்மதத்தை இலங்கை அரசுக்கும் அதனூடாக ஐ.நாவுக்கும் தெரிவித்து விட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளே கால அவகாசம் வழங்குவதற்கு உடன்படும் போது அதனை ஏதாவது நாடு எதிர்க்குமாயின் அந்த நாட்டுக்குப் பிடித்து விட்டது என்றே மற்றவர்கள் விமர்சிப்பர்.

போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களே கால அவகாசத்துக்கு ஆம் என்ற பிறகு கால அவகாசம் வழங்க வேண்டாம் என்று யார்தான் வலியுறுத்தப் போகின்றனர்.

ஆகவே நடைபெற்று வரும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்படும் என்பதுடன் எந்தவிதமான நிபந்தனைகளும் விதிக்கப்படமாட்டாது என்பது சர்வ நிச்சயம்.

ஐ.நாவின் தீர்மானங்களை அமுலாக்க ஆறு மாத கால அவகாசம் தரப்படும் என ஜெனிவாவில் அறிவிக்கப்படுமாயின், கடுமையான நிபந்தனைகளும் இறுக்கமான விதப்புரைகளும் இலங்கை அரசுக்குக் கிடைத்திருக்கும்.

ஆனால் கால அவகாசம் என்பது இரண்டு வருடங்கள். தான் எடுத்த தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு இரண்டு வருட கால அவகாசத்தை ஐ.நா வழங்குமாயின், அதன் பொருள் ஏற்கெனவே ஐ.நா சபை இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகள் - தீர்மானங்கள் மிகவும் கடினமானவை. அவற்றை உடனடியாக அமுல்படுத்த முடியாது.

இதன் காரணமாகத்தான் மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்படுகிறது என்பதாகப் பொருள்படும்.

ஆக, இலங்கை அரசுக்கு இரண்டு வருட கால அவகாசத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வழங்கும் போது எந்தவிதமான நிபந்தனைகளையும் கடுமையான எச்சரிக்கைகளையும் ஐ.நா கூட்டத்தொடர் வழங்காது என்பது உறுதியாகிறது.

இதைவிடுத்து இலங்கை அரசுக்கு கடும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டே கால அவகாசம் வழங்கப்படும் என்று வெளிவரும் செய்திகள் தமிழ் மக்களை ஏமாற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் காப்பாற்றும் தந்திரமேயன்றி வேறில்லை.

இது ஒருபுறமிருக்க, 2015 இல் இலங்கை அரசுக்கு விதிக்கப்பட்ட ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் மேலும் இரண்டு ஆண்டு கால அவகாசத்தை வழங்குவதாக இருந்தால்,

2018இல் நடைபெறும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான எந்த விடயமும் கதைபட முடியாதென்பதே நிஜம்.

ஆக, 2019இல் கூடுகின்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசைப் பார்த்து என்ன கேட்கும்?

எங்கள் தீர்மானத்தை நிறைவேற்றியாயிற்றா என்றா கேட்கும். இல்லவே இல்லை.

இந்த உண்மை தமிழ் மக்களைத் தவிர இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் நன்கு தெரியும்.

# இலங்கையில் வரட்சியால் ஒன்பது லட்சம் பேர் பாதிப்பு

## பன்னாட்டு ஊடகம் செய்தி

இலங்கையில், கடந்த ஐந்து ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு வரட்சி நிலவுவதாகவும், இதனால் சுமார் ஒன்பது லட்சம் பேர் கடும் உணவுப் பாதுகாப்பின்மைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் றொய்ட்டர் செய்தியை மேற்கோள்காட்டி உலக உணவுத் திட்ட நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

அரச முகவர் நிறுவனங்கள் மற்றும் நிவாரண அமைப்புக்கள் இணைந்து, கடந்த பெப்ரவரி மாதம் நடத்திய ஆய்வில், வரட்சியால் பாதிக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அந்தக் குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் கடன் சுமை ஆகியவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளதாக மேற்படி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நெல் அறுவடைப் பதிவுகளின்படி, வழக்கத்தையும் விட சுமார் 63 சதவீதம் குறைவான அளவு அறுவடையே பதிவாகியிருப்பதாகவும், இது கடந்த நாற்பது ஆண்டுகளில் ஒரு போதும் ஏற்படாத ஒரு நிலை என்றும் 'சேவ் த சில்ரன்' அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் கடந்த செப்டெம்பர் மாதம் முதல் கடும் உணவுப் பற்றாக்குறைக்கும், கடன் சுமைக்கும் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த ஆய்வு அறிக்கை இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# டெங்கு நோயைக்கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கவும்

## அமைச்சர்களுக்கு ஜனாதிபதி பணிப்பு

(ஏறாவூர்)

திருகோணமலை கிண்ணியாவில் தீவிரமடைந்துள்ள டெங்கு நோயைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரசின் விசேட கலந்துரையாடல் கூட்டமொன்று நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், டெங்கு நோயினால் கிண்ணியாவில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

டெங்கு நோயின் தாக்கத்தால் கிண்ணியாவில் இதுவரை 14 மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும் 800 இற்கும் மேற்பட்டவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சுட்டிக் காட்டியதுடன் அங்குள்ள வைத்தியசாலைகளில் நிலவும் ஆளணி மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறைகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சென்றார்.

இந்த விடயம் தொடர்பில் அவசரமாக நடவடிக்கை எடுக்குமாறும் வைத்தியசாலைகளில் நிலவும் ஆளணி மற்றும் பௌதீக பற்றாக்குறைகள் சம்பந்தமாக ஆராய்ந்து கொழும்பிலிருந்து விசேட வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் மருந்து வகைகளை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

இதேவேளை, கிண்ணியாவில் ஏற்பட்டுள்ள நிலைமையை அனர்த்தமாக பிரகடனப்படுத்துமாறு இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் முன்வைத்த கோரிக்கை சம்பந்தமாக, ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கையினை எடுக்குமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவுக்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், கிண்ணியாவில் ஏற்பட்டுள்ள அவசர நிலை சம்பந்தமாக அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்விடம் இதன்போது உறுதியளித்தார். (இ-5)

# கொழும்பில் சத்தியாக்கிரகப் போராட்டம்

வடக்கு-கிழக்கில் நடைபெறும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்தும் அந்த போராட்டங்களுக்கு விரைவான தீர்வை வழங்க வலியுறுத்தியும் கொழும்பில் ஒருவாரம் சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக சமவுரிமை இயக்கம் அறிவித்துள்ளது. இந்த் போராட்டத்திற்கு புதிய ஜனநாயக மாக்கிச லெனினிச கட்சி, தமிழர் சமூக ஜனநாயக கட்சி, சமத்துவ சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு, ஆகியனவும் ஆதரவு தெரிவித்துள்ளன. மேற்படி கட்சிகளும் அமைப்புக்களும் இணைந்து யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர். இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

யுத்தம் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், யுத்தத்தை நடத்திய மகிந்த அரசு போய் தற்போது ரணில்-மைத்திரி அரசு வந்து இரு வருடங்களுக்கு மேலாகி விட்டது. ஆனாலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நடைமுறைப்படுத்தப்பட்டதாக தெரியவில்லை. இன்று ஆட்சியில் வீற்றிருக்கும் ரணில்- மைத்திரி அரசு ஜனநாயகத்தை வழங்குவதாகவும் வாக்குறுதி கொடுத்தே வடக்கு-கிழக்கு மக்களின் பெரும்பான்மையான ஆதரவுடன் அதிகாரத்திற்கு வந்தது.

ஆனால் வடக்கு-கிழக்கில் யுத்த சூழ்நிலைகளுக்கு நிகராக தொடர்ந்தும் முப்படைகள் குவித்து வைக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கான ஏக்கர் மக்களுடைய நிலங்களும் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இக்காணிகள் தேசிய பாதுகாப்புக்குத் தேவை எனக் கூறப்பட்ட போதும் பல் தேசிய கம்பனிகளுக்கு பிரித்து கொடுக்க ஏற்பாடுகள் நடைபெற்று கொண்டுள்ளன. மக்களுடைய காணிகளில் பாரியளவு பண்ணைகள் அமைக்கும் வேலையும் மற்றும் விவசாயமும் மேற்கொள்ளப்படுகின்றது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியாமல் வறுமையில் வாழ்கின்றனர். இந்திய உதவியினால் வீடு வழங்கல் என கூறப்பட்ட போதிலும் இன்னும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வீடு கட்டுவதற்கு காணி அற்ற நிலையில் வாடகை வீடுகளிலேயே தங்கியுள்ளனர். யுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அழிவுகளுக்கும் அழிப்புக்களுக்கும் எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

யுத்த முடிவில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் இன்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் தான் உள்ளார்கள். பல நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளுக்குள்ளேயே உள்ளார்கள். இவை தொடர்பான வாக்குறுதிகளை கடந்த காலங்களில் அரசு வழங்கியிருந்த போதிலும் அவை எவையும் நிறைவேற்றப்படாமல் இன்றும் கிடப்பிலேயே உள்ளன. அத்துடன் இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இந்த அரசாங்கம் முனைப்புக் காட்டியதாகவும் தெரியவில்லை எனப் பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தனர். (இ-4)

## சிறுநீரக நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகமும் நல்லூர் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் சிறுநீரக நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட ஆளுநர் (306 B1), லயன் டாக்டர் வி.தியாகராஜா, சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி, சுகாதார சேவைகள் பிராந்திய இயக்குநர் டாக்டர் கே.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் வளவாளர்களாக யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட சமூகம் மற்றும் குடும்ப மருத்துவத் துறை தலைவர் டாக்டர் ஆர். சுரேந்திரகுமரன், யாழ். போதனா வைத்திய சாலையின் சிறுநீரக நோய் தொடர்பான வைத்திய நிபுணர் டாக்டர் ரங்கா வீரக்கொடி, யாழ். போதனா வைத்திய சாலையின் பொது வைத்திய நிபுணர் டாக்டர் ரி.பேரானந்தராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன் கிழமை மன்னார் பிரதேசத்தில் வங்காலை, தோமஸ்புரி, திருக்கேதீஸ்வரம், மாந்தைகிழக்கு, முள் ளிப்பள்ளம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், வங்காலை கடற்படைமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# விக்ரோறியாவின் விடி வெள்ளி மறைந்தது

சிவகுமாரனாக

06 . 07 . 1955



சிவனின்குமாரனாக

12 . 03 . 2017

## விழுதொன்று சாய்ந்தது ...

விக்ரோறியாவின் விடி வெள்ளி ஒன்று
அதன் மேற்கே உதித்து
கிழக்கே மறைந்து விட்டது ...
ஏற்க முடியவில்லை
ஐயகோ ... ! என்று
அன்னையவள் கதறுகின்றாள்.
தன் மண்ணில் சின்னஞ்சிறு பாலகனாய்
தாள் பதித்து ...
கட்டிளம் பிள்ளையாய் கல்வி பயின்று ...
ஆசிரியனாய் தலை நிமிர்ந்து.
சாரணனாய் வீராப்புடன் நடந்து
பிரதி அதிபர் என ...
எத்தனை வகிபாகங்கள்
இத்தனை நாள்
நீ செய்த சேவைகள் ... !
உன்னால் உருவாக்கப்பட்டவர்கள்
எத்தனை பேர்.
ஒரு மேய்ப்பானாய் ...
கல்லூரியைக் காத்த கனவானே!
நீ எங்கே ஐயா சென்றுவிட்டாய் ... ?
கல்லூரியின் வளர்ச்சிக்காய்
கரிசனையாய் உழைத்தவனே,
கல்லூரியையே நின் நெஞ்சில்
சுமந்து களைத்தவனே ...
ஏனிந்த ஓய்வு ...?
நிரந்தரமாய் ...
கல்லூரி உனக்கு காலாற ஓய்வு தர
தள்ளாமை உன்னை
தலைநிமிர்ந்து பார்க்க முன்னர்
பொல்லா நோய் வ்ந்து ... நீ
புவிக்கு விடை தந்தாயோ?
சொல்லாமற் போய்விட்டாய் ...
துயரால் நாம் வாடுகின்றோம்.

# அமரர் செல்லையா சிவகுமாரன்

**(ஓய்வு நிலை பிரதி அதிபர், யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம், சாரணர் உதவி மாவட்ட ஆணையாளர் - காங்கேசன்துறை)**

## சிறப்புடன் வாழ்ந்த சிவகுமாரச் செம்மல்

வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட எம் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய அமரர் செல்லையா சிவகுமாரன் அவர்கள் நிறைவான ஆசிரியத்துவம் கொண்ட சேவையாளன். நெல்லியான் சுழிபுரம் இவரது பிறப்பிடமாகும். பண்பட்ட விவசாயக்குடும்பத்தில் வந்த இவர் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்ற பின்னர் உயர்தரக் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வணிகத்துறையில் தொடர்ந்தார். இரண்டு அக்காமாருடனும் நான்கு அண்ணாமாருடனும் வாழ்ந்த சிவகுமாரன் குடும்பத்தின் கடைக்குட்டியாவார். மிக இளவயதிலேயே தந்தையாரை இழந்தவர். கல்வியில் உயர்நிலையை அடைய வேண்டுமென்ற அம்மாவினதும் சகோதரர்களினதும் விருப்பத்திற்கிணங்க கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். 1983ஆம் ஆண்டு ஆடிக்கலவரத்தால் நிலைகுலைந்து யாழ்ப்பாணம் வந்தவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வாய்ப்புக் கொடுக்க வணிகமாணிப்பட்டதாரியாக வெளியேறி குடும்பத்தினரின் ஆசையை நிறைவு செய்தார்.

1985ஆம் ஆண்டிலே ஆசிரிய நியமனம் பெற்று புத்தளத்திலே 1990ம் ஆண்டு வரை பணிசெய்தார். விக்ரோறியாக்கல்லூரியில் படித்த காலத்திலேயே சாரணர் இயக்கத்திலும் Cadet இயக்கத்திலும் இணைந்து மிக விசுவாசமாகச் செயற்பட்டார். கப்டன் சோமசுந்தரம் ஆசிரியரின் வழிப்படுத்தலில் அந்நாட்களில் விக்ரோறியாவின் Cadet இயக்கம் முதன்மைநிலை பெற்ற போது அவ்வணியில் பெருமைக்குரிய உறுப்பினராக அன்னார் திகழ்ந்தார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் இவர்களின் குடும்ப குலதெய்வமாகும். அவ்வாலயத்தில் பல திருநாட்கள் மற்றும் திருப்பணிகள் சிவகுமாரனின் தாய்தந்தையராலும் அவர்களின் பின்னர் இவரும் இவரது சகோதரர்களாலும் தொடரப்படுகின்றது. அந்நாராயணன் கோவிலுக்கு அண்மையில் வாழ்ந்த அமரர் நல்லையாவின் மூத்த புதல்வி தேவகல்யாணி அவர்களுடன் 1987இல் இல்லறத்தில் இணைந்து கொண்டார். தேவகல்யாணி அவர்களும் வணிகமாணி பட்டதாரி ஆசிரியர் ஆவார். ஆஸ்திக்கு ஒரு மகன் ஆசைக்கு ஒரு மகள் என்று சொல்வதற்கிணங்க இரு குழந்தைகள் கொண்ட இன்பமான குடும்பத்தலைவரானார்.

புத்தளத்திலிருந்து இடமாற்றலாகி வந்த இருவரும் தாம் கற்ற பாடசாலையான விக்ரோறியாக் கல்லூரியில் 1991ஆம் ஆண்டு ஆசிரியப்பணியைத் தொடர்ந்தனர். ஆரம்பத்தில் கணக்கியல், வணிகக்கல்வி போன்ற பாடங்களைக் கற்பித்த இவர் பின்னர் அளவையியல் பாடத்தைப் போதிக்கும் சிறந்த போதனையாளனாக மிளிர்ந்தார். அக்காலத்தில் விக்ரோறியாக் கல்லூரி அதிபராயிருந்த திரு.கா.சந்திரபாலன் அவர்களின் கீழ் மிக அர்ப்பணிப்புள்ளவராகவும் மாணவர்களின் கல்வி மற்றும் சகல செயற்பாடுகளிலும் விருப்புள்ளவராகவும் பணி செய்தார். க.பொ.த. உயர்தர மாணவ மன்றத்தைப் பொறுப்பேற்று சிறப்பாக வழிநடாத்தினார். சாரணர் இயக்கத்துக்குப் புத்துயிர் அளித்துக் கட்டி எழுப்பினார். பல எடுத்துக்காட்டான சாரண மாணவர்களை உருவாக்கினார். கல்லூரியில் மாணவர்களின் ஒழுக்கம் கட்டுப்பாடு போன்றவற்றில் கண்ணும் கருத்துமாக இருந்தார். இவரது சேவையின் சிறப்பினால் அனைவரதும் விருப்பத்துக்குரிய ஆசிரியரானார். கல்லூரிக் கடமைகளுடன் தன் தொழில் தகைமையை விருத்தி செய்ய பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் தனதாக்கிக் கொண்டார்.

நாட்டில் ஏற்பட்ட போராட்டங்களின் விளைவாக 1996ஆம் ஆண்டு வவுனியாவுக்கு இடம்பெயர்ந்து சென்றார். சிறிய குழந்தைகளுடன் சிரமத்தின் மத்தியில் தன் கடமைகளை சரிவர நிறைவு செய்யும் சிவகுமாரன் தம்பதிகளுக்கு வவுனியாப் பாடசாலைகள் இடம் கொடுத்தன. அந்நாட்களில் ஆயிரக்கணக்கான மாணவர்களும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் வவுனியா நோக்கி நகர்ந்ததால் அங்கு கல்வித்தேவை விரிவடைந்தது. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையைத் தொடர்ந்தார். அங்கு ஆசிரிய விடுதியில் வசித்துக் கொண்டு அப்பாடசாலையின் பெறுமதி மிக்க ஆசிரியராக வலம் வந்தார். அங்கும் அவர் தன் சாரணத்துவ சேவையை முன்னெடுத்தார். இலங்கை சாரணர் சங்கத்தினரால் இனங்காணப்பட்டு சாரணர் பயிற்றுவிப்பாளரானார். இதன் பொருட்டு வெளிநாடுகளிலும் சென்று சாரணியம் தொடர்பான பயிற்சிகளைப் பெற்று பெறுமதிமிக்க சாரண சேவையாளரானார்.

1996ம் ஆண்டு மீண்டும் ஊர் திரும்பிய அவர் தனது சொந்த ஊரான நெல்லியான் இராணுவக் கட்டுப்பாட்டில் மக்கள் குடிகளற்ற பிரதேசமாய் இருந்ததால் யாழ்நகரிலும் பின்னர் தனது அக்காவுடன் மானிப்பாயிலும் வாழ்ந்து வந்தார். இந்நாட்களில் தனது பிள்ளைகளை யாழ் இந்துக் கல்லூரி மற்றும் இந்து மகளிர் கல்லூரி என்பவற்றில் கற்பித்து மகனை உயர்கல்விக்காக சிங்கப்பூருக்கும் மகளை பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கும் அனுப்பினார். மகன் Software Engineer ஆக பட்டம் பெற்று Bahrain இல் கடமையாற்ற மகள் ஆசிரியராக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் பணிசெய்ய "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்ற வள்ளுவன் வாக்குக்குரிய தகப்பனாகப் பெருமை கொண்டார்.

இணுவில் மத்திய கல்லூரியில் ஆசிரியத்துவத்தை மேற்கொண்டு அங்கும் பேர் சொல்லும் ஒருவராகத் திகழ்ந்ததுடன் சாரணியத்தையும் வளர்த்தெடுத்தார். இந்நிலையில் சேவையின் நிறைவு காலத்தை தனது விக்ரோறியாக் கல்லூரியில் இணைத்துக் கொண்டு செயற்படுத்தினார். 2010ஆம் ஆண்டு மீண்டும் விக்ரோறியாக்கல்லூரிக்கு பிரதி அதிபராக வந்த சிவகுமாரன் அவர்கள் அதிபருடன் சேர்ந்து பழைய மாணவர்களின் உதவியுடன் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்தார். கல்லூரியின் பழைய மாணவரான அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் நிர்வாகச் செயற்பாடுகளின் ஊக்கியானார். சாரணர் இயக்கத்துக்கு புத்துயிரளித்தார். மாணவர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார். மாணவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்தார். கல்லூரியின் சகல துறைச் செயல்களிலும் தன் முத்திரையைப் பதித்தார்.

தான் இளைப்பாற முன்னர் ஒரு சாரணராவது ஜனாதிபதி சாரணர் விருது பெற வேண்டுமென்பதற்காகக் கடுமையாக உழைத்து வெற்றியும் கண்டார். பழைய மாணவர்கள் வழங்கிய பல்வேறு வகையான உதவிகளை உரிய முறையில் சிறப்பான உச்ச பயன்பாட்டையடைய அதிபருக்கு இரு கரமாக நின்றார். பௌதிக நிலையிலும் கல்வித்துறையிலும் மாணவர்கள் செயற்பாட்டிலும் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டன. வசதி குறைந்த வாழ்வாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உதவுகரமானார். இவரும் அதிபருமாக பழைய மாணவர்களுடன் தொடர்பு கொண்டு கற்றல் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தனர். அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் 2014இல் இளைப்பாறிய போது பதில் அதிபராகப் பொறுப்பெடுத்து கல்லூரியை நடாத்தினார். புதிய அதிபராக திருமதி.ச.சிவகுமார் பதவியேற்ற பின் தொடர்ந்து தான் பிரதியதிபராய் இருந்து சகல விடயங்களிலும் அதிபருடன் சேர்ந்து சேவையாற்றினார். 2015ஆம் ஆண்டில் தன் அறுபதாவது அகவையில் ஓய்வுபெற்ற பின்னும் கல்லூரியுடனான தொடர்பைத் தொடர்ந்தார். சாரணத்தை முன்னெடுத்தார். பழைய மாணவர்களின் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தார். கல்லூரியின் நினைவுகளுடனும் செயற்பாடுகளுடனும் காலம் கழித்தார். பல வருடங்களாக சாரணர் உதவி மாவட்ட ஆணையாளராக கடமையாற்றுகின்றார். சென்ற மாதத்தில் இலங்கை சாரணர் சங்கம் வழங்கிய தேசிய ரீதியான உயர்மட்ட விருதினை கொழும்பு தாமரைத் தடாகத்தில் மேதகு ஜனாதிபதி அவர்களிடம் பெற்று பெருமை மிக்க சாரணியத்துவ உயர் மனிதனானார்.

அமரர் சிவகுமாரன் அவர்களால் கல்வியாலும் சாரணியத்தாலும் உயர்வடைந்தவர்கள் பல நூற்றுக்கணக்கானவர்கள். அவரது உதவி செய்யும் மனப்பாங்கினால் இன்றும் பல மாணவர்கள் தமது கல்வியினைத் தொடர்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சமூகத்தின் பல தரப்பினராலும் உள்ளன்புடன் நேசிக்கப்படும் செல்லையா சிவகுமாரன் கடந்த ஞாயிற்றுக்கிழமை எமையெலாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இவ்வுலகை நீத்தார். தனது அன்பு மனையாள் அருமை மகன் ஆசை மகள் மற்றும் உறவுகள் கல்விச் சமூகத்தினர் சாரணர் இயக்கத்தினர் அன்னாரின் பிரிவால் துயரில் மூழ்கியுள்ளனர்.

"தோன்றின் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவரின் வாக்குக்கிணங்க உன்னத நிலையில் மிக நிறைவான வாழ்வு வாழ்ந்து தன்னையும் தன்னோடிணைந்தவர்களையும் மேன்மை நோக்கிக் கொண்டு சென்ற உத்தமனின் ஆத்மா அவர் என்றும் மனதிலிருத்தி வணங்கும் பொன்னாலை நாராயணனின் பாதங்களில் ஆறுதலடைவதாக.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**கனத்த இதயத்துடன்,**

**விக்ரோரியாக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

**ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் ஒன்றியம்**

(8316)

# கிழித்து எறிந்தார்...

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையில் கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு அமுல்படுத்த விரும்பாத நிலையில் சர்வதேச பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த கோரும் பிரேரணையை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவரும் வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சி உறுப்பினருமான வி.தவநாதன் சபையில் கிழித்து எறிந்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் கொண்டு வரப்பட்ட பிரேரணை தொடர்பில் ஆராயும் சிறப்பு அமர்வானது நேற்றைய தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது முன்னதாக சிவாஜிலிங்கம் தனது பிரேரணையை முன்மொழிந்தார்.

இதன்போது கருத்துரைத்த எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் குறித்த பிரேரணையும் ஏற்கெனவே உறுப்பினர்களின் அனுமதி பெறப்பட்ட பிரேரணையும் வேறு வேறாக காணப்படுகின்றது. இந்த சபையில் இவ்வாறுதான பல விடயங்கள் நடைபெறுகின்றன. அனுமதி பெறப்படுவது ஒன்று இங்கு கொண்டுவரப்படுவது ஒன்று எனவே சபையை அவமதிக்கும் இந்த பிரேரணையை கிழித்து எறிகின்றேன் என்று கூறி அதனை கிழித்து எறிந்தார்.

எனினும் பிரேரணை மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்று இறுதியில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட நிலையில், அது தொடர்பில் பேசிய தவநாதன், குறித்த பிரேரணை தமிழ் மக்களுக்கு முக்கியமானது எனவும், இந்த பிரேரணையாவது தமிழ் மக்களுக்கு விடிவை தேடி தரட்டும், நான் பிரேரணையை கிழித்து எறிந்தமைக்கு காரணம் பிரேரணை கொண்டுவரப்பட்ட முறையை எதிர்த்தே மாறாக அந்த பிரேரணையின் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொள்கின்றேன். என அவர் குறிப்பிட்டார். மேலும் பிரேரணை நிறைவேற்றப்படும் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவர் எதிர்ப்பு தெரிவித்த நிலையிலும், எதிர்க்கட்சித் தலைவர் நடுநிலை வகித்த நிலையிலும் தவநாதன் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

# வேலையற்ற...

அடுத்து வடமாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளை ஆண்டு ரீதியாக பதிவு செய்யும் நடவ்டிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடமாகாணத்தில் உள்ள வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பு குழு அறிவித்துள்ளது.

வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் தமக்கான அரச நியமனங்களை கோரி 16 ஆவது நாளாக நேற்றைய தினம் தமது போராட்டத்தினை தொடர்ந்திருந்தனர்.

இந்த நிலையில் வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம், வட மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் மற்றும் வேலையற்ற பட்டதாரிகள் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்டோர் நேற்றைய தினம் மேற்குறித்த விடயம் தொடர்பில் வட மாகாண ஆளுநரை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த கலந்துரையாடல் தொடர்பாக வேலையற்ற பட்டதாரிகள் சங்க பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில்,

ஆளுநருடனான சந்திப்பின் போது எமது கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். அதற்கு பதிலளித்த அவர், வடகிழக்கில் யுத்தத்தின் பின்னர் சரியான நிர்வாகக் கட்டமைப்பு இல்லை. அதை தற்போது சீர்ப்படுத்தி வருகின்றோம். இந்த சூழலில் வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பான முழுமையான விபரங்கள் எவையும் இதுவரை பெறப்படவில்லை அத்துடன் மத்திய மாகாணத்தில் உள்ள வேலைவாய்ப்புக்கள் தொடர்பான வெற்றிடங்களும் பெறப்படவேண்டியுள்ளது. எனவே அதற்கு 3 வாரங்கள் தேவைப்படுகிறது. 3 வாரத்தினுள் வேலைவாய்ப்பு தொடர்பான உரிய பதிலை வழங்குவேன் அது வரை குறித்த போராட்டத்தை கைவிடுமாறு கோரியிருந்தார்.

ஆனால் வேலையற்ற பட்டதாரிகளின் ஒட்டுமொத்த முடிவாக தமக்குரிய தீர்வு கிடைத்த பின்னரே போராட்டத்தை கைவிடுவதாக தெரிவித்திருந்தனர். அந்த வகையில் தீர்வு கிடைக்கும் வரை அமைதியான முறையில் குறித்த போராட்டத்தை தொடரவுள்ளோம் எனவும் அறிவிப்பு செய்துள்ளனர்.

மேலும் வட மாகாணத்தில் அரச வேலைவாய்ப்பற்றிருக்கும் பட்டதாரிகள் தொடர்பான விபரங்களை ஆளுநர் கோரியுள்ளதால் ஆண்டு ரீதி யாக பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இன்றைய தினம் 2011ஆம்ஆண்டுக்குரிய பட்டதாரிகள் யாழ்.மாவட்ட செயலகமுன்றலில்வருகை தந்து தமது பதிவினை மேற்கொள்ளலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

# காதல் ஜோடி...

திசை நோக்கி பயணித்த மோட்டர் சைக்கிளொன்று எதிர் திசையில் வந்த பாரவூர்தியில் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர், ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில், யுவதி நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்துள்ளவர்கள் பெலவத்தை கோரகதுவ பிரதேசத்தை சேர்ந்த 26 வயதான ஜனக என்ற இளைஞரும், கும்பதுவ பிரதேசத்தை சேர்ந்த 21 வயதான சகுரா என்ற யுவதியும் என தெரியவந்துள்ளது.

குறித்த யுவதி தனியார் வகுப்பொன்றுக்கு சென்று விட்டு தனது காதலனுடன் மீண்டும் வீடு திரும்பி கொண்டிருந்த போதே இந்த கோரச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சடலங்கள் நாகொட வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று பிரேத பரிசோதனை இடம் பெற்ற பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இதேவேளை விபத்து தொடர்பில் பாரவூர்தியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் சம்பவம் தொடர்பில் மீகாஹதென்ன பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-11)

# சர்வதேச பொறி...

த்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி பிரேரணை திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அப்பிரேரணையின் விபரம் வருமாறு,

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையில் கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கையின் இணை அனுசரணையில் நிறைவேற்றப்பட்ட பொறுப்புக்கூறல், உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு, அடக்குமுறை, மற்றும் சட்டத்துக்கு புறம்பான நில ஆக்கிரமிப்புக்கள் மீண்டும் இடம்பெறாமை, இழப்பீட்டு அலுவலகம் தொடர்பான தீர்மானம் 30/1 ஐ இலங்கை அரசாங்கமானது முழுமையாக அமுல்ப்படுத்துவதற்கான எந்த முன் நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கவில்லை.

இலங்கை அரசாங்கமானது ஏற்றுக்கொண்டு அங்கீகரித்துள்ளதும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச சமூகத்திற்கும் உறுதியளித்துள்ளதுமான பொறுப்புக்கூறல் செயன்முறையில் பன்னாட்டு நீதிபதிகள், வழக்கறிஞர்கள், வழக்கு தொடுனர்கள், மற்றும் விசாரனையாளர்களை ஈடுபடுத்தல் வேண்டும். இலங்கையால் அதனுடைய சொந்த கடப்பாட்டை அமுல்ப்படுத்த முடியாத அல்லது விரும்பாத நிலையில், இவ்விடயத்தை சர்வதேச நீதி பொறிமுறைக்கு உட்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையிடமும் சர்வதேச சமூகத்திடமும் இச்சபை கோருகின்றது.

உண்மை, நீதி மற்றும் சமத்துவமானதுமான அரசியல் தீர்வு இன்றி இலங்கையில் நல்லிணக்கமோ அல்லது நிலையான சமாதானமோ சாத்தியமற்றது என இச்சபை கருதுகின்றது. இச்சபையானது இலங்கையிடம் சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டுகோள் விடுக்குமாறும், மனிதவுரிமை உயர்ஸ்தானிகள் அலுவலகத்தின் 2015ஆம் ஆண்டு இலங்கை மீதான விசாரணை அறிக்கையின் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளதற்கு அமைவாக உரோம நியதி சட்டத்தை ஏற்புறுதி செய்யுமாறும், தமிழ் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்துடன் கூடியதோர் அரசியல் தீர்வை பெற்றுத்தருமாறும் ஐக்கிய நாடுகள் சபையிடமும் சர்வதேசத்திடமும் கோருகின்றது.

தமிழ் மக்கள் இலங்கையின் இணைந்த வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் உள்ள அவர்களுடைய மரபுவழி தாயகத்துக்கு உரித்துடைய ஓர் தேசிய இனம் என்பதனையும் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதையும் அங்கீகரித்து கொண்டு இலங்கை அரசாங்கமானது ஆகக்குறைந்தது இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களை கொண்ட முழுமையானதும் பூரணமானதுமான கூட்டாட்சி முறைமையை அளித்து அதனை அரசியலமைப்பில் வெளிப்படையாக பிரகடனப்படுத்தி அங்கீகரிக்கின்றதுமான நடுநிலமையானதோர் அரசியல் தீர்வை வழங்குதல் வேண்டும் எனவும் இந்த சபை கோருகின்றது என தனது பிரேரணையை சிவாஜிலிங்கம் முன்மொழிந்தார். ஆளுங்கட்சி உறுப்பினர்களின் போராதரவுடன் நிறைவேற்றப்பட்ட இந்த பிரேரணைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களான ஜெயதிலக்க, செனவிரட்ன, ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்திருந்தோடு, எதிக்கட்சி தலைவர் தவராசா நடுநிலைமை வகித்திருந்தார். (செ-4)

# கேப்பாப்பிலவு...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி சிவமோகன் சந்தித்து கலந்துரையாடினார் அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே. அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கேப்பாப்பிலவு மக்கள் தமது வாழ்விடத்தையும் வாழ்வியலையும் மீட்டுக்கொள்வதற்காக 14ஆவது நாளாகவும் போராடிவருகின்றனர் அவர்களின் அகிம்சை ரீதியான அமைதியான போராட்டத்துக்கு எதிராக இராணுவம் இன்று நீதிமன்றை நாடியுள்ளதாக அறிகிறோம்

எமது கேப்பாப்பிலவு புதுக்குடியிருப்பு வீதியை பலாத்காரமாக மறித்து வைத்திருக்கும் இராணுவத்தின் செயல் சரியா அல்லது எமது மக்களின் வாழ்விடங்களை பறித்து வைத்திருக்கும் இராணுவத்தின் செயல் சரியா என்பதற்கான நீதி நாளை(இன்று) முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழங்கப்படவுள்ளதாக அறிகிறோம் நிச்சயமாக நீதி வெல்லும் இந்த மக்களுக்கான நீதி நிலை நாட்டப்படவேண்டும் இந்த இராணுவம் எமது பாதையில் இருந்து விலகி எமது பாதை உடனடியாக திறந்துவிடப்படவேண்டும் மக்களின வாழ்விடங்களை விட்டு இந்த ராணுவம் வெளியேற வேண்டுமெனவும் தெரிவித்தார்

14ஆவது நாளாக நடைபெறும் இப்போராட்டத்தில் தம்முடைய பாடசாலை, கோவில்கள், பொதுநோக்குமண்டபம் உள்ளிட்டவை மற்றும் தமது பொருளாதார வளமும் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக கவலை வெளியிட்ட மக்கள் தமது காணிக்குள் செல்லாது போராட்டத்தை கைவிடப் போவதில்லை என தெரிவிக்கின்றனர்.

கேப்பாப்பிலவு கிராமசேவகர் பிரிவிற்கு உட்பட்ட பிலவுக்குடியிருப்பு, சீனியாமோட்டை, சூரிபுரம் ஆகியவற்றை போராட்டம் மூலம் மக்கள் பெற்றுக்கொண்டனர் இந்நிலையிலேயே கேப்பாப்பிலவு மக்கள் பூர்வீக நிலத்தை மீட்கும் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இந்தமக்களின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக நவீன கமரா ஒன்றை இரகசியமாக பொருத்தி மக்களை ஒளிப்பதிவு செய்வதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (செ-281)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அறிவித்தல்

1. கலைப்பீட 2014/2015 கல்வியாண்டிற்குரிய முதலாம் மற்றும் இரண்டாம் வருட மாணவர்களுக்கும், 2015/2016 கல்வியாண்டிற்குரிய முதலாம் வருட மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 20.03.2017 திங்கட்கிழமை தொடக்கம் மீள ஆரம்பிக்கப்பட உள்ளது. மேற்படி மாணவர்களில் விடுதி மாணவர்கள் தத்தம் விடுதிகளுக்கு 19.03.2017 இலிருந்து திரும்பலாம்.
2. கலைப்பீடத்தில் சட்டத்துறை மற்றும் இராமநாதன் நுண்கலைத் துறை தவிர்ந்த ஏனைய துறைகளைச் சேர்ந்த மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்கள் அனைவரும் விடுதி உட்பட பல்கலைக் கழக வளாகத்தினுள் உட்பிரவேசிப்பதற்கு மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:-மேற்படி கல்வி மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்காதவாறு அனைத்து மாணவர்களும் ஒழுகுமாறு கோரப்படுகின்றனர்.**

பதிவாளர்
14.03.2017 (சி-7809)



## யாழ்ப்பாணம் மாநகர சபை பகிரங்க ஏலம்- குருநகர் மாட்டிறைச்சிக்கடை. இல.06

யாழ்.மாநகர சபையின் ஆளுகையின் கீழுள்ள குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.06 இனை 2017ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கோரப்படவுள்ளது.

இடம்:-முதல்வர் மாநாட்டு மண்டபம், யாழ்.மாநகர சபை.

காலம்:-22.03.2017-ம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணி.

ஆரம்ப கேள்வித் தொகை:ரூபா.4, 42, 175.00 (வரி நீங்கலாக).

குத்தகைக்காலம்:23.03.2017-31.12.2017 வரை.

குறிப்பு:-பகிரங்க ஏலத்தில் பங்குபெறுபவர்கள் கிராம அலுவலர் மூலம் வதிவிடத்தை உறுதிப்படுத்திய கடிதத்தை சமர்ப்பிப்பதுடன் மீளளிக்கக்கூடிய வைப்பு ரூபா.10, 000.00 இனை 22.03. 2017-ம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் சபையில் செலுத்துதல் வேண்டும். பகிரங்க ஏலத்தில் சித்திபெறுபவர் குத்தகை மற்றும் வாடகை பணத்தின் 1/3 பகுதியை (வரி உட்பட) உடனடியாக சபையில் செலுத்துதல் வேண்டும். தவறின் பகிரங்க ஏலத்தில் அடுத்ததாக சித்தி பெறுபவருக்கு வழங்கப்படும். 2017 இல் மாநகர சபையின் குத்தகையாளர்கள், நிராகரிக்கப்பட்டோர் ஏலத்தில் பங்குபற்ற முடியாது.

தேவையான மேலதிக விபரத்தை அலுவலக நேரத்தில் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.பொ.வாகீசன்**
**ஆணையாளர்,**
**யாழ்.மாநகர சபை.** 15.03.2017 (சி-7812)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## துயர் பகிர்கின்றோம்

பிறப்பு 06 07 1955
இறப்பு 12 03 2017



யாழ்.சுழிபுரம் விக்ரோறியா அன்னையில் அளவையியலும் விஞ்ஞான முறையும் என்ற பாடத்தினை உயர்தர வகுப்பில் சிறப்பாக கற்பித்து எம்மை உயர்நிலைக்கு உயர்த்திய மதிப்புக்குரிய ஆசான்

அமரர்
**செல்லையா சிவகுமாரன்**

அவர்களின் மறைவுச் செய்தி எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆசானின் மறைவினால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு ஆசானின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(8321)

A/L 1994 கலை, வர்த்தக மாணவர்கள்
யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

## வீடு விற்பனைக்கு

கச்சேரிக்கு மிக அண்மையாக நல்லூர் ஆலய எல்லைக்கு உட்பட்டு நான்கு பரப்புக் காணியுடன் மூன்று குளியல் அறைகள், நல்ல தண்ணீர் கிணறு, மூடிய வாகனத் தரிப்பிடம், பயன்தரு மரங்களுடன் கூடிய அமைதியான சூழலில் சகல வசதிகளும் கொண்ட மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 077 950 5028**

(சி-781) தரகர் தேவையில்லை



## எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress

(சி-7706)


## 13 மீனவர்கள் நேற்று...

மன்னார் கடற்பரப்பில் டைனமைற் வெடிகுண்டைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 4 மீனவர்களை படகு, மற்றும் நீச்சல் உபகரணங்களுடன் மன்னார் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதேவேளை மன்னார் விடத்தல் தீவு கடற்பரப்பில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட 09, மீனவர்களை, நாச்சிக்குடா கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவ்வாறுகைதான சந்தேக நபர்களிடம் 02, டிங்கி படகுகள், 02, ஜீ. பி. எஸ். கருவிகளையும், சட்ட விரோதமானமுறையில் பிடிக்கப்பட்ட 2 ஆயிரத்து 475, கிலோ நிறையுடைய மீன்களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்களை மன்னார் மீன்பிடித்துறை அதிகாரியிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். (செ-15)


## Van for Sale

டொல்பின் வான் LH113 Super GL வான் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 0774809019**



## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள் நெல்லியடியில்

**SLAS**
(open/Limited)
சனி - 8.30am - 1.30pm
ஞாயிறு- 8.30am - 1.30pm

பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான பரீட்சை
சனி - 8.30am - 1.30pm
ஞாயிறு- 8.30am - 1.30pm

**முகாமைத்துவ உதவியாளர் தரம் III (PMA)**
ஞாயிறு (கிழமை தோறும்)- 8.30am - 1.00pm

**ஆசிரியர் சேவை/ வங்கியாளர்/LAW**
ஞாயிறு - 8.30am - 1.30pm

**கணக்காளர் சேவை**
சனி - 8.30am - 1.30pm
ஞாயிறு- 8.30am - 1.30pm

தொடர்பு- 077 876 0992, 077 344 3962

உயர் கல்லூரி
இல.81, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
(நெல்லியடி சந்திக்கு அருகில்)
(C-780)


## சேவை நலன் பாராட்டும் 60-வது பிறந்தநாள் வாழ்த்தும்

தபால் அதிபர் தரம் I
**ஆறுமுகம் லோகேந்திரன் (SO)**
(யாழ் பிரதம தபாலக மேற்பார்வை உத்தியோகத்தர், முன்னாள் சிரேஷ்ட பரிசோதகர்)



Best Wishes

ஆறுமுகம் லோகேந்திரன் அவர்கள் 14.03.2017 நேற்றைய தினத்தில் இருந்து தனது அஞ்சல் சேவையில் சிறப்புறவே ஓய்வு பெறுகின்றார்.

அத்துடன் இன்று தனது இல்லத்தில் 60ஆவது பிறந்த நாளை கொண்டாடி மகிழும் அவர் மேன்மேலும் தனது குடும்பத்தாருடன் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்க வளமுடன்.

*வாழ்த்துவோர் :*
**யாழ் பிரதம தபாலக நண்பர்கள்**

(8319)


## கோணேஸ்வரனின் ஜேர்மனி கல்லூரி

ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான டொச் வகுப்புக்கள் அதாவது வெளிநாடு செல்பவர்களுக்கான A1 சான்றிதழுக்கு ஏற்ற வகையில் திரு. S.கோணேஸ்வரன் அவர்களால் கற்பிக்கப்படுகின்றது. புதிய பிரிவுகள் வெகு விரைவில் ஆரம்பமாகவுள்ளது. உங்கள் பதிவுகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். தொடர்பு கொண்ட பின்பு நேரில் வரவும் (புத்தர் விகாரைக்கு எதிரே 2ஆம் மாடி)

**ஆரியகுளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.** (8308) **077 970 7322**



## பண்ணை வேலையாள் தேவை

மாவிட்டபுரத்தில் உள்ள மாதிரிப் பண்ண்ணயில் பசுக்களைக் கவனமாகப் பராமரிக்கவும், ஏனைய விவசாய வேலைகளில் ஈடுபடவும் அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை. பண்ணையில் தங்கியிருக்கக் கூடியவர்கள் விரும்பப்படுவர். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உடனே தொர்டர்பு கொள்ளவும். அத்துடன் விவசாயம் கற்ற இளம் மாணவர்கள் பயிற்சியும் அனுபவமும் பெற விரும்பின் தொடர்பு கொள்க.

(8317) **தொலைபேசி : 077 565 1122**



## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கில்கள் வெல்லும் வாய்ப்பு

**UK-550*/=Kg**
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(சி-7779)



## V2 TRAVELS

தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி



அதிஸ்ட எண் - N/13JAN17/1371/152

**சி.தேவராசா**
கரணவாய், கரவெட்டி

இவர் 13-01-2017 அன்று எமதூடாக 1கிலோ பொதி ஜேர்மனிக்கு அனுப்பினார்

நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல
வாய்ப்புக்களுக்கு: **0768226240**



# AC BIG SALES

AIRCONDITIONER, TV'S SPECIAL OFFERS

விசேட விலைக்கழிவில்

**Split Wall Mounted AC With Instalation**




| Btu | Media | Panasonic |
|---|---|---|
| 9000 BTU | 58,500/= | 79,500/= |
| 12000 BTU | 62,500/= | 86,500/= |
| 18000 BTU | 78,500/= | 115,000/= |

**PORTABLE AC**
**RS: 59,500/=**



நீங்கள் விரும்பிய இடங்களிற்கு கொண்டு சென்று பாவிக்க கூடியது.
விசேட விலைக்கழிவுடன் Kings Electronics (Pvt) Ltd நிறுவனத்திடம் இருந்து இன்றே வாங்கிச் செல்லுங்கள்

12000 BTU

3 YEARS WARRANTY
**LED TV'S**

| | |
|---|---|
| Samsung 32" | -29900 |
| Hisence 32" | -24500 |
| Sony 40" | -67900 |
| Hisence 24" | -17900 |
| Tcl 32" | -21900 |
| Panasonic 32" | -28500 |



SONY DVD PLAYER
ONE YEAR WARRANTY
RS 5250/=



STAND FAN 3190/=

**Best Deal**
AIRCONDITIONER

**KINGS ELECTRONICS(PVT) LTD**

12A, Point Petro Road, Jaffna
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

021-4546699 mykings.lk kingsjaffna

(C-7785)


# மரண அறிவித்தல்



## வயிரவி தவராசா (ராசா)

திக்கம்புரை வயாவிளானை பிறப்பிடமாகவும், விளையாட்டரங்க வீதி கோப்பாயில் வசித்தவரும், கோப்பாய் பூதர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவி தவராசா (ராசா) நேற்று (14.03.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரவி -சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சுதந்திரஅரசியின் அன்புக் கணவரும், ஜினிஸ்ரனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராசம்மா, கதிரவேலு, மகாலிங்கம், சரஸ்வதி, ஆனந்தராசா, செல்வலிங்கம், முத்துலிங்கம் ஆகியோரின் சகோதரனும், திருநாவுக்கரசு, மங்கயற்கரசி, பூவையற்கரசி, தவதிலகராஜா, ஜெயதிலகராஜா, இலக்குணகரசி, இந்திரகரசி, மயாதவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோப்பாய் பூதர்மடத்தில் அவரது இல்லத்தில் இன்று (15.03.2017) புதன்கிழமை மதியம் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதர்மடம்,
கோப்பாய். (8322)

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.